ஒரு மகானின் அருமை பெருமைகளை மற்றொரு மகானே அறிந்து விவரிக்க இயலும் என்ற கூற்றுக்கேற்ப சிறந்த ஆன்மிகவாதியும், தேசிய வாதியும், கவியோகியும் சுத்த ஸன்மார்க்கவாதியும், ஒரு மனிதனுக்குரிய பூரண ஆயுட்காலம் என்கிற நூறு ஆண்டுகளுக்கும் மேல் வாழ்ந்து பல அரிய பணிகள் செய்த சுவாமி சுத்தானந்த பாரதியாரின் திருவாய் மொழிகளை மேற்கொண்டு பார்ப்போம்.

**- டாக்டர் திருமதி அனந்தகிருஷ்ணா**



**மேல்மாயில் அதிஷ்டானம்**



ஓம் தத் ஸத்

ஓம் சுத்த சக்தி

# விலக்ஷண லக்ஷணம்

மேல்மாயிலில் சமாதி கொண்ட

ஸ்ரீமத் விலக்ஷணானந்த சுவாமிகள் தினத்தில்

## கவியோகி சுத்தானந்த பாரதியார் அருளிய

## திருமொழிகள்

### மகான்

நாம் இன்று ஒரு மகானை நினைக்கிறோம். அவர் நமது காலத்தில் நம்முன் வாழ்ந்தவர். அவர் 1945 வருஷம் வரையில் நம்முடன் இருந்தவர். அவரிடம் அருள்பெற்ற சாதகர் பலர் இங்கே இருக்கிறார்கள்.

**ஸ்ரீ விலக்ஷணானந்த சுவாமிகளுடன்** மிக நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. 1916–ம் ஆண்டு அவர் சிவகங்கைக்கு வந்தார். அப்போது நான் ஆசிரியராய் இருந்தேன். எங்கள் தெருக்கோடியில் தெப்பக் குளத்தருகே இராமகிருஷ்ண மடம் நாட்டி, அதன் மாடியில் தியானம் செய்து வந்தேன். மடத்தில் ஏராளமான வேதாந்த நூல்கள் இருந்தன. மாலைதோறும் அவற்றை ஒருவர் படிப்பது நான் விளக்குவது வழக்கம்.

அதிகாலை 4.30 மணிக்கு கீதை உபநிஷத்துப் பாராயணம் நடக்கும். ஓய்வு நாட்களில் பாரதம், பாகவதம் படிப்பதுண்டு. சனிக்கிழமைதோறும் அங்கே பஜனை நடக்கும். அதில் எனது கீர்த்தனங் களையும் பாடுவதுண்டு. மார்கழி மாதம் நாம சங்கீர்த்தனம் செய்வோம்; அங்கே வீண்பேச்சே இராது. அருட் பாடல்களைப் படிப்போம் அல்லது ஜெபம் செய்வோம். ஒருநாள் மாலை 6 மணிக்கு நம்மாழ்வார் பாசுரம் ஒன்றை விளக்கிக் கொண்டிருந்தேன்.

அந்தப் பாசுரம் பின் வருமாறு :

## தேனும் பாலும்

**யாவையும் யவரும் தானாய் அவரவர் சமயந்தோறும்**
**தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான்**
**உணர்வின்மூர்த்தி**
**ஆவிசேர் உயிரி னுள்ளான் யாதுமோர் பற்றில்லாத**
**பாவனை அதனைக்கூடில் அவனையுங் கூடலாமே...**

இந்த ஒரு பாசுரத்தில் அத்யாத்ம யோகம் முழுதும் அடங்கியுள்ளது. எல்லாச் சமயங்களின் சாரமும் இதுவே. முதல் இரண்டு வரிகள் பரம்பொருளின் தடஸ்த லட்சணத்தை விளக்கும். எங்கெங்கு பார்த்தாலும் எவ்வுயிருக் கவ்வுயிராய் அங்கங்கு அவன் இருக்கிறான். அவன் உள்ளத்தான், உலகத்தான், அவன் ஜீவாத்மா, விஸ்வாத்மா, சர்வாத்மா, பரமாத்மா உயிருள்ள சித்தும் அவன்; உயிரற்ற சடமும் அவன். கயிற்றில் மணிகள்போல், அவனது சைதன்யத்தில் உலகெல்லாம் சேர்க்கப்பட்டுள்ளன. அவன் மனிதர் கண்ட சமயங்களின் உயிராய் உள்ளான். ஆனால், எந்தச் சமயத்திலும் பற்றில்லாமல் தானே தானாக தாக்கற்றிருக்கிறான். வாய் மனம் கடந்த அந்தப் பரம்பொருளை எழுதிக் காட்டவோ, சுட்டிக் காட்டவோ, சொல்லிக் காட்டவோ முடியாது. உள்ளுணர்வால் சுத்த சக்தி சைதன்யமாகவே அதை அறிய முடியும். அதனாலேதான் உணர்வின் மூர்த்தி என்றார் ஆழ்வார். அதை உணர்வது எப்படி? அடுத்த இரண்டு வரியில் சாதனம் சொல்கிறார் ஆழ்வார்.

ஒவ்வோர் உயிருள்ளும் அவன் அந்தர்யாமியாக உள்ளான்; பந்தில் காற்றுப்போல் அவன் இருக்கிறான்; விளக்கில் சுடர்போல் இருக்கிறான்; பற்றற்ற ஜீவசாட்சியாய் இருக்கிறான். சினிமாத் திரையில் விழும் வெண்ணொளி விளக்குபோல் இருக்கிறான்; கூடஸ்தனாய் இருக்கிறான். அவனை அடையும் வகை என்ன? **"அற்றது பற்றெனின் உற்றது வீடு. மற்றுப் பற்றில்லாமல் அவனருளையே பற்ற வேண்டும்"** அதுதான் பிரபத்தி மார்க்கம். எல்லா மனோ தர்மங்களையும் விட்டு, என்னையே சரண்புகு. என்னையே நம்பு, என்னை நினை. என்னையடைய முயலு, என்னைப் பணி, எதைச் செய்தாலும் எனக்கே அர்ப்பணி, எனக்கு



உகந்ததைச் செய், நான் உன்னை மாசற உய்விப்பேன் என்பதன் கருத்தும் இதுவே. **"யத் பாவம் தத் பவதி"** நினைப்பின் உருவே நிசமாகும். இறைவனைத் தவிர வேறொன்றிலும் பற்றில்லாத அனன்ய பாவனை வேண்டும். அது கூடினால், அவனான சிவனை ஹரியைக் கூடலாம் என்கிறார் ஆழ்வார்.

நான் இப்படி விளக்கும்போது, அங்கே ஒரு மணிக்குரல் கேட்டது. **"பாவனை - அதனைக் கூடில்"** என்பதில் ஒரு சூட்சமம் உள்ளது. "... ... ..." வரவேண்டும் இப்படி பெரியவாள் என்று வணங்கி வரவேற்றேன். அவரைக் கண்டதும் எனக்கு அளவற்ற அன்பு பொங்கியது. இப்படி வரவேண்டும், விளக்க வேண்டும் என்று இருக்கை அளித்தேன். அவர் நாணப் புன்னகையுடன் என்னருகே அமர்ந்து, சரமாரியாகப் பொழிந்தார். பற்றற்ற பாவனை **"அது"** ஆகிய **"தத்"** என்னும் ஆத்மாவைக் கூடினால் **தத் த்வ மஸி** என்ற மந்திர சித்தி உண்டாகும். ஆத்ம தரிசனம் ஆகும். ஆத்ம தரிசனத்தால் பரமாத்ம ஐக்கியம் உண்டாகும். அவனையும் கூடலாமே என்பதில் பரமனான அவன், அவனைக் கூடும் ஜீவன், கூட்டுவிக்கும் பற்றற்ற பாவனை ஆகிய மூன்றும் விளங்கும் இதுதான் வைஷ்ணவ சித்தி; இதுவே ஆழ்வாராதிகள் அடைந்த முக்தி நிலை என்று அவர் அழகாக விளக்குகிறார். இதைத் தொடர்ந்து இன்னும் இரண்டு அரிய பாசுரங்களின் விளக்கமும் எழுந்தன. ஒவ்வொருவரும் இந்தப் பாசுரங்களைப் பாடம் செய்ய வேண்டும்.

**நன்றாய் ஞானம் கடந்துபோய், நல்லிந் திரிய மெல்லாமீர்த்து**
**ஒன்றாய் கிடந்த அரும்பெரும் பாழ் உலப்பி லதனை**
**யுணர்ந்துணர்ந்து**
**சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றுக்களைந்து**
**பசையற்றால்**
**அன்றே அப்போ தேவீடு அதுவே வீடு வீடாமே.**
**யானும் தானா யொழிந்தானை, யாதும் யவர்க்கும்**
**முன்னோனை**
**தானும் சிவனும் பிரமனு மாகிப் பணைத்த தனிமுதலை**
**தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்தித்தென்**
**ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே.**

மங்களஹாரதி ஆனது. அவர் **"பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்; நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றும் இல்லை கலியும் கெடும் கண்டு கொண்மின் கடல் வண்ணன் பூதங்கள் மண் மேல் வலியப் புகுந்து இசைபாடி ஆடியுழி தரக் கண்டோம்"** என்ற பாசுரத்தை மிக இனிமையாகப் பாடினார். எல்லோரும் அவரை மரியாதையாகப் போற்றினர்.

நாங்கள் தேனும், பாலும் போல ஒன்றானோம். இராம கிருஷ்ண மடத்தின் மாடியிலேயே இருவரும் வசித்தோம். இருவரும் சேர்ந்தே உண்டோம்; தியானித்தோம்; படித்தோம் பாடினோம்; பரவசமானோம்.

## கலந்தொழிந்தோம்

விலக்ஷணானந்தர் பெரிய மேதாவி; வரம் பெற்ற பேச்சாளர்; தியான சீலர்; தலை நிமிர்ந்த தைரியசாலி; வைராக்கியச் செல்வர்; கவலையற்ற துறவி; கருணையுள்ள நண்பர். அவர் நம்மாழ்வாரின் ஞானமும், ஆண்டாளின் பக்தி பரவசமும், குலசேகரரின் வைராக்கியமும், உடையவரின் வாக்கும், சங்கரரின் வேதாந்தப் பொலிவும் ஒருங்கே படைத்தவர். யோக வாசிஷ்டத்தில் அரிய ஆராய்ச்சி உடையவர். திருவாய்மொழிக்குப் புதிய கருத்து உரைப்பார்; உலகறிந்த உள்ளறிஞர்; கண்ணனன்பர்; கண்ணா என்றால் பரவசமாவார்; நின்ற குன்றை நெடுமால் என்பார்; திங்களை ஒளி வண்ணன் என்பார்; கரும்பெரும் மேகத்தைக் கண்டால் கண்ணன் என்று பரபரப்பார்; மாட்டைக் கண்டால் மாதவன் என்பார்; **"யானே நீ, என் உடமையும் நீ"** என்னும் பிரபன்னர்.

அவர் மெல்லிய ஒல்லிய வடிவினர்; நீண்ட உயரம்; மாநிறம். ஆனால் அவர் உள்ளம் அழுத்தமானது; அது திருமங்கை உள்ளம்; நாராயணத் துடிப்புள்ளது. அவர் இல்லறத்தில் இருந்தது மிக நல்லதே. இல்லறங் கண்டு துறவரம் பூண்டதால் அவரது மனவுறுதி அசைக்க முடியாமல் இருந்தது. அவர் பதினெட்டு வயது மனைவியையும், ஒரு பெண் மகவையும் விட்டு ஓடி வந்தார். அவரை உறவினர் துரத்தி வந்தனர். போலீசை விட்டு மிரட்டினர். சாதுக்களை அறியா மூடர் அவர் மேல் என்னென்னவோ கதை



கட்டிவிட்டனர். எந்த இடும்பை வந்தாலும் அவர் சமாளித்துக் கொண்டு சாந்தமாகவே இருந்தார். ஒரு சமயம் மேலூரில் உறவினர் வந்து பற்றிக் கொண்டு வீட்டிற்கு வர வலியுறுத்தினர். விலக்ஷணானந்தர்

**"தானும் யானும் எல்லாம் தன்னுளே கலந்தொழிந்தோம்**
**தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்தே"**

என்று சொல்லி நிஷ்டையில் ஆழ்ந்தார். சிவகங்கையில் அவர் ஒரு மாதம் என்னுடன் இருந்தார். அவர் கண்ணனின் அவதார ரகசியத்தைப் பாட்டாக எழுதிப் பாடினார். அவருடன் பேசுவதே இன்பம், அவர் நகைத்ததும்ப, உள்ளங்குளிர, இனிய தமிழிற் பேசுவார். அவர் சொல்லும் உதாரணக் கதைகள் சுவை ததும்பும். விலக்ஷணானந்தர் வறட்டுத் துறவியல்லர்; அவர் அருங்கலைச் செல்வர்; அரசியல் ஞானி; இந்திய சுதந்திரத்தில் அவருக்கு ஆர்வமுண்டு; அவர் காந்தீயத்தை ஆதரித்து பேசினார். அவர் ஒரு மணி பேச வேண்டியதை ஐந்து நிமிடத்தில் விரைந்து கொட்டுவார். அவர் சொற்கள் சுண்டிப்பார்த்த செடிப் பவுன் போல் இருக்கும்; ஒன்றுகூட சோடை இராது; அவரை வாதத்தில் வெல்ல யாராலும் முடியாது. இருவரும் பெருமாள் கோவிலுக்குச் சென்றோம்; அங்கே விலக்ஷணானந்தர் **நானேயோ தவம் செய்தேன், சிவாயநம எனப்பெற்றேன்** என்ற திருவாசகத்தைப் பாடி வணங்கினார். ஒரு வைணவர் இது பெருமாள் கோவில் சிவன் கோவிலில்லை என்று சீறினார். சுவாமிகள் ஒருவனே போற்றி என்ற திருவாசகத்தைப் பாடி ஹரியும் சிவனும் ஒன்றே என்று நம்மாழ்வார் பாசுரத்தைப் பொழிந்தார். **யானும் தானாய் ஒழிந்தானை, யாதும் யவர்க்கும் முன்னோனை தானும், சிவனும், பிரமனும் ஆகிப்பணைந்த தனிமுதலை - நளிர்மதிச் சடையன் என்கோ** என்று நம்மாழ்வார் சொல்லும்போது நாம் வேற்றுமை பார்ப்பானேன். ஆக்கும்போது அயன்; காக்கும்போது விஷ்ணு; நீக்கும்போதும் அருளும் போதும் சதாசிவன் என்று விளக்கினார்.

சிவன் விஷ்ணு என்ற பேதமே தலை காட்டாமல் அவர் பரம்பொருளை பரிசுத்த சக்தியாக வழிபட்டார். அவர் விபூதி பூசுவார்; நாமம் போடுவார்; இரண்டும் இல்லாமலும் இருப்பார். வெளி வேடங்களில் அவருக்கு நம்பிக்கை இல்லை. அவர் திரு

வாசகமும் பாடுவார்; திருவாய் மொழியும் பாடுவார். அவர் காவி யும் அணிவார்; வெள்ளுடையும் அணிவார்; கோவணத்துடனும் திரிவார்.

## ஜலதரங்கக் குயில்

ஒருநாள், "இந்தக் குயிலும், அந்தக் குயிலும்" என்றொரு சொற்பொழிவு ஆற்றினார். ஆண்டாள் குயிலயும், மாணிக்க வாசகக் குயிலையும் அகவினார்.

**தேன்பழச் சோலை பயிலும் சிறுகுயிலே யிதுகேள் நீ,**
**வான்பழித்து இம்மண்மிசை புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்**
**ஊன்பழித்து உளம் புகுந்தென் உணர்வதுவாய் ஒருத்தன்**
**மான்பழித் தாண்ட மென்னோக்கி மணாளனை நீவரக் கூவாய்;**

இது மாணிக்கவாசக் குயில், தேக வாசனையற்ற சுத்த சக்தி சைதன்யமே தன் உயிர் மணாளன்; அவனைக் கூவ குயிலை வேண்டுகிறார் மாணிக்கவாசகர். ஆண்டாள் நெஞ்சக் கூட்டில் உயிர்க்கிளி கோவிந்தா என்று கூவும். ஆண்டாள் பூர்வ ராகத்தில் மனக்குயிலை வேண்டுகிறாள் :

**என்புருகி இனவேல் நெடுங் கண்கள் இமைபொருந்தா பலநாளும்**
**துன்பக் கடல்புக்கு வைகுந்தம் என்பதோர் தோணி பெறாது உழல்கின்றேன்;**
**அன்புடையாரைப் பிரிவுறுநோய் - யதுநீயும் அறிதிகுயிலே**
**பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப் புண்ணியனை வரக்கூவாய்**

இப்பாசுரங்களில் உள்ள உருக்கத்தையும், சொல்லிப் பொருட் சுவைகளையும் அவர் விளக்கி, மூன்று மணி நேரம் பேசினார். அவர் குரல் ஜலதரங்கக் குயில்போல் இருந்தது.

## பக்தி பரவசம்

விலக்ஷணானந்தர் குலசேகரர் பாசுரங்களில் பற்று கொண்டவர். முகுந்தமாலை இனிது பாடுவார்; அத்துடன்



**தருதுயரா தடாயேல்** என்ற விற்றுவக் கோட்டம்மான் பதிகத்தை பாடிப்பாடி உருகுவார். ஒரு தடவை இருவரும் திருப்பதியில் சந்தித்தோம். ஏழுமலையான் தரிசனம் ஆனது; இருவரும் பாண்டவ தீர்த்தத்தை நோக்கிச் சென்று தியானத்தமர்ந்தோம். சுவாமிகள் எனது நெஞ்சில் குலசேகரர் புகுந்துள்ளார் என்று பாடத் தொடங்கினார். **"ஆனாத செல்வம், ..... வேண்டேன், தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில் மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே"** - சைதன்ய பரவசத்துடன் அவர் "அவன் என் தாய், என் புகல், என் மருத்துவன், அவன் வாளால் அறுத்துச் சுடினும் எனக்கு நலமே. என் காதலன் என்ன செய்தாலும் அவன் அன்பை மறவேன். அவன் ஒளியே என் மனத் தாமரையை மலர்த்தும்; உலகின் மின்மினியால் அது மலராது என்றெல்லாம் உருக்கமாகப் பேசினார். சில சமயம் அவர் தன்னை இராதையாக பாவித்து உருகுவதுண்டு. ராதே ராதே ராதே ராதேரா, நான் உன் அடைக்கலம் என்பார்.

## ஞானம் பழுத்தது

இவ்வாறு பக்திப பரவசத்தில் தொடங்கியது அவரது யோகம். தீவிரமான யோகத்திற் புகுந்து ஞானம் பழுத்தது. அவரை மீண்டும் 1921ம் ஆண்டில் குளித்தலையிற் கண்டேன்; அங்கே அவருக்கு அரிய நண்பர்கள் இருந்தனர். அப்போது தான் நான் ஆசிரியர் வேலையைவிட்டு மகாத்மாவுடன் சேர்ந்தேன். அந்தக் காலம் சுவாமிகள் ஏகாந்தமான உறையுள்ளமைத்து நிட்டை கூடியிருந்தார்; பெரும்பாலும் மௌனம் பேணினார். அவரது அன்பு அறிவாகக் கனிந்தது; புத்தக ஞானம் வித்தக ஞானமானது; படிப்பறிவெல்லாம் நடிப்பறிவே பார்த்த அறிவே பழுத்த அறிவு; காகித நோட்டு காலத்துடன் சரி. சொக்கத் தங்கத்திற்கு என்றும் மதிப்பு உண்டு. யோகம் என்றால் ஆசனமன்று; மூச்சைப் பிடித்தலன்று; **உள்ளத்தானுடன் ஏகமாதலே** யோகம்.

அவரை நான் நாட்டுப் பணிக்கு அழைத்தேன். "அது தானே நமது பணி; மனதை வெளியே அலையாமல் உள்ளே நாட்டும் பணியே நாட்டுப் பணி, மற்றதெல்லாம் நாட் *(NOT)* பணி என்றார். அவர் என் கையைப் பற்றிக் கொண்டு, அறைக்குள் தியானித்தார். இருவர் குண்டலி சக்தியும் ஆதார கமலங்களில் விளையாடியது.

இந்த பிரம்மாகாரத்தை அனுபவிப்பதே இன்பம்; இந்த பரிசுத்தமான சக்தியை உபாசிப்பதே நிஷ்டை; நிஷ்டையிலிருந் தால் மின்சாரம் சுற்றிலும் பரவி, செய்ய வேண்டியதைச் செய்யும். நிட்டையை விட்டு குட்டையில் விழுந்தால் சுகமுண்டா? பேசாமல் இரும், பேச வேண்டிய போது பேசலாம் என்று என்னையும் அழைத்து தம்முடன் வைத்துக் கொள்வார் ஞானி.

சுவாமிகள் சிறிதளவே உண்பார்; அவருக்கு எக்குறையும் இல்லை; அவர் எதையும் கேட்க மாட்டார். உணவு தேடி வரும் – அள்ளியள்ளி எதிரே இருப்பவருக்கு வழங்குவார்.

## பாரத சக்தி

1923ம் ஆண்டு முதல் அவர் காந்தீயம் பற்றிச் சண்டமாருத மாகப் பேசினார். மதுரையில் அவர் பேச்சைக் கேட்க பெருங் கூட்டம் கூடும். அவருக்கு ஒற்றர் தொல்லையும் இருந்தது; எனக் கும் அதிகமாய் இருந்தது. நாங்கள் மனச்சாட்சியை தைரியமாய்ப் பின்பற்றியே நடந்தோம். நான் ஐயருடன் குருகுலம் நடத்திய போது ஒரு தரம் சுவாமிகளைக் குற்றாலத்தில் பார்த்தேன். அப்போது எனது பாடல்களை அவர் பாராட்டி, "பாரத சக்தி பரமானுபவ வேதம்" என்று ஆசி கூறினார். பாரத சக்தி இரண்டு காண்டங்களை அவர் கேட்டு மகிழ்ந்தார்.

அதன் பிறகு என் வாழ்க்கை தீவிர மௌன வழியே சென்று யோகத் தனிமையில் ஆழ்ந்ததால் சுவாமிகளை நான் சந்திக்க முடியவில்லை. ஆயினும், என் உள்ளத்தின் உயிர் துடிக்குமட்டும் பரமஞான சிகாமணியான அவரை மறக்க முடியாது.

## விலக்ஷணனம்

"விலக்ஷணம்" என்றால் தெளிவான மாசற்ற தெய்வத் திருவழகு பிரம்ம லக்ஷணமான பிரக்ஞானம் என்பதாகும். அது சுத்த சக்தி சௌந்தர்யமே. அது உள்ளத்தில் ஒளிரும். அந்த சுத்த சக்தி ஜோதியழகில் இன்புறும் பரமாத்ம தரிசனம் பெற்றவரே விலக்ஷணானந்தர். அவருக்கு மேல்மாயிலில் திருமடம் கட்ட வேண்டும். மேல் மாயில் மற்றொரு சிர்திபோல விளங்க வேண்டும். விலக்ஷணானந்தர் பாரத நாட்டுப் புண்ணிய புருஷரில் ஒருவர். வாழ்வையெல்லாம் பரமாத்ம யோகம் ஆக்கிய புனிதர். அவருக்கு



பல செல்வச்சீடர்கள் உண்டு. அவர்கள் வீட்டில் அவர் வெல்வெட்டு மெத்தையில் சாய்ந்து அரசு செலுத்தினார். அவர் விரும்பியிருந் தால் இலட்சம் இலட்சமாகச் சேர்த்திருக்கலாம். ஆனால், அவர் கையில் வந்த பணத்தை உடனுடன் தருமம் செய்தார். எத்தனையோ ஏழை மாணவருக்கு உதவினார். எத்தனையோ தியான நிலையங்கள் கட்டினார். சில கிராமங்களில் அவர் அமைத்த தியானப் பீடங்களைக் கண்டேன்.

## யோகமே உய்வு

விலக்ஷணானந்தருக்கு நாம் செய்ய வேண்டிய கடமை நிரம்ப உண்டு. அது நமது நன்மைக்கே செய்ய வேண்டும். அவர் பெருமை அழியாப் பெருமை. சாதி மதங்களெல்லாம் சத்தற்றுப் போயின. இந்தக் காலம் **யோகமே வாழ்வாக வேண்டும்**. **யோகம்** என்பது ஒருவகை உள்ளொருமையால் உலகொருமை வரும். உள்ளொன்றினால் உலகொன்றும் ஒற்றுமைக்கு வழி **யோகமே**. ஞான யோகம் தன்னைக் காட்டும்; பக்தி யோகம் தலைவனைக் காட்டும், அன்பைத் தீவிரமாக்கும்; கரும யோகம் இறைவனுக்கே ஆளாகி, உலகில் நன்றாக வாழச் செய்யும்; சுத்த யோகம் அறிவும், அன்பும், ஆற்றலும், மனத்திட்பமும், வினைத் திட்பமும் வளர்த்து, மானிட வாழ்வை தெய்வ வாழ்வாக்கும். உள்ளத்தில் பக்தியும், புத்தியில் ஞானமும், உடம்பில் கர்மமும், வைராக்கியமும், வாழ்வில் தூய நல்லின்பமும் நல்கும். இதை விலக்ஷணானந்தர் சர்வாத்ம யோகம் என்பார். இந்த யோகத்தைப் பயில்வது மிக எளிது. இதற்காக ஊர்தோறும் யோக சமாஜம் காண வேண்டும். மேல்மாயில் விலக்ஷணாஸ்ரமமும் யோக சமாஜம் ஆகுக. உலகமெல்லாம் சுத்தான்ம நேயத்தில் வாழும் யோகம் இங்கே விளங்குக.


யோக சமாஜம் சாதிமத பேதமில்லாமல் தூய உள்ளன்பர் கூடும் ஆன்ம நிலையம், ஆனந்த நிலையம். அதில் பக்தி, ஜபம், தியானம், சங்கீர்த்தனம், சாதுவாசம், சத் கைங்கரியங்களுக் குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மாலைதோறும் அன்பர் கூடி, அங்கே ஜபம், சங்கீர்த்தனம், பாராயணம், தியானம், மங்கள ஆரத்தி இவை செய்ய வேண்டும். சாதுக்கள் வந்தால் அவர்களை அங்கே உபசரித்து, உபதேசம் கேட்கலாம். இதனால் ஆத்ம லாபம் உண்டு; ஆருயிர்க்கு உய்வுண்டு; ஊருக்குப் பெருமையுண்டு.

சுவாமிகள் மனத்திற்கும் மருத்துவர்; உடலுக்கும் மருத்துவர். அவர் வைத்திய நிபுணர். அவர் மனோ வியாதிக்கு ஏராளமான மூலிகை தந்தார். அதை உலகிற்குத் தரவேண்டும்.

**அன்பர் முன் வாருங்கள்!**
**யோக சமாஜத்தில்**
**விலக்ஷண ஜோதி துலக்குவோம்!!**

இஃது :
11–12–1956ல் நடைபெற்ற 11–ம் ஆண்டு
குரு பூஜையன்று நிகழ்த்திய தலைமையுறை
– யோகி சுத்தானந்த பாரதி

ஓம் சுத்த சக்தி



**ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜி**



# பத்தாண்டி

ஒருவண்டியேகனடி யுற்றாருமில்லையடி
கருவண்டியில்லாண்டி காண்பவர்க்கும் காணாண்டி
யிருவண்டியில்லவண்டி யெப்போதுஞ்சின் மயண்டி
அருவண்டியானவண்டி யாகாதவம்பரண்டி. 1

சொல்லாலுங்காணாண்டி சொற்பெரியநா தனடி
வெல்லாமனிற்பவண்டி வேதமுதலானவண்டி
யெல்லார்க்குமெட்டாண்டி யேகாந்தமானவண்டி
நில்லாண்டி நில்லாண்டி நிர்க்குணமாமவன் தாண்டி. 2

அவன் தாண்டியிவன்தாண்டி யப்புறமுந்தான்றாண்டி
சிவன் தாண்டியரி தாண்டித் திரிபுரத்தையெரித் தாண்டிப்
பவந்தாண்டி யெனைமாட்டிப் பக்குவமாயானவண்டி
நலந்தாண்டி காணாண்டி நாரணனும் போனான்டி. 3

எல்லார்க்குமுள்ளவண்டி யேகமுதலானவண்டி
சொல்லாமற்சொன்னவண்டி சோகாதியற்றவண்டி
கல்லாலிலானவண்டி காண்பதற்கு மாட்டாண்டி
பொல்லாதயோகனடி போக்கிலியாமவன்தாண்டி. 4

ஆட்டுவண்டியகமுழுது மாகாமனிற்பாண்டி
மாட்டுவண்டிமாந்தரெலா மனமுதலாங்கரணமதை
வாட்டுவண்டிவழிதாண்டி வழிதெரியக்காட்டுவண்டி
எட்டுவண்டியில்லாண்டி யீசான நாயகண்டி. 5

அன்பினுருவானவண்டி யானிரையுமானவண்டி
தென்புலத்தின்மாந்தருக்குத் தேற்றமிகவானவண்டி
நன்பதியை நாடுவண்டி நல்லவர்க்கு நல்லவண்டி
சொன்மாலை கற்றவண்டி சொக்கலிங்கமானவண்டி. 6

வாராண்டி வாராண்டி வந்தநிலை வந்தவண்டி
தாராண்டி தாராண்டி தற்பதத்தை யென்றனக்கு
வேறாண்டி வேறாண்டி வெட்டவெளிக் கப்பாலாய்க்
கூறாண்டி நிற்பாண்டி குக்குடத்தைக் கொன்றவண்டி. 7

அஞ்சுவயதான வண்டி யாமுழுதுங்கார்த்த வண்டி
கஞ்சனையுங் கொன்றவண்டி காண்டீபற்கான வண்டி
வஞ்சகமே கொண்டவண்டி வாலவயதான வண்டி
செஞ்சரணங்கொண்டவண்டி சேதனமுமவன்தாண்டி. 8

வேதமயமானவண்டி வேகமன தாட்டுவண்டி
நாதமுடியானவண்டி நாலுங்கடந்தவண்டி
கீதநிதியானவண்டி கின்னரமும்பாடுவண்டி
சாதனையுமற்றவண்டி சகசநிலையானவண்டி. 9

தொட்டியத்தினானவண்டி தோன்றலெனக்கானவண்டி
எட்டியறியாதவண்டி யேடறுத்து நிற்பவண்டி
மட்டடங்காக்காளை வண்டி மாறாதகுளக்குடியி
னிட்டமுடன் வந்தவண்டி யெல்லாமுமானவண்டி. 10


(ஓர் நாள் ஸ்வாமிகள் தொட்டியத்தருகிலுள்ள அனலாடி என்ற சிவாலய தரிசனம் செய்து திரும்புங்கால் ஒரு பக்தர் ஒரு வண்டி வருகிறது என்றார். அதையே அடிப்படையாகக் கொண்டு "ஒரு வண்டி யேகனடி" என்ற முதலடியை ஆரம்பித்து பத்து பாசுரங்களையும் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

## 1 வது நாள்



* சிங்கம், புலி, கரடி, யானை இவைகள் வசிக்கக் கூடிய மஹா பயங்கரமான நிர்மானுஷ்ய வனாந்திரத்தில் தனிமையாக வசித்துக் கொண்டு உலக ஆசையை ஜெயிப்பதைக் காட்டிலும் பிரபஞ்ச மயக்க அனித்திய வஸ்துக்கள் நிறைந்த பெரிய பட்டணங்களின் நடுவில் பல ஜனங்கள் மத்தியிலிருந்து கொண்டு ஜெயிப்பது மஹா விசேஷம்.
* மன சாட்சிக்குச் சம்மதமில்லாமல் கட்டுப்பாட்டுக்காகச் செய்யப்படுகிற எந்தக் காரியங்களும் நிலையானதும் உத்தமமானதுமல்ல.

## 2 வது நாள்



* ஆரம்பித்த எந்தக் காரியங்களும் பூர்த்தி பெறவில்லையானால் அதனின்றும் விலகிவிட வேண்டும். அல்லது பிரயோபப் பிரவேசம் செய்துவிட வேண்டும்.
* தெய்வத்தை நம்பித் தெய்வ சம்மதமாகச் செய்யப்படுங் காரியங்களையன்றி மனுஷ்யர்களை நம்பி மனுஷ்ய சம்மதமாகச் செய்யப்படுங் காரியங்கள் நிலை பெற மாட்டாது.

## 3 வது நாள்

* உத்தமமான தெய்வீகத் தன்மை பொருந்திய உண்மையுள்ள உறுதியான யாதொரு பிரதிப் பிரயோஜனத்தையும் கருதாத மஹத்தை யுணர்ந்த உபதேச கர்த்தாக்களான பிரஹ்ம ஞானிகள் சஞ்சரிக்காத தேசங்களில் அசுர சம்பத்தோடு கூடியவர்களும் குதர்க்க மார்க்கங்களிற் செல்பவர்களுமான பிரஜைகள் நிரம்பியிருப்பார்கள்.
* இச்சையும் இச்சையின்மையும் இரண்டுமுள்ளதும் இரண்டுமில்லாததும் ஆக நான்கும் இந்த நான்கையுந் தாண்டியதும் இவ்வைந்தும்மில்லாத ஹிருதயத்தையுடையவர்கள் நிர்விகார நிர்விகல்ப ஞானிகள்.

## 4 வது நாள்

* மனத்தோடு மட்டும் அனுஷ்டிக்கக் கூடியது இந்திரியங்களோடு மாத்திரம் செய்யக் கூடியது, சரீரத்திற்குட்பட்ட விவகாரங்களோடும் சிலர்களோடும் பலர்களோடும் சில தூரங்களோடும் அனுஷ்டிக்கக் கூடிய அனுஷ்டான முறைகள் ஈஸ்வர சம்மதமானது, நியாயமானது.
* வெளியில் மட்டும் பற்றை விட்டு உள்ளே பற்றை வைத்துக் கொண்டிருப்பதும் உள்ளே பற்றை விட்டு வெளியில் பற்றை வைத்திருப்பதுமான துறவிகளில் அகத்துறவிக்கு ஆத்ம ஞானமும் புறத் துறவிக்குப் புண்ணியமும் கிடைக்கிறது.

## 5 வது நாள்

* ஒன்றையுங் கருதாத உள்ளத்தில் ஒன்று கருதப்படுமானால் அது சவிகல்ப சமாதி.
* மனத்தாலும் கண்களாலும் பார்க்கக் கூடிய வஸ்துக்களையெல்லாம் பரமாத்மாவாகப் பார்க்காவிட்டாலும் பார்க்க முடியாமற் போனாலும் பரம குருவாகப் பார்க்கிறதினால் பரம பாக்கிய ஸ்தானம் பலிதமாகிறது.

## 6 வது நாள்

* சர்வ வல்லமையுள்ள வஸ்துவும் ஒரு வல்லமையும் இல்லாத வஸ்துவும் பிரஹ்மம்.
* வேகமாக எழுப்பப்படுகிற மனோசங்கல்பங்களை மெதுவாக எழும்படி சாந்தமடையச் செய்து அதையும் உபசாந்தப்படுத்தி அதி ரகஸ்ய வஸ்துவில் கறைந்து விடும்படி செய்வது ஆத்ம பிரஹ்ம யோகம்.

## 7 வது நாள்

* ஏழாயிரந்தரம் பிரணவ முச்சரிக்கிறவரை பிராண வாயுவை பிரம்மரந்திரத்தில் நிலைபெறச் செய்து விட்டால் பரகாயப் பிரவேச சித்தியும் ஆகாயகமன ஆரம்பமும் உண்டாகின்றன.
* எந்தக் காரணங்களைக் கொண்டாவது பிரபஞ்ச ஜீவர்களைப் பிரமிக்கும்படி செய்து ஏமாற்றி விடும் பக்ஷத்தில் சில காலங்களுக்குப்பின் அந்த ஏமாற்றம் ஏமாற்றியவர்களையே வந்தடைகின்றன.

## 8 வது நாள்

* உண்ணும்போது சூரிய கலையின் அக்கினி அம்சத்திலும் உடுக்கும்போது சந்திர கலையின் பூமி அம்சத்திலும் பேசும்போது பூர்ண கலையின் ஜலாம்சத்திலும் உறங்கும்போது சூரிய கலையின் ஆகாச அம்சத்திலும் ஆத்ம விசாரஞ் செய்யும்போது அதி சூக்ஷ்ம கலையிலும் பிராண வாயுவை நிறுத்துகின்றவர்களுக்கு உத்தம புருஷராகிய எம தரும ராஜனுடைய பயமில்லை.
* அன்பு அறிவு அடக்கம் அமைதி ஆதி உயர்வு உபாயம் உறுதி உத்தமம் உதாரம் சாந்தம் சமம் சகஜம் சித்தி சத்தியம் சத்தி ஞானம் தைர்யம் தருமம், நிராசை, பரிசுத்தம் தானம் முக்தி மௌனம் வீர்யம் வேதம் மாறாத ஆனந்தம், தேஜஸ் இவைகளெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றுள்ளவர்கள் மஹாத்மாக்கள்.

## 9 வது நாள்

* உத்தம ஞானி உத்தமயோகி உத்தம பக்தன் இம்மூவருடைய அந்தக்கரண விருத்தியானது ஒரே சத்துவ குணத்தை மீறி அப்பாற் செல்லவில்லை.
* இன்ப துன்பங்களின் முடிவான எல்லை கண்டவர்கள் இவ்வுடம்போடு இந்தவுலகத்தில் வசிக்க ஆசைப்படுவதில்லை,

## 10 வது நாள்

* கிருதயுகத்தில் சத்தியத்தினால் திரேதா யுகத்தில் அன்பினால் துவாபர யுகத்தில் அறிவினால் கலியுகத்தில் அதிகாரத்தினால் மட்டும் அந்தந்த யுக காலங்களிலுள்ள அரசர்களால் ராஜ்ய பரிபாலனம் நடந்து வருகிறது.
* சத்தியத்தில் அசத்தியத்தையும் அசத்தியத்தில் சத்தியத்தையும் கற்பிப்பவர்கள் நாஸ்திகர்கள்.

## 11 வது நாள்

* தெய்வீகத் தன்மை வாய்ந்த ஈஸ்வர சக்தி பொருந்திய சர்வமதங்களுக்கும் உலகங்களுக்கும் பொதுவான சமரஸ சுபாவமுள்ள தேஜோமய வடிவரான ஓர் அவதார புருஷன் தோன்றியிருக்கிறான். ரகஸ்ய ஸ்தானத்தில் வசித்து வருகிறான். கூடிய காலத்தில் தோன்றப் போகிறான்.
* பக்தி யோகத்தால் வசப்படாத மனத்தை மற்ற எந்த யோகத்தாலும் வசப்படுத்த முடியாது.

## 12 வது நாள்

* புண்ணிய தீர்த்தங்களில் அடிக்கடி ஸ்நானம் செய்வதால் நாடி சுத்தி இரத்த சுத்தி சரீர ஆரோக்கியம் இவைகளுண்டாகின்றன.
* எல்லாம்வல்ல இறைவனாகிய எம் பெருமானது பாதார விந்தத்தை இடைவிடாது தியானத்துக் கொண்டிருக்கிற மஹா பக்தர்களது பாத தூளியைச் சிரமேற்றாங்கியிருப்பவர்களுக்குச் செய்யும் கைங்கரியமே பரமோக்ஷ சாதன மென்று உண்மைத் தொண்டர்களுக்குத் தலைவரான நாரத மஹரிஷி பாஞ்சராத்திரத்தில் கூறியிருக்கிறார்.

## 13 வது நாள்

* சுதந்தர கர்மயோக அகங்கார நிச்சயத்தால் கர்மயோகப் பிரயோஜனப் பிராப்தியின் அனுபவமும் பரதந்திர கைங்கரிய நிஷ்காம நிச்சயத்தால் சாந்த குண ஞான பலப் பிராப்தியின் அனுபவமும் சித்திக்கின்றன.
* அஞ்ஞான அனுபவ குணமும் சத்துவ வித்தியா அகங்காரமும் எதார்த்தமான ராஜச விருத்தியும் அதன் அனுபவங்களும் அவதார புருஷர்களுக்குங்கூட உண்டாகின்றன.

## 14 வது நாள்

* தான் பூரண ஞானியானபின் தன்னைப் போல் சகலரும் ஆக வேண்டு மென்றும். தான் அஞ்ஞானியாயிருப்பதால் தனக்குச் சித்த சுத்தியும் ஞானமும் உதயமாக வேண்டுமென்றும் இந்த இரண்டு வித உலக உபகாரிகளும் உத்தமமானவர்கள்.
* மெய்யான விஷயங்களைப் பொய்யாகவும் பொய்யான விஷயங்களை மெய்யாகவும் பிரயோஜனமில்லாத காரியங்களில் விருப்பும் பிரயோஜனமுள்ள காரியங்களில் வெறுப்பும் வேத வாக்கியங்களில் அவநம்பிக்கையும் அசிரத்தையுங் கொண்டவர்களுடைய ஹிருதயத்தில் பூர்வ ஜென்மாந்தர பாபங்களும் அழுக்குகளும் படிந்திருக்கிறதென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

## 15 வது நாள்

* ஒன்றில் ஒன்றற்ற வாதமும் இரண்டில் ஒன்றில்லாத வாதமும் பயனற்றது.
* மனமுள்ளவரையில் மதமும் மதமுள்ள வரையில் மனமும் இருக்கிறது. இரண்டுமில்லாதபோது உண்மை இருக்கிறது.
* கலப்பில்லாத உத்தம ஞானோதயத்தையடைந்தவர்கள் நிருவிகல்ப சமாதியைத் தவிர வேறு ஒன்றுக்கும் உபயோகப்பட மாட்டார்கள்.

## 16 வது நாள்

* சமஸ்த வஸ்துக்களையும் பிரஹ்மமாகவாவது தானாகவாவது பார்ப்பதால் காமக் குரோதாதி பதின்மூன்று குணங்களும் ராகத்வேஷாதி விருத்திகளும் உண்டாவதில்லை.
* சமஸ்த உலக சுகங்கள் நவரசங்களின் சூக்ஷ்ம சுகம் அறுசுவை உணவுகளின் சுகம் ரூபங்களின் சகல சுகம் சர்வ வாசனைகளின் சுகம் சயன மாதர்களது ஸ்பர்ச சுகங்கள் வித்யா சுகம் சஞ்சார சுகம் அஞ்ஞான அபேத சுகம் இவைகளையெல்லாம் வெறுத்தவர்களது ஹிருதயத்தை யோக சுகம் மெல்ல வந்து எட்டிப் பார்க்க ஆரம்பிக்கிறது.

## 17 வது நாள்

* தர்மத்தை மட்டும் ஸ்தாபிக்க வந்த அவதார புருஷர்களுக்கும் மதத்தை மட்டும் நிலை நிறுத்த வந்த ஆசாரியர்களுக்கும் துஷ்டர்களை மட்டுமே அடக்க வந்த ஹம்ஸ பூதர்களுக்கும் உள்ள பிரஹ்ம சுகத்தைக் காட்டிலும் ஒன்றையுங் கருதாததை ஸ்தாபிக்க வந்த உத்தமோத்தமர்களுக்கு அதிகம்.
* எந்தக் காலத்திலும் மாற்றமடையாத மஹான்களது ஹிருதயத்தில் ஏதாவது மாற்றமுண்டாகுமானால் அது சத்திய சங்கல்பமென்று நிச்சயிக்க வேண்டும்.
* அதிக ஜனங்களுக்கு அவாந்தர ஞானத்தை உபதேசிக்கலாமேயன்றிச் சாக்ஷாத் ஞானத்தை ஏகதேச ஜீவர்களுக்கு மட்டும் உபதேசிக்க முடியும்.

## 18 வது நாள்

* உற்பத்தி நாசமில்லாத வஸ்துவினிடமிருந்து உற்பத்தி நாசமுள்ள வஸ்துக்கள் உண்டாயிருக்க காரணமில்லையென்று விசிஷ்டாத்வைதம் கூறுகிறது.
* ஒரே தத்துவ சொரூபத்தில் ஒன்றையும் இரண்டையும் மூன்றையும் அத்வைத த்வைத விசிஷ்டாத்வைத ஆசாரியர்கள் கற்பிக்கிறார்கள்.
* எப்போதும் நம்மைவிட்டுப் பிரியாத வஸ்துவில் பிரியம் வைப்பது ஞானயோகமென்றும் பிரிகிற வஸ்துவில் பிரியம் வைப்பது பக்தி யோகமென்றும் பெயர்.

## 19 வது நாள்

* நம்மால் ஆகக் கூடாத காரியம் பாரமார்த்தீகம் வியாவகாரிகம் என்ற இரண்டிலுமில்லையென்று ஒவ்வொரு ஜீவர்களும் எண்ண வேண்டும்.
* பிரம்மதேவரிடத்திலும் பிராம்மணன் பறையன் கழுதை புழு நாய் இவைகளிடத்திலும் ஒரே பரமாத்மாவைப் பார்க்கிறவன் உத்தம ஞானி.
* பற்றும் பற்றுமில்லாததும் இல்லாத ஹிருதயத்தில் உண்மையான தேஜோ ஞானம் உதயமாகிறது.

## 20 வது நாள்

* நமக்கு ஞானோதயம் ஆகுமோ ஆகாதோவென்றே சந்தேகமுடைய அபாவ ஞானிகளிடமிருந்து ஞானசக்தி வீர்யசக்தி இரண்டும் விலக ஆரம்பிக்கிறது,
* ஜன்மமரணநாசம் மனோதுக்கநிவிர்த்தி உண்மைஞானத்தோற்றம் மனோலய சமாதி சர்வசந்தேகதீரம் பரமாத்மதரிசனம் இவைகள் பொருந்தியுள்ள மதமே வைதீகம்.
* எல்லா யோகங்களும் ஹிருதயத்தோடு முடிகிற படியால் ஹிருதயமுந் தாண்டிய யோகத்தை அடைய வேண்டுமென்று அவதார புருஷராகிய புத்தர் கூறுகிறார்.

## 21 வது நாள்

* அகண்டமான ஒரு வஸ்துவினிடத்தில் அகண்டமல்லாத பல வஸ்துக்கள் தோற்றுவது சகஜம்.
* பரமேஸ்வரரது கிருபையாலும் குருவின் காருண்யத்தினாலும் புருஷப் பிரயத்தனத்தினாலும் பல இடையூறுகளைத் தாண்டிப் பரமாத்மப் பலனை அடையப் போகுந் தருவாயில் பலமான புதிய ஓர் பிரதிபந்தம் வெகு நளினமாக வந்து பொருந்தும்.
* வைதீக ஞான மதத்தின் அனுஷ்டானத்தையே ஏகாந்த சாங்கிய மதம் கற்பிக்கிறது.

## 22 வது நாள்

* நாம் நினைக்கிற ஒவ்வொரு நினைப்புகளும் ஒவ்வொரு ஜென்மங்களென்று மனத்தின் நிஜ சொரூபத்தை உணர்ந்தவர்களும் ஜன்ம மரணங்களின் எதார்த்தத்தை அறிந்தவர்களும் கூறுகிறார்கள்.
* பிரபஞ்ச சிருஷ்டிகளில் உண்மை ஞானிகள் ஆச்சரியப்படத்தக்க வஸ்துக்களும் செய்கைகளும் இல்லவே யில்லை.
* நிவிர்த்தி மார்க்கத்தைப் போதித்துக் கொண்டு வருபவர்களுக்குப் பிரவிர்த்தி மார்க்க போதகர்கள் தடை செய்வது எக்காலத்திலும் தேவ அசுர மனுஷ வர்க்கங்களிலிருக்கின்றன.

## 23 வது நாள்

* மதம் தேசம் வேதம் ஸ்திரீகளின் கற்பு இவைகளுக்கு அபாயமான ஆபத்து உண்டாகுங் காலங்களில் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றக் கூடிய ஆற்றலுள்ள தீவிர தர ஹிருதயமுடையவன் தேவாம்சமுடைய பரம பாக்கியசாலி.
* மத ஸ்தாபனமும் கட்சிப் பிரதி கட்சிகளும் அகங்காரமும் வீண் எண்ணங்களும் அறியாமையிலிருந்துண்டாகின்றன.

## 24 வது நாள்

* பிரஹஸ்பதி பகவான் சிறந்த மஹரிஷிகளது கூட்டத்தில் யாதொரு ஜீவ ஹிம்ஸையுமில்லாத பூஜை, யாகம், ஹோமம், புண்ணிய காரியம், யோகம், ஆஸனம், செய்கை, சிகிச்சை இவைகளைச் செய்வதுதான் உத்தமமென்று வற்புறுத்தி உபந்நியாஸம் செய்திருக்கிறார்.
* உலக சுக துக்கங்கள், செவிக்குக்கூட வராத நிலைமையிலிருந்து கொள்வது ஒரு பெரிய யோகமென்று ஜாபால மஹரிஷி கூறுகிறார்.

## 25 வது நாள்

* அதிரமணியமான ஆச்சரியமுள்ள அபுரூபமுடைய அறுசுவை உணவாதிகளைக் கண்டபோது எவன் மனது பிரம்மித்து ஆனந்தமடைந்து நாவில் ஜலம் ஊறுகிறதோ அவன் யோகம் ஞானம் மோக்ஷம் என்ற வார்த்தைகளை விட்டுவிட வேண்டும்.
* சாதாரண நித்திரையினின்றும் விலகியவர்களுக்கு அதன் மயக்கந் தீரச் சில விநாடிகள் செல்லுகின்றது. பரமாத்ம ஞான நிஷ்டையாகிய நனவில் சுழுப்தி நிலைமையினின்றும் விலகியவர்களுக்கு அதன் மயக்கம் தீருவதேயில்லை.

## 26 வது நாள்

* வாக்கு மனம் சரீரம் என்ற மூன்று காரணத்தையும் பற்றி நிற்பது கரும யோக அனுஷ்டானம். மனம் வாக்கு என்ற இரண்டையும் பற்றி நிற்பது பக்தி யோக அனுஷ்டானம்.
* அதி சூக்ஷ்ம யதார்த்த அந்தரங்க அனுபவமே இன்னதென்று தெரியாதவர் களது கண்களுக்குப் பகிரங்க ஸ்தூல சரீர கரும பேதத்தின் தோற்றங்களே அபரிமிதமாகப் புலப்படுகின்றன.
* பாபத்தைப் போலவே புண்ணியத்தையும் அதர்மத்தைப் போலவே தர்மத்தையும் ஞான யோகிகள் விட்டுவிட வேண்டும்.

## 27 வது நாள்

* பிராம்மண க்ஷத்திரிய வைஸ்ய சூத்திர பிரம்மசரிய கிருஹஸ்த வானப்ரஸ்த சந்நியாசமென்று சொல்லப்படுகிற வருணாஸ்ரமங்களையும் அவற்றின் தர்மங்களையும் கட்டுப்பாடுகளையும் உலகத்திலுள்ள சகல மதங்களின் பந்தங்களையும் கர்மயோக பக்தியோக ஞானயோக மென்ற மூவகை யோகங்களின் நிபந்தனைகளையும், வேதாகம புராண இதிகாச ஸ்மிருதி களிற் கூறப்படுகிற எல்லாவிதக் கட்டுப்பாடுகளையும் ஒருங்கே கடந்தவர்கள் சர்வ சங்க பரித்தியாகிகள்.
* ஒரே கடவுள் ஒரே ஜாதி ஒரே மதம் என்ற தத்துவத்தை உலக முழுவதும் பரவச் செய்ய வேண்டுமென்ற எண்ணங் கொண்ட மஹரிஷிகள் கிரேதா திரேதா துவாபர கலி முதலிய நான்கு காலங்களிலுமிருக்கிறார்கள்.

## 28 வது நாள்

* சத்திய சொரூபமான பரமாத்மாவை அறியாதவர்கள் சத்திய மென்று எதை நிச்சயித்திருக்கிறார்களோ அதை உண்மை ஞானிகள் நிச்சயமில்லாததென்று நிச்சயப்படுத்தி விட்டார்கள்.
* உண்மையை மறைத்துவிடக் கூடிய கற்பனா சாஸ்திரங்களையும் வாக்கியங் களையும் நம்புவது கூடாது.
* எதார்த்தஞானம் சாஸ்திரஆராய்ச்சி போதனாசக்தி ஆகர்ஷணசக்தி இந்த நான்கும் உள்ளவாறு ஒருங்கே அமையப் பெற்றுள்ளவர்கள் போதிக்க தகுந்த அதிகார அவதார புருஷர்கள்.

## 29 வது நாள்

* மனுஷ்யர்களுக்குள் ஒருவருக்கொருவர் அடங்கி நடக்க வேண்டுமென்ற எண்ணமும் அடிமையென்ற சங்கல்பமும் உண்மை ஞான விருத்திக்கு விரோதமாயிருக்கிறது ஈஸ்வர சம்மதமுமல்ல.
* இராத்திரி காலங்களில் அந்நியர்களுடைய பிராணவாயுவைச் சுவாசிப்ப தால் பலவிதமான கனவுகளுண்டாகும்.
* ஞானப்பியாசிகள் ஆத்மாவிற்கும் மனதிற்கும் மத்தியில் யாதொன்றையும் வைத்துக் கொள்ளாத நிலைமையிலிருந்து கொள்ள வேண்டும்.

## 30 வது நாள்

* ஸ்திரீகளுக்குப் பதிவிரதா தர்மமிருப்பதுபோலப் புருஷர்களுக்கும் பத்தினி விரதா தர்மமிருக்கிறது.
* மனமானது நித்தியமான ஆத்ம சொரூபத்தை அடையாமல் அனித்தியமான இந்திரிய விஷயங்களில் செல்வதைச் சூக்ஷ்ம வியபிசாரமென்று மஹான்கள் சொல்லுகிறார்கள்.
* இந்திரியங்களுக்கும் மனதிற்கும் அறிவுக்கும் ஆத்மாவிற்கும் சமீபத்திலேயே அதிக தூரமிருக்கிறது.

## 31 வது நாள்

* அனுஷ்டானங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் உபந்நியாஸங்களுக்கும் அனுபவத்திற்கும் ஒன்றுக்கொன்று தொடர்ந்த சம்பந்தமும் அதிக வித்தியாசங்களுமிருக்கின்றன.
* இளஞ்சூடுள்ள வெந்நீரில் ஸ்நானம் செய்து வருவதால் இந்திரிய ஜெய சாதனமும், குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்து வருவதால் இந்திரியங்களுக்கு அடங்கியிருக்கும் சாதனமும் ஏற்படுகிறது.
* வைதீக மதங்களிலுள்ள வெளிச் சின்னங்களுங் கூடக் கடைசியில் ஆத்ம ஞான சாதனமாக முடிகிறதென்று சில வைதீக மஹரிஷிகள் கூறியிருக்கிறார்கள்.

## 32 வது நாள்

* உண்மை ஞானத்திற்கும் உண்மையல்லாத ஞானத்திற்கும் இடையே சில வுண்மைகளும் பல வுண்மைகளல்லாததும் பல வுண்மையும் சில வுண்மைகளல்லாததும் கொண்ட ஞானங்களிருக்கின்றன.
* சரீரத்திற்குப் புறம்பான வெளி ஆசாரங்களும் உள் சரீர ஆசாரங்களும் ஹிருதய சுத்திக்கும் பிரஹ்ம ஞானத்திற்கும் காரணமாக முடிகிறது.
* வெளித் தோற்றங்கள் உள் தோற்றங்கள் இரண்டின் வாசனைத் தோற்றங்கள் இவைகளில்லாத காலம் நிருவிகல்ப சமாதி.

## 33 வது நாள்

* எந்த விதத்தினாலாவது உலகம் கெட ஆரம்பிக்கும்போது தெய்வத்தின் ஆக்ஞையால் காலம் தேசம் சக்தி மதம் இவைகளுக்கு ஏற்றவாறு பிரபல சக்திகளைக் கொண்டு நித்திய சூர்யர்களும் ரிஷிகளும் அவதாரமாகிறார்கள்.
* விஷ்ணு பிரம்மா சிவன் ருத்ரன் மஹேஸ்வரன் சதாசிவன் கணபதி முருகன் இவர்களைக் காட்டிலும் வீர்யமுள்ள மஹரிஷிகள் சிலரிருக்கிறார்கள்.
* உலக ஞானத்தை விருத்தி செய்து கொண்டு போகப் போகச் சலன ஞானத்திற்கு விருத்தியும் சாந்த ஞானத்திற்கு நாசமும் உண்டாகிறது.

## 34 வது நாள்

* அன்பு துவைதத்தையும் அறிவு அத்வைதத்தையும் நோக்கிச் செல்லுகிறது.
* பிரபஞ்சத்திலுள்ள சகல பர்வதங்களுக்கும் அதிபதி ஸ்தானமாகிய பருவதத்தில் மனுஷ்யர்கள் சென்று வரக்கூடாத ரகஸ்ய இடங்களில் பரத கண்டத்தின் சகலவித க்ஷேமங்களையும் உத்தேசித்துக் கடுமையான தபஸ் செய்து கொண்டு பல யோகிகள் தங்கியிருக்கிறார்கள்.

## 35 வது நாள்

* பிரபஞ்ச அனித்திய விஷயங்களில் இழுத்து விடுகின்ற சாதனங்கள் எதுவாயிருந்தாலும் அடியோடு விட்டுவிடுவது பக்தயோக ஞான அப்பியாசிகளுக்கு அழகு.
* பேத ஞானத்தின் சகுண சொரூபத்தையும் அபேத ஞானத்தின் நிர்க்குண சொரூபத்தையும் முறையே அப்பியாசித்து அனுபவத்திலறிய ஆரம்பித்தவர்களுக்கு அந்தர்முக ஞானப் பிரதிபந்தங்கள் யாதொன்றும் வருவதில்லை.
* தாது புஷ்டி காம விருத்தி இரண்டுக்குமாக ஸ்நானம் செய்வது தாமஸம்.

## 36 வது நாள்

* சரீர ஆரோக்கியம் சரீர சுத்தி இரண்டுக்குமாக ஸ்நானம் செய்வது இராஜசம்.
* நாடி சுத்தி காய சித்தி சித்த சுத்தி இம்மூன்றுக்குமாக ஸ்நானம் செய்வது சாத்வீகம்.
* இராஜஸ தாமஸ குண சம்பந்தப்பட்ட சங்கல்பம் அனுஷ்டானம் கொள்கை மதம் வார்த்தை சமம் சாந்தம் உதாரம் பார்வை.

## 37 வது நாள்

* எந்தவிதங்களிலும் தீர்க்க முடியாத மஹா பாவங்களைச் செய்தவர்கள் அப்பாவங்களினின்றும் விலக வேண்டுமென்றெண்ணினால் பரமாத்மத் தியானத்துடன் பச்சாதாபத்தோடு யதார்த்தமான பிரயோபப் பிரவேசமாவது அக்னிப் பிரவேசமாவது செய்துவிட வேண்டும்.
* பொய் கலப்பில்லாத மெய்யையும் துக்கங் கலப்பில்லாத சுகத்தையும், நஷ்டங் கலப்பில்லாத லாபத்தையும் அசைவு கலப்பில்லாத மனத்தையும் அறிவு கலப்பில்லாத அன்பையும் உலகத்தில் ஒருவரும் எதிர்பார்க்க முடியாது.

## 38 வது நாள்

* பத்து இந்திரியங்களும் மனதும் எப்போது பரமாத்மாவை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கிறதோ அப்போது பாப சமஸ்காரங்கள் மிகவும் குறைவுபட்டுத் தேய்ந்து ஓய்ந்திருக்கிறதென்று தெரிந்து கொள்ள வேண்டும்.
* உவமானப்பிரமாணம் அனுமானப்பிரமாணம் வேதப்பிரமாணம் தெய்வப் பிரமாணம் பிரத்யக்ஷப்பிரமாணம் இவைகளெல்லாவற்றிலும் அனுபவப் பிரமாணமே வாஸ்தவமானது.
* உண்மைகள் தெரிந்து கொள்ளாத மதத்தைப் பற்றிக் குற்றமாவது குணமாவது கூறுவது கூடாது.

## 39 வது நாள்

* உலகத்திலுள்ள ஒவ்வொரு மதத்திலும் புகுந்து அதனதன் உண்மைகளை அறிவதைக் காட்டிலும் நம்பிக்கையுள்ள ஓர் மதத்தின் உண்மையை உள்ளவாறு அறிந்து கொள்வதே விசேஷம்.
* எந்த மந்திரங்களையும் ஸ்வானுபவம் வாய்ந்துள்ள ஆசிரியரிடம் முறையே உபதேசம் பெற்றுக் கொண்டாலன்றிப் பலிதமாகிறதில்லை.
* பொய்யை பொய்யாலும் மெய்யை மெய்யாலும் இரண்டுங் கலந்ததை இரண்டுங் கலந்ததாலும் வெல்ல முயற்சிக்க வேண்டும்.

## 40 வது நாள்

* துலாம் மகரம் மீனம் இந்த லக்னங்களிற் பிறந்து பிரஹஸ்பதி சுக்கிரன் புதன் செவ்வாய் இந்த நால்வரும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டு மிருக்கின்ற கிரக சார நிலைமையுடையவர்களுக்கு மறுபிறப்பில்லாத தன்மையும் குரு ஸ்தானமும் பிரயத்தனமில்லாமலே வலுவில் ஞானோதயமும் வாய்க்கிறதென்று மச்சேந்திர நாதர் கூறுகிறார்.

## 41 வது நாள்

* ஓம் என்னும் பிரணவத்தை மெதுவாகப் பதினாறு தரம் உச்சரிக்கும் வரை வலது மூக்கால் பிராண வாயுவை இழுத்து அறுபத்து நான்கு தரம் ஜெபிக்கும் வரை அடக்கி எட்டுத் தரம் சொல்லுகிற வரை இடது மூக்கால் விடுவதைத் தினந்தோறும் காலையில் பதினாறும் மாலையில் முப்பத்திரண்டுமாக அப்பியாசித்துக் கொண்டுவர மூன்று வருஷத்தில் ஸ்தூல சரீரத்திலுள்ள எழுபத்திரண்டாயிரம் நாடிகளும் பரிசுத்தமாய் விடுகின்றன. மரண பரியந்தம் எந்த வியாதியும் அணுகுவதில்லை.

## 42 வது நாள்

* இச்சையும் பந்தமும் செல்வமும் செறுக்கும் கோபமும் கொடூரமும் ஒரே இடத்தில் ஒன்றுவிட்டு ஒன்று பிரியாது குடி கொண்டிருக்கின்றன.
* முத்தியில் மயங்குபவர்களுக்குச் சித்தியும் சித்தியில் மயங்குபவர்களுக்கு முக்தியும் விரோதத்தை விளைவிக்கின்றன.
* பிரம்மா முதல் சகல ஜீவப்பிராணிகளிடத்திலும் உயர்வு தாழ்வு தோற்றாத மனோநிலைமை வாய்ந்துள்ள மஹா பாக்கியசாலிகளிடம் தெய்வீக சக்தி தானே குடி கொள்ளுகின்றன.

## 43 வது நாள்

* சர்வ சங்க பரித்தியாகிகளான துறவிகள் கிருஹஸ்தர்களிடம் ஆழ்ந்துப் பழகுவது குற்றம்.
* மனோ நாசம் பஞ்சகோச நாசம் மூன்றவஸ்தைகளின் நாசம் மூன்று சரீர நாசம் சங்கல்ப நாசம் மாயா நாசம் இவைகளில் ஏதாவது ஒன்று சித்தித்தால் மற்றெல்லாந் தானே சித்திக்கின்றன.
* பிறப்பிறப்பு வேண்டாதவர்கள் துரும்பு முதல் ஸ்வர்ணம் வரையுள்ள பதார்த்தங்களில் இன்பமிருக்கிறதென்று நம்பிவிடக் கூடாது.

## 44 வது நாள்

* எல்லாந் தெரிந்து ஒன்றுமட்டுந் தெரியவில்லையானால் அது பிரஹ்மமென்று தெரிந்து கொள்ள வேண்டும்.
* பிரபஞ்ச வஸ்துக்களில் சிறிது இன்பமாகத் தோற்றுமானால் ஜன்ம மரண விருத்திக்கு ஏதுவான சக்தியும் துன்பமாகத் தோற்றுமானால் நிவிருத்திக்கு ஏதுவான சக்தியும் வளருகிறது.
* ஆத்ம சமரஸம் அனாத்ம சமரஸம் என்ற இரண்டில் ஆத்ம சமரஸம் ஒன்றையே மஹரிஷிகளால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

## 45 வது நாள்

* விசால புத்தியில்லாதவர்களான க்ஷேம தர்சிகள் தன்னை அறிய விரும்புகிறார்கள்.
* உலக சிருஷ்டியின் உண்மையைத் தெரிந்து கொண்டவன் ஒரு சாஸ்திரமும் கற்க வேண்டியதில்லை.
* ரேதஸ் என்ற சுக்கிலமே மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் மோக்ஷத்திற்குக் காரணமாகிறது.

## 46 வது நாள்

* ஆசைப்படத்தக்க விஷயங்களுள் எதை எதை விலக்கிக் கொள்ளுகிறானோ அவன் பூர்ண சுகத்தை அடைகிறான்.
* வெளியில் உண்டாகிற மிருத்யுவைக் காட்டிலும் மனதிலுண்டாகிற கோபமெனும் மிருத்யுவே பெரியது.
* மனுஷ உலகத்திலுள்ள விஷய சுகமும் தேவலோகத்திலுள்ள பெரிய சுகமும் சத்திய லோகம் வைகுண்டம் கைலாயம் முதலிய உலகங்களிலுள்ள அபார சுகங்களும் ஆசையைவிட்டதினாலுண்டாகும் சுகத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட ஆகமாட்டாதென்று உமா சங்கரர் கூறுகிறார்.

## 47 வது நாள்

* உலகத்திலுண்டாகிற ஆசைகளையெல்லாம் வெளிக்கு வராமல் அடக்கிக் கொள்ளுகிறபோது தானாக விளங்குகிற ஆத்மப் பிரகாசமானது இவ்வுலகத்திலேயே தெளிவாக விளங்கும்.
* முன் பிறப்புகளிலுள்ள சரீரங்களாற் செய்யப்பட்ட கர்மமானது சுபமோ அசுபமோ அவற்றின் பலன்கள் சூரனானாலும் மூடனானாலும் அறிவுள்ளவனானாலும் பயந்தவனானாலும் சார்வ பௌமனானாலும் தரித்திரனானாலும் செய்தவனை வந்தடைகின்றன.

## 48 வது நாள்

* எல்லாவற்றையும் மீறிச் செல்கிற கால சக்தியானது அதிசீக்கிரம் விரைந்து செல்வதால் எவ்வளவு சீக்கிரத்தில் எதைச் செய்து கொள்ள வேண்டுமோ அதை அவ்வளவு சீக்கிரத்தில் செய்து முடித்துவிட வேண்டும்.
* காலசக்தியானது திரிமூர்த்திகள் பஞ்சமூர்த்திகளையுந் தாண்டிச் செல்லுகிறது.
* விகாரமுள்ள மனத்தையுடைய ஜீவர்கள் விகாரமில்லாத பரமாத்மாவை வெகு காலம் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

## 49 வது நாள்

* ஆரண்யங்களிலுள்ள மரத்தடிகளில் தங்கியிருப்பது பிசகு.
* தனக்கருகிலுள்ள தானான ஆத்ம நாயகனை அறியாத ஜீவ நாயகிகள் உலக நாயகர்களை நாடி விடுகிறார்கள்.
* எமனானவன் கர்ம பலன்களைத் தேடுகிறவனும் வேறிடத்திற்குச் சென்ற மனமுள்ளவர்களை எடுத்துக் கொண்டு போகிறவனுமாயிருக்கிறான்.

## 50 வது நாள்

* அதிக சுந்தரமும் யௌவனமுள்ள ஸ்திரீகளைக் கண்டு எவன் மனது ஒன்றும் நினையாமலிருக்கிறதோ அவன் சமதமாதி சாதனங்களை அனுஷ்டிக்க வேண்டியதில்லை.
* விட்ட விஷயங்களை மீண்டும் வராமற் செய்து கொண்டவன் விதியையும் வெல்லும் சாமர்த்தியமுடையவன்.
* ஸ்வாதீனமுள்ள சந்நியாசிகளிடம் ஸ்வாதீனமில்லாத துறவிகள் பழக மாட்டார்கள்.

## 51 வது நாள்

* நேரில் பார்த்துப் பழகாதவனைப் பற்றி யாரார் எந்தவிதமான நன்மை தீமையுள்ள குணங்களைச் சொன்ன போதிலும் ஒன்றையும் நிச்சயஞ் செய்துவிடக் கூடாது.
* தானே நேரில் வெளியிற் கண்ட விஷயத்தையும் பிறர் கூறக் கேட்டதையும் அன்னியர்களிடம் கூறுவது குற்றம்.

## 52 வது நாள்

* எந்தப் பிராணிகளுக்கும் யாதொரு முயற்சியும் பிரயாசையின்றிக் காம இச்சை நித்திரை பசி இவைகளுண்டாவதைப் போல, எவனுக்குப் பரிசுத்த மார்க்கப் பிரவிர்த்தி ஞான இச்சை பற்றற்ற நினைவு இவைகளுண்டாகுமானால் தெய்வாம்ச பூத யோகப் பிரஷ்டன் என்றறிய வேண்டும்.
* கண்ணை விரும்புகிறவன் ஞானத்தையும் தவம் வேண்டியவன் சத்தியத்தையும் சுகம் வேண்டுபவன் தியாகத்தையும் அடைய வேண்டும்.

## 53 வது நாள்

* துக்கம் வேண்டாதவன் ஆசையையும் கோபம் வேண்டாதவன் லோபத்தையும் ஆசையை விரும்பாதவன் அறியாமையையும் விட்டுவிட வேண்டும்.
* ஆசையற்றவனிடத்திலும் பொருளில்லாதவனிடத்திலும் மிருத்யு தேவதையின் பலம் செல்லுகிறதில்லை. தீ, திருடர் பிரவேசிக்கிறதில்லை.
* உலகம் முழுவதையும் அரசாட்சி செய்கிற சக்கிரவர்த்தியையும் பரம ஏழையாகிய தரித்திரனையும் இரண்டு தராசில் தூக்கிப் பார்த்தால் ஏழைக்குள்ள சுகமும் சுதந்தரமும் வியாதியின்மையும் அரசனுக்கில்லை.

## 54 வது நாள்

* உலகத்திலுள்ள எல்லாக் காமங்களின் வஸ்துக்களை அடைபவனைவிட விடுபவன் விசேஷமுடையவன்.
* ஆசைப்படதக்க உலகப் பொருள்கள் தொழில் இவைகளின் எல்லையை அடைந்தவன் இதுவரை ஒருவனுமில்லை.
* அன்னமயம், பிராண மயம் மனோ மயம் விக்ஞான மயம் ஆனந்த மயம் சதானந்த மயம் மஹத்துவம் இவற்றின் முடிவிலிருந்து பிராணிகளுக்கு காமமுண்டாகிறது.

## 55 வது நாள்

* ஆசாரியர் சிஷ்யனுக்கு நேரே பிரஹ்மத்தைக் காட்ட முடியாது.
* உலக மயக்க விழிப்பில் வேதாந்தம் பேசுபவன் சுத்த பாமரன்.
* மனமுதித்தால் சகல விவகாரங்களுமுண்டாகின்றன.
* மித்தையான பந்தத்தைக் கெடுக்கச் சத்தியமான மோக்ஷம் வேண்டியதில்லை.

## 56 வது நாள்

* ஜாக்கிர சொப்பன சுழுப்திகளைத் தாண்டியவனுக்கு வேதாந்தம் விளங்கும்.
* லோகாயதர்கள் முதல் சாங்கியர்கள் வரை ஜீவ மயக்கமுடையவர்கள்.
* திருணாசக மதம் முதல் யோக மதம் வரை ஈஸ்வர மயக்கமுடையவர்கள்.
* ஜாக்கிரம் முதல் மோக்ஷம் வரை ஜீவ கல்பிதம்.

## 57 வது நாள்

* உண்மையல்லாத மதங்கள் நாளடைவில் நசித்து விடுகின்றன.
* ஒரு காலத்தில் உற்பத்தியாகிற மதம் மற்றொரு காலத்தில் அழிகிறது.
* வைதீகமான பெரிய மதத்தை லௌகீகமான சிறிய மதம் ஏளனம் செய்வது கலியில் சகஜமாயிருக்கும்.
* ஒரு காலத்திலும் உண்டாகாமல் விளங்கிக் கொண்டிருப்பது கடவுள் மதம்.

## 58 வது நாள்

* உண்மையில்லாததென்று ஒரு மதத்தையும் எண்ணிவிடக் கூடாது.
* சில உண்மையுள்ளன சிற்சில உண்மைகளைக் கொண்டன பல உண்மை கொண்டன பலபல வுண்மைகளைத் தாங்கியிருப்பன நிறைந்த உண்மைகளையுடையதுமான உலக மதங்களெல்லாம் விளங்கிக் கொண்டிருக்கின்றன.
* யோகம் முடிந்தவன் மறு ஜென்மத்திலும் முடிந்த ஞானி அதே ஜென்மத்திலும் பிறவா முக்தி பெறுகிறான்.

## 59 வது நாள்

* கடவுளை அறிய வேண்டுபவன் ஒரு மதத்திலும் கட்டுப்பட்டிருக்கக் கூடாது.
* இருந்த யிடத்திலிருந்து கொண்டே உலக விஷயங்கள் முழுமையும் அறிந்து கொள்ளக் கூடிய மனோ திருஷ்டியைக் கொண்டவர்கள் மனோ சலனத்தையும் அஞ்ஞானத்தையும் அடைகிறார்கள்.
* போக்குவரவுள்ள ஸ்வாதீனமுள்ள யோகியானவன் ஆகாய மனத்தாலன்றிப் பூமியில் நடந்து சஞ்சரித்தால் யோக சக்தி குறைகிறது.

## 60 வது நாள்

* குணத்தையும் தொழிலையுங் கண்டு களிப்படைகிற ஜனங்கள் ஞானத்தைக் கண்டு ஆச்சரியப்படுவதில்லை.
* விதிப்படியுள்ள பக்தி யோக கர்ம யோகங்களுக்கு இடமில்லாத புத்த மதத்தில் ஞான யோகத்திற்கு மட்டும் இடமிருக்கிறது.
* பிரபஞ்சம் அனித்திய மென்றறியாமல் உண்டாகிய வைராக்கியம் நிலைத்து நிற்கிறதில்லை.

## 61 வது நாள்

* தன்னிடத்திலிருந்து நீக்கப்பட்ட ஒருவனை எந்தக் காரணங்களைக் கொண்டும் மீண்டும் சேர்த்துக் கொள்வதால் அபமிருத்யு தோஷம் உண்டாகிறது.
* ஆசையும் அன்பும் ஒருவனிடத்தில் ஒரே காலத்தில் இருக்க முடியாது.
* எப்போதும் இஷ்டம்போல் சஞ்சரிக்கிறவனும் பாய் முதலிய விரிப்புகளில்லாத நிலத்திற் படுப்பவனும், தன் கையையே தலையணை யாகக் கொண்டவனும் அடக்கமுள்ளவனுமான ஏழை மனிதனை தேவர்கள் கொண்டாடுகிறார்கள்.

## 62 வது நாள்

* சாமர்த்தியவானான புருஷனும் நம்பிக்கை கொண்டு முயற்சியுடன் நன்றாக எத்தொழிலைச் செய்த போதிலும் விதியாற் கிடைக்க வேண்டியவைகளையன்றி வேறொன்றுங் கிடைக்க மாட்டாது.
* உலகத்திலுள்ள அனித்திய வஸ்துக்களின் சேர்க்கையும் காலாந்தரத்தில் மோக்ஷ சாதனமாக முடிகிறது.
* ஞான மார்க்கத்தை உபதேசிப்பதைவிடக் காண்பிப்பது சிரேஷ்டம்.

## 63 வது நாள்

* பல பேர்களுடனிருப்பதாற் கலகமும் இருவருடனிருப்பதால் பேச்சும் அவஸ்யமுண்டாகுமாதலால் தபசியும் யோகியும் ஞானியும் புத்தியுள்ளவனும் தனிமையாகச் சஞ்சரிக்க வேண்டும்.
* சுபாவத்தைப் பற்றியுண்டாகிற முயற்சிகள் யாவும் சுதந்தரத்திற்கே கொண்டு போய் விடுகின்றன.
* முயற்சியாலுண்டாகக் கூடிய பிரவிர்த்திகள் யாவும் சுபாவத்தைப் பற்றின அல்ல.

## 64 வது நாள்

* யோக மார்க்கத்தாற் கிடைக்கிற புண்ணிய லோகங்களைக் காட்டிலும் தர்ம மார்க்கத்தாற் கிடைக்கிற லோகம் விசேஷமானது.
* நம்மைக் குறித்து யாராவது ஓர் விஷயத்தைக் கூறினால் அலட்சியஞ் செய்யவாவது லட்சியஞ் செய்யவாவது கூடாது. நீண்ட ஆலோசனை செய்து நிச்சயிக்க வேண்டும்.
* மனது பரிசுத்தமாவதற்கு வேண்டிய தர்மங்கள் எதுவாயிருந்தாலும் ஜாதி மத பேதமின்றி யாதொரு வரம்புமின்றி எவரும் அனுஷ்டிக்கலாம்.

## 65 வது நாள்

* உலகப் பொருள்களின் உதவியைக் கொண்டு உலகாதீத வஸ்துவை அடைய வேண்டியிருப்பதால் உலக வஸ்துக்களையெல்லாம் பரமாத்மாவாகப் பார்க்க வேண்டும்.
* ஓர் பெண்ணானவள் வீட்டிலுள்ளவர்களுக்குத் தெரியாமல் அதிதிகளுக்குப் போஜனம் செய்து வைக்க விருப்பங் கொண்டு நெல்லைக் குத்தும்போது கைகளிலுள்ள வளையல்கள் பிறர் அறியும்படி ஓசையுண்டாகுமாதலால், அவள்தானே வளையல்களை உடைத்துவிட்டு ஒன்றை மட்டுங் கையில் வைத்துக் கொள்வதையொக்க மனாதி தத்துவங்களின் ஓசையுண்டாகுங் காரணங்களைத் தெரிந்து கொண்டு விலகிக் கொண்டவர்களது ஓசை உள்ளடக்கமாகவே யிருக்கும்.

## 66 வது நாள்

* எவனுக்குச் சரீரம் பிராணன் மனம் இவைகளிருந்தும் இல்லாதிருக்கிறதோ கண்களிருந்தும் பார்க்கிறதில்லையோ காதுகளிருந்தும் கேட்கிறதில்லையோ நாவிருந்தும் ருசி அறிவதில்லையோ வாக்கு இருந்தும் பேசுகிறதில்லையோ நடந்தும் புசித்தும் தூங்கியும் நடவாதவனும் புசியாதவனும் தூங்காதவனுமா யிருக்கிறானோ அவன் ஆருடன்.
* வியாதியினாலுண்டாகிற வரட்சியுடையவன் தண்ணீரால் தாகந் தீராததுப் போல பேராசையுடையவன் இந்திர பதவி கிடைத்தாலும் திருப்தி அடைகிறதில்லை.

## 67 வது நாள்

✻ உண்ணாதிருப்பது பேசாதிருப்பது பாராதிருப்பது தொடாதிருப்பது இவைகளால் மனிதருக்குச் சிரேயஸ் உண்டாகிறது.

✻ பிரத்யகாத்மாவையும் பிரஹ்மத்தையும் ஒன்றாக்கியது ஐக்கியம்.

✻ ஜீவாத்ம பரமாத்ம சமீப வாசமே உபவாசம்.

✻ ஜென்ம வியாதி தீர வேண்டுமானால் வீட்டைவிட்டு இறங்கலாகாது.

## 68 வது நாள்

✻ ஜீவனையும் மனதையும் ஒன்று சேர்ப்பதாலுண்டாவது சித்தாந்தம்.

✻ ஜீவனைப் பிரத்யகாத்மாவில் சேர்ப்பதாலுண்டாவது வேதாந்தம்.

✻ வேதத்தை நிந்திப்பவன் பிரயோஜனமில்லாத யுக்தி பேசுகிறவன் நாஸ்திகள் யாவற்றிலும் சந்தேகமுள்ளவன் மூர்க்கன் தன்னைப் பண்டிதனென்று நினைப்பவன் இவர்கள் மறு ஜென்மத்தில் குள்ளநரியாய்ப் பிறக்கிறார்கள்.

## 69 வது நாள்

✻ ஞானானுபவம் வாய்ந்து அந்தர்முக திருஷ்டியிலிருப்பவர்களுக்கு சாஸ்திரார்த்தங்களும் வேத வாக்கியங்களும் பெரிய பாரமாகத் தோன்றுகின்றன.

✻ முன் ஜென்மங்களில் செய்த நல்வினையும் தீவினையும் பின் ஜென்மத்தில் அதற்குரிய பலன்களைக் கொடுப்பது நிச்சயமாயிருக்கிறபடியால் அவஸ்யம் தர்ம காரியங்களையே செய்ய வேண்டும்.

✻ தான்யங்களுக்குள் பதரும் பட்சிகளுக்குள் கொசுவும் போன்றிருக்கப்பட்டவர்கள் சுகத்திற்குக் காரணம் தர்மமென்று தெரிந்து கொள்வதில்லை.

## 70 வது நாள்

✻ ஆசையற்று மோக்ஷத்தை உத்தேசித்துச் செய்யப்படாத புண்ணிய கருமங்கள் பல ஜென்மங்களைக் கொடுத்து விடுகின்றன.

✻ சன்மானம் அவமானம் மானம் கஷ்டம் நஷ்டம் லாபம் சுபம் ஆபத்து சம்பத்து பிறப்பு குலம் இவைகள் தான் செய்திருக்கிற கருமங்களாலுண்டாகின்றன.

✻ ஆகாயத்திலுள்ள பறவைகளின் அடிச்சுவடும் ஜலங்களிலுள்ள மீன்களின் பாதக் குறியும் எவ்விதம் காணப்படுவதில்லையோ அவ்விதமே பிரஹ்ம ஞானத்தை அடைந்தவர்களது மார்க்கங்களையும் காண முடிவதில்லை.

## 71 வது நாள்

* ஆகாயத்தில் ஒரு பூதமும் வாயுவில் இரண்டு பூதமும் அக்கினியில் மூன்று பூதமும் ஜலத்தில் நான்கு பூதமும் பூமியில் ஐந்து பூதமும் சேர்ந்திருக்கின்றன.
* பிரஹ்மத்தையன்றி மற்ற தத்துவங்களை விசாரித்தறிந்தவன் தத்துவ ஞானியே யன்றிப் பிரஹ்ம ஞானியல்ல.
* மனஞ் செல்லுகிற வரை கருமஞ் செல்லும் மனம் செல்ல முடியாத விடத்தில் கருமம் செல்ல முடியாது.

## 72 வது நாள்

* ஐந்து பூதங்களில் ஒன்றை விட்டு மற்றொன்று ஓரிடத்தில் நிலை பெற்றிறாது.
* பாகமான ஆகாரமிருக்குமிடமாகிய நாபியின் கீழ் பாகத்திலும் பாகமாகாத ஆகாரமிருக்குமிடமாகிய நாபியின் மேற் பாகத்திலும் அக்னியோடு கூடிய பிராண வாயு சஞ்சரிக்கிறது.
* சரீரத்தை ரட்சித்து வருகிற அக்னியானது சிரசில் குடி கொண்டிருக்கின்றன.
* முயற்சி தொழில் பலம் இம்மூன்றும் ஒன்று சேர்ந்ததே உதான வாயுவென்று ஜடதத்துவ நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

## 73 வது நாள்

* எந்த மனிதன் எந்தக் கர்மத்தை எந்த விதமாய் எந்த மனத்தோடு செய்திருக்கிறானோ அந்தக் கர்மமானது சூக்ஷ்மமாக அந்த மனிதனிடம் குடி கொண்டிருக்கும். அவன் ஓடினால் ஓடும். நின்றால் நிற்கும். நடந்தால் நடக்கும், தூங்கினால் தூங்கும். உட்கார்ந்தால் உட்காரும், பேசினால் பேசும், வேலை செய்தால் செய்யும், சாப்பிட்டால் சாப்பிடும், முழுகினால் முழுகும், உருண்டால் உருளும், நீந்தினால் நீந்தும், தவஞ் செய்தால் தானுஞ் செய்யும், மறந்தால் மறக்கும், பிறந்தால் பிறக்கும், இறந்தால் இறக்கும், வந்தால் வரும், ஏறினால் ஏறும், இறங்கினால் இறங்கும், மவுனமானால் மவுனமாகும்.
* பிரஹ்மானுபவத்தினின்றிறங்கும் போதே மனதும் மாயையுங்கூட இறங்குகிறது.

## 74 வது நாள்

* பார்ப்பதெல்லாம் பரமாக எவனுக்குத் தோன்றுகிறதோ அவன் மனுஷ்ய தேவன்.
* சங்கல்பத்தை எவன் தானாகப் பாவிக்கிறானோ அவன் பரம பாக்கியன்.
* நினைக்கிற மனிதன் நினையாத மனிதன் என்ற இருவரையுங் காண்பவன் நிகன்ம யோகி.
* மரம் செடி கொடி புல் பூண்டு முதலிய ஸ்தாவரங்களுக்கும், ஐந்து பூதங்களும் சப்த ஸ்பரிச ரூப ரஸகந்தங்களும் மனமும் ஜீவனும் சுக துக்கங்களுமிருக்கின்றன.

## 75 வது நாள்

* பிராணிகளின் சரீரங்களிலுள்ள பஞ்சபூதங்களில் ஜலம் அக்கினி காற்று இம்மூன்றும் எப்போதும் விழித்துக் கொண்டிருக்கின்றன. பூமியும் ஆகாயமும் உறங்குகின்றன.
* கால மிருத்யுவும் அந்தக்கரணத்தின் கர்த்தாவும் ஒன்று சேரும்போது கால தேவதை அழிகிறது.
* காலமென்று சொல்லப்படுகிற மிருத்யு தேவதையானது உருவந்தோற்றாமல் பிரஹ்மத்தை மட்டும் விட்டு மற்றெல்லோரையும் சுற்றி நிற்கின்றன.

## 76 வது நாள்

* காற்றும் ஜலமும் ஒன்று சேரும்போது அக்கினியும், காற்றும் அக்கினியும் சேரும்போது பூமியும் உண்டாகிறது.
* ஆகாயத்தின் எல்லையைத் தேவர்களும் அறிய முடியவில்லை.
* பரமாத்மாவின் ஆயிரத்திலொரு பங்கு சக்தியுடையது மனம்.
* சூரியனுடைய ஒளி செல்லுகிற இடத்திற்கு மேலும் சூர்ய சந்திரரர்கள் காணப்படாத இடத்திற்குக் கீழும் தாமாக விளங்குகிற அளவற்ற பிரகாசமுடைய சுத்த தேவர்களிருக்கிறார்கள்.

## 77 வது நாள்

* பிரஹ்ம நிஷ்டையின் தன்மையினின்று நழுவியவனைப் பிராம்மண னென்று வேதம் சொல்லவில்லை.
* எது எது இந்திரியங்களுக்கும் மனதிற்கும் புலப்படுகின்றனவோ அவைகள் மாயாஜாலங்களென்று கண்டு கொள்ள வேண்டும்.
* துரிய அனுபவிக்கு மூன்றவஸ்தைகள் வந்தாலும் பற்றாது.

## 78 வது நாள்

* வேதத்திற் கூறப்பட்டிருக்கிற உத்தம சமஸ்காரங்களைப் பெற்றவர்களும் ஒழுக்கமானவர்களும் யோகத்தின் சிரேஷ்டர்களும் தத்சொரூபத்தில் நிலைத்தவர்களுமானவர்கள் பின் கிருத யுகத்தில் லோகபாவனர்களான ரிஷிகளாய் வருகிறார்கள்.
* பிரஹ்மத்தை அனுபவத்திலறிந்தவர்களைப் பிராம்மணர்களென்று அடிக்கடி வேதம் கூறுகிறது.
* முக்குணங்களோடு கூடிய ஜீவன் க்ஷேத்ரக்ஞனென்றும் முக்குணங்களை விட்ட ஆத்மா பரமாத்மாவென்றும் அறிந்து கொள்ள வேண்டும்.

## 79 வது நாள்

* லகுவான ஆகாரமுள்ளவன் பரிசுத்தமான புத்தியுள்ளவன் இரவுகளின் கடைசியிலும் முதலிலும் சமாதியிலிருப்பவன் இவர்கள் சீக்கிரம் பரமாத்மாவை அறிகிறார்கள்.
* பிரஹ்மமாகிய ஸ்ரீமந் நாராயண தேவரிடமிருந்து க்ஷேத்ரக்ஞனாகிய பிரம்ம தேவருண்டாகிச் சங்கல்ப சிருஷ்டிகளைச் செய்கிறார்.
* கிருதயுகத்தின் ஆதியில் எல்லோரும் பிரஹ்ம நிஷ்டர்களான பிராம்மணர் களாகவே இருந்தார்கள். பிராம்மணரல்லாதவர்கள் ஒருவராவது இல்லை.

## 80 வது நாள்

* காலக் கிரமத்தில் பிராம்மணர்களே பிராம்மணரல்லாதவர்களாய் விட்டார்கள்.
* பரலோகத்தின் ரகஸ்யம்தெரியாதவர்களும் உறுதியும் உண்மையும் நம்பிக்கையுமான ஆஸ்திக புத்தியல்லாதவர்களும் வேதத்திற் கூறியவைகளை யெல்லாம் அங்கீகரிக்க முடியாத நிலைமையிலிருக்கிறார்கள்.
* பரவித்தை அபரவித்தை என்ற இரண்டில் பரவித்தையொன்றே பிரஹ்மத்தை அடைகிற மார்க்கம்.
* மனதற்ற இடத்தில் கடவுள் பிரசன்னமாகிறார்.

## 81 வது நாள்

* வேதம் ஆகமம் இதிகாசம் புராணம் ஸ்மிருதி கலை ஞானங்கள் வேதாங்கம் சாஸ்திரம் தத்துவ சாஸ்திரங்கள் மந்திர சாஸ்திரம் இவைகளெல்லாம் அபர வித்தைகள்.
* சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற உலகத்தைப் பிரஹ்ம ரூபமென்று அனுபவித்து அறிந்தவர்களாகிய பிராம்மணர்களே கர்மத்தின் நீண்ட கால வேற்றுமை களினால் க்ஷத்திரிய வைஸ்ய சூத்திரர்களாய் விட்டார்கள்.
* உலக ஆசை குடி கொண்டவனுக்கும் ஞானிக்கும் ஜனன மரண ஞாபகமேயில்லை.

## 82 வது நாள்

* சொல்லைவிட்டுச் செய்கையில் ஸ்ரீராம பிரானையும் செய்கையை விட்டுச் சொல்லில் கண்ணபிரானையும் நம்ப வேண்டும்.
* ஜீவனை உபாசிக்கிறவன் அறிவாளியென யமனால் பூஜிக்கப்படுகிறான்.
* வருகிற பிராணனையும் போகிற அபானனையும் எவன் பார்த்துக் கொண்டி ருக்கிறானோ அவன் காலாஷ்டக யோகி.
* நினைப்பு உதயமாகிற இடத்தில் நிற்காமல் அப்பால் போகிறவன் நித்திய சாது.

## 83 வது நாள்

* இந்திரியங்களுக்கு மட்டும் புலப்படுகிறவைகள் வியக்த மென்றும் மனத்தின் யூகத்தால் புலப்படுகிறவைகள் அவ்யக்தமென்றும் கண்டு கொள்ள வேண்டும்.
* மனத்தைப் பிராணனிலும் பிராணனைப் பிரஹ்மத்தினிடத்திலும் சேர்த் தவர்கள் பிரஹ்ம ரிஷிகள்.
* எப்போதும் பரிசுத்தமும் நல்ல ஆசாரமும் எல்லாப் பிராணிகளிடத்திலும் கருணையும் உள்ளவன் பிராம்மணன்.

## 84 வது நாள்

* சூத்திரன் சூத்திரனாகவே இருக்க வேண்டுமென்றும் பிராம்மணன் பிரம்மணனாகவே இருக்க வேண்டுமென்றும் இருப்பார்ளென்றும் வேதத்தை யறிந்த மஹறிஷிகள் சொல்லவில்லை.
* மூன்றவஸ்தைகளுக்குட்பட்டு அத்வைதம் பேசுவது முறையல்ல.
* பரோக்ஷ ஞானத்தால் ஜகத் பிராந்தியும் அபரோக்ஷ ஞானத்தால் ஜென்ம பிராந்தியும் பிராரப்த க்ஷயத்தால் ஜகத் தோற்றமும் நசிக்கும்.

## 85 வது நாள்

* மூன்றவஸ்தைகளையும் வராமற் செய்கின்ற ஆரூடி யோகத்தால் இரண்டில் லாத ஞான சொரூபத்தை அடையலாம்.
* எந்த மதஸ்தனுக்கும் துவைதமில்லாத துரியானுபவம் வாய்க்காமல் முக்தி கிடைக்கிறதில்லை.
* எந்தக் காலத்தில் அந்தரங்கமாகத் தன்னைத் தரிசிக்கிறானோ அப்போ திருப்பது பரமயோகானந்தம்.

## 86 வது நாள்

* வேதத்திலும் குரு வசனத்திலும்மாறாத நம்பிக்கை கொண்டிருக்கிறவன் அழிவில்லாத பதவிகளையும் அடைகிறான்.
* சுவர்கத்தில் சுகம் மட்டும் உண்டு. நரகத்தில் துக்கம் மட்டும் உண்டு. மனுஷ லோகத்தில் சுக துக்கம் இரண்டுமுண்டு.
* சாதுக்களுக்குக் கொடுக்கிற தானத்தின் பயன் பரலோகத்திலும் அசாது களுக்குக் கொடுக்கப்படுகிற தானத்தின் பயன் இவ்வுலகத்திலும் வந்து சேருகின்றன.

## 87 வது நாள்

* ஹோமத்தால் பாபம் விலகுகிறது. வேதாத்தியானத்தால் சாந்தமுண்டாகிறது.
* கெட்ட வினயமான வஞ்சகத்தை விட்டு விட்டாலும் நல்ல வஞ்சகமில்லாதவர்கள் உலகத்தில் உண்மையோடிருக்க முடியாது.
* விதிப்படி பிரஜைகளை உண்டு பண்ணுவதால் பிரம்மதேவரும் யாகஞ் செய்வதால் தேவர்களும் தர்ப்பணம் செய்வதால் பிதுர்க்களும் வேத வித்தையைக் கற்பதால் ரிஷிக் கூட்டங்களும் நிவிர்த்தி ஞானத்தையடைவதால் வாசுதேவரும் உலகத்தை மறப்பதால் எமனும் சந்தோஷமடைகிறார்கள்.

## 88 வது நாள்

* சமமான உலகம் சம்பத்து ஞானம் ராஜ்யம் சக்தி அடக்கம் சுதந்தரம் புண்ணியம் பாபம் பரிகாசம் செல்வம் வினயம் பதம் கபடம் யோகம் ஸ்திரீ சிநேகம் வீடு வாகனம் சந்திப்பு சாந்தம் பிரவிர்த்தி யாத்திரை இவைகளை எல்லா லோகங்களிலுமுள்ள ஜனங்கள் கருதுகிறார்கள்.
* மலையருவிகளின் ஸ்நானம் தபசிகளுக்குத் தவத்தை விருத்தி பண்ணுகிறது.

## 89 வது நாள்

* ஆகார முதலிய அவஸ்யமான தன் ஆசை பங்கமடைந்தவனாகித் திரும்பிச் செல்லுகிற அதிதியானவன் தன் பாவத்தைக் கொடுத்து விட்டு அவன் புண்ணியத்தை எடுத்துச் செல்கிறான்.
* அப்பியாஸ காலத்தில் அவசேத வாதத்தையும்அனுபவ காலத்தில் ஆபாஸ வாதத்தையும் மஹரிஷிகள் அங்கீகரிக்கிறார்கள்.
* உலகம் எப்போதும் உள்ளதாகவே இருக்கிறது.

## 90 வது நாள்

* ஜீவன் பிரஹ்மத்திலுண்டாகிப் பிரஹ்மத்திலே நசிக்கிறான்.
* விசேஷ புருஷர்கள் யதார்த்தவாதிகள் தத்துவ ஞானிகள் உண்மை கண்டவர்கள் உத்தம யோகிகள் நிவிர்த்தி மார்க்கத்தில் நிற்பவர்கள் இவர்கள் தர்க்கம் செய்யவும் செய்கிறவர்களுக்கு இடமும் கொடுக்க மாட்டார்கள்.

## 91 வது நாள்

* வனங்களிலுள்ள மூலிகைகள் கனிகள் காய்கள் கிழங்குகள் வேர்கள் பழுத்ததும் காய்ந்ததுமான இலைகள் இவைகளையே ஆகாரமாகக் கொண்டவர்களுக்குத் தபோ அக்கினி வளருகிறது.
* நாணல் மரவுரி குகை தோல் கமண்டலம் தண்டம் இவைகளைக் கொண்டு ஆரண்யத்தில் சஞ்சரிக்கும் தபசிகளிடம் தபோ தேவர்கள் வந்தடைகிறார்கள்.
* நாசிகையின் அருகிலுள்ள புருவங்கள் மூக்கு நெற்றி இவைகளின் சந்தி ஸ்தானங்களில் புண்ணியசாலிகள் அடையத்தக்க லோகமிருக்கிறது.

## 92 வது நாள்

* தேஜஸ் கீர்த்தி புத்தி ஞானம் வணக்கம் பிறவி தவம் இவைகளையுடைய வர்கள் எல்லோராலும் பூஜிக்கப்படுகிறார்கள்.
* பூனை நாய் கோழி இவைகளுடன் மனிதர்கள் விளையாடக் கூடாது.
* இரவில் எண்ணெயிட்டு ஸ்நானம் செய்யக் கூடாது. எள்ளன்னத்தை உண்ணக் கூடாது.

## 93 வது நாள்

* வெளி உடம்பின் காரியங்களினாலும் செய்கைகளினாலும் மற்றுமுள்ள பகிர்முக நிச்சயிங்களினாலும் முடிவான எதார்த்தத்தை அறிந்து கொள்ள முடியாது.
* புருஷர்களையெல்லாம் இழுத்துவிடக் கூடிய ஆகர்ஷண சக்தி பெண்களிடத்தில் அமைந்திருக்கிறதென்று மஹாத்மாக்களாகிய சிலரைத் தவிர மற்றெல்லோரும் நிச்சயித்திருக்கிறார்கள். அவரவர் ஹிருதயம் பரிசுத்தமாகாத காரணத்தால் அவ்வாறு நிச்சயித்ததேயன்றி மஹாமாயையைக்கூட ஆகர்ஷிணிக்குஞ் சக்தி ஒவ்வொருவர்களிடத்திலும் தங்கி நிற்கிறது.

## 94 வது நாள்

* சகல தத்துவங்களையும் கடந்து நின்ற அதீதமான நிலைமையை யடைந்த மகாத்மாக்களின் செய்கைகளும் வசனங்கள்கூட ஞான மோக்ஷ சாதனமான கரும யோக ரஹஸ்யத்தையே தொடர்ந்து நிற்கின்றன.
* தான்றி, புங்கு, புளி இம்மரங்களின் நிழலில் தங்கக் கூடாது.

## 95 வது நாள்

* மாமியை மருமகள் பரிஜாரகத் தொழிலில் ஏவுகிற காலத்தில்மகன் தந்தையை அவிவேகத்தால் வேலைக்குப் போகச் சொல்லுகிற காலத்தில், சூத்திரர்கள் பிராம்மணர்களைக் கொண்டு பாத சுத்தி செய்து கொள்கிற காலத்தில் சேரக் கூடாத பெண்களுடன் புருஷர்கள் சேருகிற காலத்தில். சூத்திரர்கள் பிராம்மண ஸ்திரீகளை மனைவியாகக் கொண்ட காலத்தில், பிராம்மணர்கள் சூத்திர ஸ்திரீகளை மனைவியாகக் கொண்ட காலத்தில். பிராம்மணர்கள் சூத்திர ஸ்திரீகளை புணருகிற காலத்தில், ஆசாரியர் சிஷ்யர்களுக்கு உண்மையைச் சொல்லாத காலத்தில், சிஷ்யர்கள் குருமார்களை அவமதித்து நடக்கிற காலத்தில் விவாகமாகாத கன்னிகளைக் கண்ட புருஷர்கள் சம்போகம் பண்ணுகிற காலத்தில் வெண்கலப் பாத்திரத்தில் குப்பைகளைக் கொட்டுகிற காலத்தில், நியாயமில்லாமல் பெரியோர்களைத் தூஷிக்கிற காலத்தில், அனியாயமாகி ஜீவப் பிராணிகளைக் கொல்லுகிற காலத்தில் நீதியாக ராஜ்ய பரிபாலனம் இல்லாத காலத்தில் மஹாபலியானவன் இந்திர பதவிக்கு வந்து இவைகளை விலக்கி விடுகிறான்.

## 96 வது நாள்

* முள்ளுள்ள மரங்கள் அவரை முதலிய கொடிகள் யாகங்களுக்குரிய மரங்கள் செடிகள் இவைகளை வீட்டில் வைத்து வளர்க்கக் கூடாது.
* அலரிப் புஷ்பத்தை தரித்துக் கொள்ளக் கூடாது. எந்தப் புஷ்பத்தையும் மோர்ந்து பார்க்கக் கூடாது.
* சிறுவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போது பெரியவர்கள் தின்பண்டங்களை உண்ணலாகாது.

## 97 வது நாள்

* புருஷர்கள் ஸ்திரீ வேஷமும் ஸ்திரீகள் புருஷ வேஷமும் போடுவதால் தேஜஸ் தேவதையும் லக்ஷ்மி தேவியும் விலகி விடுகிறாள்.
* வர்த்தகம் கிருஷி உத்தியோகம் இவைகளை அனுஷ்டிக்கிற பிராம்மணன் பிராம்மணத் தன்மையினின்று குறைந்தவனாகிறான்.
* பிறரால் அவமதிக்கப்படுகிறவன் எல்லாப் பாபங்களினின்றும் விடுபட்டுச் சுகமாக நிலைக்கிறான்.

## 98 வது நாள்

* என் கர்மத்தால் நான் உண்டானேனென்று சொல்லிக் கொண்டு மாதா பிதாக்களை விட்டு மாமனார் வீடு செல்லுகிற புத்திரனை விட்டு லக்ஷ்மி தேவி விலகி விடுகிறாள். தீர்க்க தேவதை நகைக்கிறது.
* பயனை உத்தேசித்துச் சமாதி அப்பியாசியாதவன் ஆரூடன்.
* பிறர் ரகஸ்யங்களை வெளியிற் கூறக் கூடாது.
* எந்தச் சமயத்திலும் தன்னைப் பற்றி கொண்டாடக் கூடாது.

## 99 வது நாள்

* கேட்காதவனுக்கு யாதொருவித தர்மத்தையும் சொல்லக் கூடாது.
* எல்லா உலகத்திற்கும் பிரியமானவானனும் எல்லாப் பிராணிகளாலும் கொண்டாடப்படுகிறவனும் எல்லாக் குணங்களுமுள்ளவனாக இந்தப் பூமியில் சூக்ஷ்ம சரீரத்துடன் ஒருவன் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறான்.
* உண்மையை அறிய விரும்புகிறவர்கள் எப்போழும் மனிதர் கூட்டமின்றிய ஏகாந்தத்தில் இருந்து கொள்ள வேண்டும்.
* கூட்டமாயிருக்கும்போது ரகஸ்ய தர்மங்களை உபதேசிக்கக் கூடாது.

## 100 வது நாள்

* மந்திர தேவதையின் அனுமதி பெற்று மந்திரங்களை முறைப்படி உபதேசிக்க வேண்டும்.
* சூக்ஷ்ம ஞானம் பிரகாசிக்க ஆரம்பிக்கும்போதே சகல ஜீவர்களும் பூதங்களும் வேற்றுமைகளற்றதாகவும் தானாகவும் தெரிய ஆரம்பிக்கின்றன.
* பெற்றோர்களையும் குருவையும் அவமதிக்கிறவன் ரிஷிகளையும் தெய்வத்தையும் அவமதித்தவனாகிறான்.
* இன் சொல்லும் இஷ்டமான வஸ்துக்களைக் கொடுப்பதாலும் விரோதிகளை வசஞ் செய்து கொள்ள வேண்டும்.

## 101 வது நாள்

* தேச யாத்திரை தீர்த்த யாத்திரை மூர்த்தி தரிசனம் சாதுக்களின் சேவை தேவாலாய திருஷ்டி இவைகளால் மனத் தெளிவு உண்டாகின்றன.
* பார்ப்பதாலும் கேட்பதாலும் செய்வதாலும் நடப்பதாலும் நினைப்பதாலும் தூங்குவதாலும் பேசுவதாலும் உள்ளிருக்கிற சக்திகள் வெளியே போய்க் கொண்டிருக்கின்றன.
* உத்தமமான ஞானத்தையடைய ஆரம்பிக்கும்போது உத்தமமல்லாததும் உத்தமத்திற்கு சிறிது குறைந்ததுமான ஞானம் முன்னே பிரசன்னமாகின்றன.

## 102 வது நாள்

* வேண்டுமென்று செய்தாலும் வேண்டாமென்று செய்தாலும் செய்த கர்மத்தின் பலன்கள் செய்தவர்களைச் சேருகின்றன.
* சொந்த தர்மங்களிலிருந்து நழுவிய பிராம்மணனை ராக்ஷஸனென்று சர்வக்ஞ ரிஷிகள் சொல்லுகிறார்கள்.
* முயற்சியும் இயற்கையும் தெய்வமும் இம்மூன்றும் சேர்ந்து கரும பலன்களில் போகங்களைக் கொடுக்கின்றன.
* பிரஹ்மத் தன்மை பெற்ற மனுஷ்யன் ஈஸ்வரனாகிறான்.

## 103 வது நாள்

* ஹிம்சையென்பதை அடியோடு விட்டு உயிருடன் உலகத்தில் வசிக்க முடியாது.
* அஷ்டமா சித்திகளின் ஆசைக்காக யோக மார்க்கங்களை அடைகிறவன் பேராசை கொண்டவனும் பெரிய லாபத்தை அடையாதவனுமாகிறான்.
* மனம் இல்லாத காலத்தில் மனத்தின் ரகஸ்யம் புலப்படும்.
* பரலோகங்களின் ஞானமில்லாத மனிதன் நம்பிக்கையில்லாத வாதங்களை அடைகிறான்.

## 104 வது நாள்

* யோகம் செய்பவர்கள் கல் முள் இல்லாத இடத்தில் வசிக்க வேண்டும்.
* பிராம்மணன் வீணான தானங்களை வாங்கவும் கொடுக்கவும் கூடாது.
* உத்தமமான சாதுக்களுக்கு உத்தமமான மனத்துடன் உத்தமமான இடத்தில் உத்தமமான தர்மத்துடன் உத்தமமானவைகளை உத்தம திருஷ்டியுடன் கொடுப்பதால் உத்தமமான பதவிகளை அடையலாம்.
* நித்திரை பிராணன் இவைகளைத் தாண்டிய ஜீவன் தன்னுருவத்தை இழந்து விடுகிறான்.

## 105 வது நாள்

* பாப புண்ணியங்கலந்த கருமிகளுக்கும் உபாஸகர்களுக்கும் கிடைப்பது சந்திர லோகம்.
* ஜீவ வதை செய்து யாகஞ் செய்கிற சகாமகர்மிகளைத் தேவர்கள் ஸ்வர்கத்தில் ஹிம்ஸிக்கிறார்கள்.
* சொல்பமாகிலும் ஆத்ம ஞான உணர்ச்சியில்லாதவர்களுக்கு இந்த சாஸ்திரார்த்தங்கள் மயக்கத்தையே கொடுக்கும்.

## 106 வது நாள்

* பூரண சாதனமுள்ளவன் வாக்கு மவுனத்தால் பிரயோஜனத்தையும் சாதனமில்லாதவன் அப்பிரயோஜனத்தையும் அடைகிறான்.
* எந்த இடத்தைப் பரிசுத்தமென்று மனம் நினைக்கிறதோ சாதுக்களும் தேவர்களும் சொல்லியிருக்கிறார்களோ வேதம் கூறுகிறதோ அந்த இடத்திலிருந்து கொண்டு தபஸ்யோகம் இவைகள் ஆரம்பிக்க வேண்டும்.
* ஒவ்வொரு மனிதனும் தனக்குக் கிடைத்த ஆகாரத்தில் பாதியை ஏதாவது ஒரு ஜீவப் பிராணிக்குக் கொடுத்துவிட்டு உண்ண வேண்டும்,

## 107 வது நாள்

* கர்ம காண்ட ரகஸ்ய வேதங்களை அறிந்து கொண்டபின் ஞான காண்ட ரகஸ்ய வேதங்களைப் பார்வையிட வேண்டும். இல்லையேல் நாஸ்திக வாதம் உதயமாகும்.
* உலகத்திற்கு விரோதமில்லாததும் இகழ்ச்சி இல்லாததும் பகவத் சம்மதமானதுமாகிய ஜீவனத்தை எல்லா ஆஸ்ரமிகளும் வருணத்தார்களும் செய்ய வேண்டும்.
* புத்தியானது ஜெயிக்கப்படுமானால் அணிமாதி அஷ்டமா சித்திகளும் வந்து சேருகின்றன.

## 108 வது நாள்

* கிருத யுகம் தவிர மற்ற யுக காலங்களில் சந்தேகமுள்ள பலர் பிறக்கின்றனர்.
* யோக மகிமையாலுண்டாகிற அஷ்டமா சித்திகளில் மயங்கி விட்டவன் மீளாத பரம மோக்ஷத்தை அடைய மாட்டான்.
* புத்தியில்லாதவர்களும் புத்தியுள்ளவர்களுமான சிஷ்யர்களை சந்தோஷிப்பிக்கச் செய்யுங் குருமார்கள் பிரபஞ்சத்தின் காரண வித்தையை அறிவதில்லை.
* காலத்திற்கும் ஆயுளுக்கும் புத்திக்கும் புண்ணியத்திற்கும் தக்கபடி வேதமானது மாறுபாடடைகிறது.

## 109 வது நாள்

* பயனை உத்தேசித்துச் செய்யப்படுங் காரியங்களெல்லாம் பிரயோஜனமற்றவை களென்று வேதத்தின் கருத்து.
* கரும யோகமல்லாத ஞான யோகமும் ஞான யோகமல்லாத கரும யோகமும் சாதன காலங்களில் பிரயோஜனப்பட மாட்டாது.
* மாறாத உண்மையை அறிய வேண்டுபவர்கள் ஞான பாகமான உபநிஷத் துக்கள் பிரஹ்ம சூத்திரம் ஸ்ரீ பகவத் கீதை இவைகளை ஒருவருடைய பாஷ்யத்தையும் எதிர்பாராமல் அந்தர்முக திருஷ்டியோடு விபரீதமில்லாததும் சந்தேகமில்லாததுமான புத்தியினால் அறிய வேண்டும்.

## 110 வது நாள்

* எதைப் பார்க்கிறோமோ அதெல்லாம் சங்கல்பத்திலிருந்து தோன்றியவை களென்றும் அந்த சங்கல்பம் ஆத்மாவினிடத்துதித்தன வென்றும் ஞானப்பியாசி அறிந்து கொள்ள வேண்டும்.
* உண்மையில்லாதிருப்பதாலும் உறுதியின்றும் பிறழ்ச்சியடைவதாலும் மனதை இருளாக்கி விட்டதாலும் மனிதர்கள் ராஜ யோகத்தை அடைய முடியவில்லை.

## 111 வது நாள்

* அஜாக்ரதையில்லாதிருப்பதாலும் மனத் தெளிவாலும் உண்மையாயிருப்பதினாலும் புத்தி தீக்ஷண்யமாயிருப்பதாலும் ஆசாரியர் சிசுருக்ஷைகளினாலும் மனிதர்கள் ஞானாதிகாரியாகிறார்கள்.
* யோகம் வளர்ச்சியடையும் பொழுது சைதன்யத்தின் பொதுத் தோற்றமுண்டாகிறது. தீர புருஷன் அத்தோற்றமும் பரமாத்மாவின் மாயையென்று கண்டு கொள்ள வேண்டும்.
* கர்மமானது ஞானிகளை பிரவிர்த்திக்கச் செய்யாவிட்டாலும் பிராரப்தம் இருக்கிறவரை கர்மம் அடங்காது.

## 112 வது நாள்

* ஞானமும் காலத்தின் பலத்தாலுண்டாகிறது.
* திரிமூர்த்திகள் பதவி இந்திர பதவி இவைகள் காலத்திற்குட்பட்டது. உண்மையை அறிந்தவர்கள் இவைகளை விரும்ப மாட்டார்கள்.
* ஜீவாத்மா அழிவுடையதென்று கூறுகிற சமயவாதியும் உண்மை கண்டவன்.
* கடவுள் ஒருவரே காலத்திற்கு மேற்பட்டவர்.
* பூமி ஜலம் அக்கினி துறவி அரசன் இவ்வைந்திடங்களிலும் லக்ஷ்மி தேவி அதிக அம்சமிருக்கிறது.

## 113 வது நாள்

* சத்தியம் தானம் தவம் விரதம் பராக்கிரமம் தர்மம் இவ்வாறுமுள்ளவர்களிடம் மஹாலக்ஷ்மீ குடி கொள்ளுகிறாள்.
* மஹம் மேருவின் மேற்புறத்தின் நடு மத்தியில் பிரமலோகமும் அதன் கிழக்கு முதலிய நான்கு திக்குகளிலும் இந்திரன் யமன் வருணன் குபேரன் முதலியவர்களுடைய பட்டணங்களுமிருக்கின்றன.
* நம்பத் தகாததை நம்புகிறதினாலும் உறுதியில்லாததை உறுதியென்று நினைப்பதனாலும் மனிதன் மாறாத துக்கத்தை அடைகிறான்.

## 114 வது நாள்

* சரீரத்தை சுத்தி செய்து கொண்டும் ஜலத்தைச் சுத்தமாய் உபயோகித்துக் கொண்டும் ஜாடராக்கினியைத் திருப்தி செய்வித்துக் கொண்டும் ஆத்மாவை அறிந்து கொண்டுமிருக்கிறவனெவனோ அவனிடம் ஸ்ரேயஸ் தேவதை மாறாதிருக்கிறது.
* கெர்ப்பத்திலிருக்கும் ஜீவனுக்குக்கூடக் கடவுள் கட்டளையிடுகிறார்.
* சோகப்படுவதால் உருவம் தர்மம் ஆயுள் சம்பத்து திடம் இவைகள் கெடும்.

## 115 வது நாள்

* ஸ்துதியிலும் சன்மானத்திலும் ஞான யோக அப்பியாசி விஷம் போல நடுக்கமடைவான்.
* எவனுடைய ஸ்துதியையும் அறிவாளிகள் நினைக்க மாட்டார்கள். பேச மாட்டார்கள்.
* காலையிலெழுந்திருந்து யாரைக் கண்டபோதிலும் சுகப் பிரஸ்னம் வினவ வேண்டும்.

## 116 வது நாள்

* ஆத்ம ஞானமில்லாதவர்களிடம் ஞான யோகி பழகக் கூடாது.
* சந்நியாசிகளையும் பெரியோர்களையும் கண்டால் சிறுவர்களும் மர்மந் தெரிந்தவர்களும் உட்கார்ந்து கொண்டும் மரியாதையின்றியும் இருக்கக் கூடாது.
* கூச்சலிட்டும் தடபுடலாயும் கடுமையாயும் பரபரப்பாயும் பிராண வாயு சிதறும் படியும் யாரிடமும் பேசக் கூடாது. அதனால் ஆயுள் குறைவடைகிறது.

## 117 வது நாள்

* மூடப்படாமலும் சுத்தமில்லாமலும் ரம்யமில்லாமலுமுள்ள ஆகாரங்களைப் புஜிப்பதால் அவிவேகமுண்டாகிறது.
* பரிசுத்தமில்லாதிருக்கிற மனத்தில் ஆத்ம ஞானம் பதிவதில்லை.
* இறைந்து கிடக்கிற தான்யங்களை உடனே எடுத்து விட வேண்டும்.
* மனைவியைத் திட்டவும் அடிக்கவும் கூடாது.

## 118 வது நாள்

* ஈன்ற பத்து நாளைக்குள் பாலைச் சாப்பிடுவதால் தமோ குண விருத்தி உண்டாகிறது.
* இரவில் தயிரையும் சத்துமாவையும் உண்ணக் கூடாது.
* சுவாதந்தரியமாக சரீரமெடுப்பவர்கள் அவதார புருஷர்கள்.
* பிரஹ்ம ஞானத்தை முன்னிட்டுச் செய்யப்படுகிற கர்மம் ஆயிரமடங்கு வீர்யமுடையது.

## 119 வது நாள்

- ✻ கர்ம காண்ட விதி பூர்வமாக மேலாவது ஆஸ்ரமத்தை யடைந்தவன் கீழிறங்கக் கூடாது.
- ✻ பால்யமும் பாண்டித்தியமும் ஞானத்திற்கு முக்கிய ஏது. மவுனமும் மனமும் முக்கியமல்லாத ஏது.
- ✻ எது எது வந்தாலும் வரவேண்டியது தானென்றெண்ணுகிறவன் ஒன்றிலுஞ் சோகப்பட மாட்டான்.

## 120 வது நாள்

- ✻ காலத்தால் துன்பப்படுகிறவர்களைத் தவம் கல்வி தானம் நண்பர்கள் உறவினர்கள் இவ்வகையால் காப்பாற்ற முடியாது. தைரியத்தால் சமாளிக்கலாம்.
- ✻ குருட்டுப் பாடமாக வேதாத்தியயனம் செய்தவன் வருண லோகத்திற்குங் கீழான மின்னல் லோகத்தை அடைகிறான்.
- ✻ மறைப்பில்லாத ஞான திருஷ்டியை மஹான்கள் முன் பெற்றுக் கொள்வது உபநயனம்.

## 121 வது நாள்

- ✻ இந்திரியங்களுக்கு உண்டாகிற சிரமங்களால் கனவு உண்டாகிறது.
- ✻ உத்தமமான குலம் குணம் நடை ஆசாரம் அழகு அதிர்ஷ்டம் ரூபம் கல்வி சீலம் திடம் செல்வம் அதிகாரம் வீர்யம் புத்தி முதலிய ஒழுங்காக அமைந்துள்ள பருவமான ஸ்திரீகளைத் தகுந்த பிரபுக்களான விடபுருஷர்கள் அடைய விரும்புவது போல, சாதனம் சாந்தம் பொறுமை அடக்கம் தவம் முதலிய ஞான பருவமடைந்துள்ள சிஷ்யர்களைச் சர்வேஸ்வரனும் மஹாத்துக்களும் அடைய விரும்புகிறார்கள்.

## 122 வது நாள்

- ✻ ஈஸ்வரன் தன் அதிகாரத்திற்குத் தக்க நூறு வயது வந்தவுடன் பிரஹ்மத்தை அடைகிறான்.
- ✻ மனதின் பரிசுத்தத்துடன் சர்வேஸ்வரனுக்குரிய அணிமா முதலிய அஷ்ட மஹா சித்திகளை அடைய முயற்சிக்கிறானோ அவன் முறைப்படி அவைகளை அடைகிறான்.
- ✻ நித்திரையாலுண்டாகிற குற்றங்களைக் கண்டு யோகியானவன் பிரம்மசரிய விரதத்துடன் நித்திரையை அகற்ற வேண்டும்.

## 123 வது நாள்

* கெட்ட குணங்களாலும் நல்ல குணங்களாலும் பரமாத்மா மறைவுபட்டிருக்கிறது.
* யுக்திக்கு எட்டாத அனுபவத்தை ஆசாரியர் உபதேசிக்க முடியாதாகையால் ஞான திருஷ்டியினாலாவது இந்திரிய மனோ ஏகாக்கிரத்தினாலாவது தானே தெரிந்து கொள்ள வேண்டும்.
* பிரகிருதி புருஷர்களுக்குரிய பேதம் அபேதம் ஜீவாத்மா பரமாத்மா ஒற்றுமை வேற்றுமை இந்நான்கையும் ஞான யோகி தெரிந்து கொள்ள வேண்டும்.

## 124 வது நாள்

* நிவிர்த்தி மார்க்க மஹரிஷியான பத்ரீநாரணர் கூறிய வழியிற் சென்றால் பிறப்பில்லாமையினாலும் பிரவிர்த்தி மார்க்க மஹரிஷியான பிரம்ம தேவர்கூறிய வழியிற் சென்றால் பிறப்பிலும் கொண்டு போய் விடுகின்றன.
* பிரம்மசரியம் கொல்லாமை இரண்டும் சரீர தபசு.
* நாவையும் மனத்தையும் அடக்குவது மானத தவம்.
* வேண்டுமென்றும் வேண்டாமென்றும் இரண்டுமில்லாத தென்றும் மூன்றுவிதமான உபயோகமுள்ளது மனம்.

## 125 வது நாள்

* உருவ மூர்த்தியின் உபாசகர்களுக்கு அஷ்டமா சித்தி உண்டாகிறது.
* பிரகிருதியும் ஜீவனும் யாதொரு அடையாளமுமில்லாதவைகளும் ஆதியும் அந்தமும் இல்லாதவைகளாயிருக்கின்றன.
* ராஜஸ தாமஸ குணங்களை விட்டுவிடுவது தபசு.
* ஜனங்கள் திருஷ்டிக்குப் புலப்படாமல் இவ்வுலகில் சூக்ஷ்ம சரீரத்துடன் பல ரிஷிகள் தேவர்கள் சித்தர்கள் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.
* இந்திரியங்களோடு நின்று விடுவது ஆஸ்ரமங்கள்.

## 126 வது நாள்

* சரீரத்தோடு நின்று விடுகிறது வருணங்கள்.
* எல்லாவற்றையும் தியாகம் செய்வதால் பரமாத்மாவின் அருளுண்டாகிறது.
* ஒரு மதானுஷ்டானமுடையவன் மற்றோர் மதத்தைத் தூஷித்தானானால் அவன் தனது மத விஷயங்களே தெரியாதவனென்று கண்டு கொள்ள வேண்டும்.
* மோக்ஷத்திற்காக முயற்சி செய்யும் அனைவரும் கரும பலன்களை விட்டு விடுவதுதான் சிறந்த வழி.

## 127 வது நாள்

* சுத்தமானவர்களிடத்திலிருந்துஆகாரத்தைப் பெறுவதாலும் ஆகார நியமத்தாலும் ரஜோ குண பாபம் விலகிக் கருவிகள் சுத்தமாகின்றன.
* கரும யோகப் பிராம்மணன் பக்தி யோகப் பிராம்மணன் ஞான யோகப் பிராம்மணன் சுதந்தரப் பிராம்மணன் என்று நான்குவித பிராம்மணர்களிருக்கிறார்கள்.
* இலுமிச்சம் பழத்திற்கு எத்தனை காலம் எத்தனை மாதிரி உபதேசம் செய்தாலும் அதன் இயற்கை குணம் சிறிதும் மாறுபடாதது போல, பூர்வ ஜென்மாந்தர கர்ம அஞ்ஞான வாசனையுடைவர்களுக்கு எத்தனைவிதமாக எத்தனை காலம் வரை எத்தனை மஹான்கள் போதித்தாலும் யாதொரு பலனுமுண்டாவதில்லை.

## 128 வது நாள்

* பழமையான கர்ம சக்தியை அனுசரித்து ஜெகத் பரிபாலன யீஸ்வரன் ஜீவ கோடிகளின் நன்மை தீமைகளை நியாயப்படி செய்கிறாரென்று வேதம் கூறுகிறது.
* தேக சம்பந்த முக்தனுக்கு அரூபப் பிரஹ்மானுபவம் அனவரதமும் சித்திக்கிறதில்லை.
* அதிகாரிகளுக்குத் தக்கவாறு எல்லா மதங்களையும் ஏற்படுத்தியது பரமேஸ்வரன்.

## 129 வது நாள்

* பிரத்யகாத்ம தரிசனம் செய்தவனுக்கும் பரோக்ஷ ஞானிக்கும் மரண காலத்தில் ஹ்ருதயம் துடிக்கும்.
* பிரம்ம லோகத்திலுள்ள அரமாண்டலி என்ற பெரிய தடாக மத்தியிலுள்ள பிரம்மசாரிக் கூட்டத்துடன் இவ்வுலக பிரம்மசாரிபோய்ச் சேருகிறான்.
* நாமம் வாக்கு பிராணன் சித்தம் கருமசாரம் தியானம் விஞ்ஞானம் இவைகள் முறையே விசேஷமுடையது.

## 130 வது நாள்

* சன்னியாஸ மென்ற தியாகமும் பிராணிகளுக்கு உபகாரம் செய்வதும் ஓர் வகையான தவம்.
* பிராணன்கள் இந்திரியங்கள் இவற்றின் காரியங்கள் ஆத்மாவிடம் செல்லாமல் மனத்தோடு நின்று விடுகின்றன.
* சகல நாடிகளையும் அடக்கி விடக்கூடிய ரேசகத்தை ஒரு முகூர்த்த காலம் பழகியவர்களுக்கு ஆகாயத்திற் சஞ்சரிக்கிற ககன சஞ்சார சித்தர்கள் தோற்றுகிறார்கள்.

## 131 வது நாள்

* தான் சித்தி பெற வேண்டியும் உலகம் சித்தி பெற வேண்டியும் எல்லோரும் புண்ணிய கருமங்களைச் செய்ய வேண்டும்.
* எல்லாக் கருமங்களையும் துறந்த ஞானிகளுங்கூட உலக மரியாதையைக் காப்பாற்ற வேண்டிக் கருமம் செய்கிறார்கள்.
* வெறுப்புள்ளவைகளில் துவேஷமும் கோபமும் விருப்புள்ளவைகளில் சந்தோஷமும் பிரியமும் இல்லாதிருப்பது சாதுக்களின் லக்ஷணம்.

## 132 வது நாள்

* பிரஹ்ம வித்தைக்கு விரோதமான உபவாஸத்தைத் தவமென்று சாதுக்கள் எண்ணுகிறதில்லை.
* பகலில் உறங்காதிருப்பவன் எப்போதும் உறங்காதவனாகிறான்.
* வெளியில் அபிமானத்தைக் காட்டி உள்ளில் இல்லாதிருப்பவனை அவிவேகமும் ஆசையும் ஒன்றும் செய்வதில்லை.
* மலைகளில் மண் கண்ட பூமிகளில் வசிப்பதால் யோகிகளுடைய யோக உஷ்ணம் விலகுகிறது.

## 133 வது நாள்

* பருவமுள்ள ஸ்திரீயும் புருஷனும் பருவ காலத்தில் பருவத்தோடு நியாயமான புணர்ச்சியை விரும்பாவிடில் சுத்தமான பிரஜைகள் உற்பத்தியாகிறதில்லை.
* எவன் நன்மையையோ தீமையையோ தான் செய்கிறதாக நினைக்கிறானோ அவன் புத்தி குற்றமுள்ளதென்றும் உண்மையை அறியாததென்றும் ரிஷிகளுடைய கருத்து.
* யமன் யம தண்டனை வியாதி உபத்திரவம் துஷ்ட மிருகங்கள் துஷ்ட ஜந்துக்கள் மனைவி மக்கள் சத்துரு இவைகளுங்கூட மோக்ஷ சாதனமென்று பெரிய விசாரணையுடைய ரிஷிகள் சொல்லுகிறார்கள்.

## 134 வது நாள்

* உலக வஸ்துக்களெல்லாம் பிரஹ்மத்தினிடத்திலிருந்துண்டாகிற தென்று அனுபவத்தில் தெரிந்து கொண்டவனை அபிமானமாவது அகங்காரமாவது ஒன்றுஞ் செய்ய முடியாது.
* அனித்திய விசாரணைகளும் பரம்பரையாக நித்திய விசாரணைக்குச் சாதகமாகவே முடிகிறது.
* நம்மை நம்பி ஒருவர் ஒரு ரகஸ்யத்தைச் சொன்னால் அதை வெளியிடக் கூடாது.

## 135 வது நாள்

* கிடைத்த ஆகாரத்தை ஒருவருக்கும் கொடாமல் தான் மட்டும் உண்பதால் மார்க்க தோஷம் சம்பவிக்கிறது.
* பாவம் வேண்டாதவர்கள் மீன் மாம்ஸம் லோகங்கள் கள் தேன் லாகிரி பதார்த்தங்கள் அன்னம் ஸ்திரீ புத்திரன் இவைகளை விற்கக் கூடாது.
* சூரிய பகவானது உதய காலத்திலும் அஸ்தமன காலத்திலும் நித்திரை செய்யக் கூடாது. அதனால் ஆத்ம சக்தி குறைவு படுகிறது.

## 136 வது நாள்

* பல புத்திரர்களைப் பெற்று தரித்திரம் வியாதி இவைகளாற் கஷ்டப்படுகிறவர்கள் முன் ஜென்மத்தில் மித்திரத் துரோகம் செய்தவர்களென்று தெரிந்து கொள்ள வேண்டும்.
* பிரவிர்த்தி மார்க்கங்களும் காலாந்தரத்தில் மோக்ஷ சாதனமாக முடிகிறது.
* நிவிர்த்தி மார்க்கமும் பிரவிர்த்தி மார்க்கமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கிறது.

## 137 வது நாள்

* தன்னிடத்திலுள்ள ஜலத்தை தாகம் உள்ள ஜனங்களுக்குக் கொடா விட்டால் பாபம் சம்பவிக்கிறது.
* பல ஜனங்களுக்கு உபயோகமாகக் கூடிய எந்த வஸ்துவையும் பாழ்படுத்துவதால் பெரிய பாபம் சம்பவிக்கிறது.
* சொந்த மனைவியின் ருது காலத்தை உபேட்சிக்கிற கிரஹஸ்தனுக்கு சிரேயஸ் குறைகிறது.

## 138 வது நாள்

* உள்ளத்தின் ஒழுங்கு குறைவுபடும்போது உண்மை மறைகிறது.
* ஓடுகிற நதி ஸ்னானத்தால் தேஜஸ் புண்ணிய பலம் இவைகளுண்டாகின்றன.
* சொந்த மனைவியையன்றி மற்றெந்த ஸ்திரீகளோடும் காம சங்கல்பத்தோடு பேசக் கூடாது.
* மஹா தபஸ்ரேஷ்டர்களும் பிரஹ்ம ரிஷிகளுங் கூடத் தன்னைப்பற்றி கர்வமடைந்தால் குறைவடைகிறார்கள்.

## 139 வது நாள்

* பற்றற்ற அறிவை அடைகிற காலத்தில் ஆண்டவன் அவதாரமாகி ஆசாரிய வடிவமாகி வருகிறான்.
* மோக்ஷத்தை உத்தேசித்துத் தர்மம் செய்ய வேண்டும்.
* தான ஞானவான் பரிசுத்தன் பாக்கியசாலி பக்தன் என்று தானே எண்ணுவதால் தபோ தேவதை சிரிக்கிறது.
* நல்ல சாதுக்கள் எதைக் கேட்டாலும் கொடுத்து விடுவதால் சுகிர்தம் உண்டாகிறது.

## 140 வது நாள்

* பிறவியானது துன்பமென்றெண்ணாதவர்களுடன் பழகக் கூடாது.
* எந்தமத தெய்வங்களையும் சாஸ்திரங்களையும் ஆசாரியர்களையும் வேதங்களையும் நிந்திக்கலாகாது.
* டம்பத்திற்காகவாவது பயத்தினாலாவது பரிகாசத்திற்காகவாவது துக்கத்திற்காகவாவது சிநேகிதத்திற்காகவாவது செய்யப்படுகிற தர்மமானது மோக்ஷ பலனைக் கொடுப்பதில்லை.

## 141 வது நாள்

* ஏகாக்கிர புத்தியின்றிச் செய்யப்படுகிற தானம் தபம் ஜெபம் ஹோமம் பாராயணம் தியானம் பூஜை முதலிய மற்றக் காரியங்களும் பிரயோஜனப் படுவதில்லை.
* ஆயிரக்கணக்கான வருஷங்கள் அசைவற்று அன்னமின்றியிருக்கப்பட்டவர்களுக்கும் பல்லாயிரம் சிஷ்யர்களுக்குப் பிரஹ்ம ஞானம் போதிக்கின்றவர்களுக்கும் பரமாத்மா ஞானோதயம் உண்டானதாகச் சொல்லிவிட முடியாது. அவர்களில் அஞ்ஞானிகளுமுண்டு.

## 142 வது நாள்

* பஞ்சேந்திரியங்களுக்கும் மனதிற்கும் பணிவிடை பண்ணக் கூடாது.
* எல்லாப் பிராணிகளுக்கும் பயத்தை உண்டு பண்ணாதிருக்கிற தர்மத்திற்குச் சரியான வேறொரு தர்மமுமில்லை.
* அந்தர்முக சாதனங்கள் நிறைவேறும்போது பகிர்முக காரியங்கள் சாதனங்கள் குணங்கள்தானே ஓய ஆரம்பிக்கின்றன.
* ஞானாப்பியாஸ முடையவர்களும் தேஜஸ் சுகம் தீரம் இவைகளை விரும்பியவர்களும் பேசுவதற்குப் பயப்படுகிறார்கள்.

## 143 வது நாள்

* யாதொரு கட்டுப்பாடுகளுமின்றி எந்த வருணாஸ்ரமத்தார்களும் யோக ஸமாதி அப்பியாசிக்கலாமென்று ஜாண்டில்ய மஹரிஷி கூறியிருக்கிறார்.
* வேதத்தை அலட்சியம் செய்வதால் பரமாத்மாவையும் ஆகமத்தால் ஜெகதீஸ்வரனையும் ஸ்மிருதியால் சிருஷ்டி கர்த்தர்களையும் வேதாங்கத்தால் பிரம்ம தேவரையும் சாஸ்திரத்தால் ரிஷிக் கூட்டங்களையும் இதிகாசங்களால் பிதுர் தேவர்களையும் மந்திரங்களால் சூரியனையும் அலட்சியம் செய்ததா கிறது. அதனதன் பாபங்களையும் அடைய நேருகிறது.

## 144 வது நாள்

* பரமேஸ்வரனுடைய சேவையைச் செய்வது அஹிம்சா தர்மத்தைக் காப்பாற்றுவது நிரந்தர முனீஸ்வரர்களை நமஸ்காரம் செய்வது இவைகள் சம்சாரத்தின் சாரத்தை அறிவதற்கு ஏதுவாகிறது.
* நித்தியமில்லாத பதவிகளையும் சுகங்களையும் விரும்புகிறவர்களையும் நம் யோக்யதை மரியாதை உணவு உடை மனைவி வீடு இவைகளை விரும்பு கிறவர்களும் நல்வழியில் பொருள் சம்பாதிக்க வேண்டும்.
* ஆரம்பத்தில் துவைதம் மத்தியில் விசிஷ்டாத்வைதம் முடிவில் அத்வைதம் இம்மூன்றுமில்லாதிருப்பதே முக்தி.

## 145 வது நாள்

* விதேக முக்தியில்தான் பரமானந்தப் பிராப்தியும் கிருத கிருத்யத் தன்மையும் விளங்கும்.
* அதி சூக்ஷ்ம புத்தியும் நிஷ்காம புண்ணிய மிகுதியும் பந்தமற்ற மனதும் குவிந்த சித்தமும் கட்டுப்பாடில்லாத பரதந்திர சுபாவமும் யதார்த்தமாகவுள்ளவன் அமிர்த பதவியை அடைகிறான்.

## 146 வது நாள்

* உலக நன்மையையும் மோக்ஷத்தையும் விரும்பியவர்கள் யாவரும் பஞ்ச மூர்த்திகள் தேவர்கள் உலக பாலர்கள் ரிஷிகள் பிதுர் தேவதைகள் சித்தர்கள் சப்தரிஷிகள் சிருஷ்டி கர்த்தர்கள் இவர்களது நமஸ்காரத்தை தினந்தோறும் செய்து வரவேண்டும்.
* பிரபஞ்ச சிருஷ்டியினுண்மையை அறிய முயற்சிப்பதால் யாதொரு பிரயோஜனமும் ஏற்படுவதுமில்லையென்றும் பிரபஞ்ச ஆதார வஸ்துவை ஞானத்தினாலறிந்து கொள்ள வேண்டுமென்றும் அதீத ஞான சிரேஷ்டர்கள் கூறுகிறார்கள்.

## 147 வது நாள்

* சூக்ஷ்ம எண்ணம் சூக்ஷ்ம பார்வை சூக்ஷ்ம ஆகாரம் சூக்ஷ்ம வித்தை சூக்ஷ்ம யோகம் சூக்ஷ்ம வசனம் சூக்ஷ்ம கமனம் சூக்ஷ்ம உறுதி சூக்ஷ்ம பக்தி சூக்ஷ்ம ஞானம் சூக்ஷ்ம சரீரம் சூக்ஷ்ம பூமி சூக்ஷ்ம நிலைமை சூக்ஷ்ம சக்தி இவைகளை உடையவர்கள் ரிஷிகள்.
* புத்தியானது காலத்திற்குட்பட்டதாகையால் காலமே கர்மத்திற்குத் தக்கபடி புத்தியை மாற்றி விடுகிறது.
* பிரத்யகாத்மாவை முதலில் அறிந்து பின் பிரஹ்மத்தில் வியாபிக்க வேண்டும்.

## 148 வது நாள்

* ஞானம் அஞ்ஞானம் இவ்விரண்டும் எல்லோருடைய சரீரங்களிலுமிருக்கின்றன.
* பாபத்தைச் செய்தவன் செய்த பாபத்தைமறைத்துக் கொண்டு தைரியத்துடனிருப்பானானால் நாசத்தை அடைகிறான்.
* கல்வியும் செல்வமும் ஓரிடத்திலிருக்கும்போது கருணை குறைகிறது.
* அஞ்ஞானமில்லாதவன் ஒரு முகூர்த்தத்திற்குமேல் உலகத்தில் உயிரோடிருக்க முடியாது.

## 149 வது நாள்

* தைரியம் யுக்தி பராக்கிரமம் சுத்தம் ஆசாரம் துணிவு கல்வி ஆராய்ச்சி செல்வம் அதிகாரம் அன்பு சாஸ்திரம் ஆசாரியன் தெய்வம் ஜீவ காருண்யம் கருமம் வேதம் நிஷ்டை இவைகளை கொண்டிறாத மதம் க்ஷீணித்து விடுகின்றன.
* ஆரம்பமாகிய அப்பியாஸமானது இடை கிடைக்குமானால் ஓட ஆரம்பிக்கும்.
* சங்கல்பத்தினால் கட்டுப்பட்டவர்களுக்கே பல நிபந்தனைகள் வேதத்திற் கூறப்பட்டிருக்கிறது.

## 150 வது நாள்

* மனதில் எந்த நினைப்பு வந்த போதிலும் அந்த நினைப்பை விசாரித்து முடிவு செய்து அந்த நினைப்புக்கு இடங் கொடுப்பது அப்பியாசிகள் வழக்கம்.
* ஸ்தூல சரீரத்துடன் செல்ல முடியாத இடங்களுக்குச் செல்வதற்காகச் சூக்ஷ்ம சரீரத்துடன் செல்லப் பழகியவர்களுக்கு சித்தர்களென்ற பெயர்.
* சதா ஆத்ம நாட்டமுடையவர்களுக்கு சாஸ்திரார்த்தங்களும் வாத்திமத் தன்மையும் பேச்சும் பாரமாகத் தெரியும்.

## 151 வது நாள்

* முக்திக்குச் செல்லுகிற வழியில் விஷய ஆசையென்கிற அக்னி நதியும் ஞானமென்கிற மயிர்ப் பாலமும் இருக்கின்றன.
* உடம்பை ஆத்மாவாகக் கொண்ட மதம் முதல் ஆத்மாவை ஏகாத்மாவாகக் கொண்ட மதம் வரையுள்ளவர்கள் சங்கல்ப பேதத்தினால் வித்தியாசப்படுகிறார்கள்.
* பரமாத்மாவின் ஹம்ஸ பூதனான ஜீவாத்மாவாகிய தன்னை அறிந்து கொண்ட பின்பு பரமாத்மாவை அறிய வேண்டுமென்று பதஞ்சலி முனிவர் கூறுகிறார்.

## 152 வது நாள்

* ஒருவர் சரீரத்தை நாம் தொடவும் மற்றொருவர் நமது சரீரத்தைத் தொடவும் செய்வதால் தீமைகள் பல உண்டாகின்றன.
* மனிதர்கள் புண்ணியத்தால் தேவர்களாவதும் அந்தக்கரும தேவர்களது புண்ணியம் நசித்த பின் மனிதர்களாவதும் சகஜமாயிருக்கிறது.
* மிருத்யு தேவதை என்ற பெண்ணின் கண்களிலிருந்து சிந்திய நீர்த் திவலைகள் வியாதிகளாக மாறிக் காலம் வரும்போது எல்லா ஜீவர்களையும் பீடிக்கிறது.
* சங்கல்ப ரகித சாதுவை அடிக்கடி சந்திப்பது சகஜ ஞானிகள் வழக்கம்.

## 153 வது நாள்

* மதப் பிடிவாதமுடைய மனுஷ்யர்களுக்கு மனத் தெளிவும் உண்மை ஞானமும் உண்டாகுமென்று சுருதிகளும் மஹத்துக்களுங் கூறவில்லை.
* பிரஹ்மத்தைத் தவிர மற்ற கற்பித வஸ்துக்களைப் பற்றியே கேள்விகள் கேட்பதும் பதில் சொல்லுவதும் வேதம் கூறுவதுமாயிருக்கிறது.
* பந்தத்திற் கட்டுப்பட்ட ஜீவர்களெல்லாம் முறையிட்டுச் சொல்லிக்கொள்வது ஜெகதீஸ்வரனிடத்திலேயே தவிரப் பிரஹ்மத்தினிடத்தில்லை.
* ஜீவ நிர்ணயமில்லாத அத்வைதிகள் மாயாவாதிகள்.

## 154 வது நாள்

* பிறர் பொருளைக் கவரக் கூடாதென்று தர்ம சாஸ்திரம் சொல்லியிருக்க அந்த தர்மமானது பலமில்லாதவர்களால் ஏற்படுத்தப்பட்டதென்று பலமுடையவர்கள் நினைக்கிறார்கள்.
* அப்ரத்யக்ஷமான வேதத்திலிருந்து ப்ரத்யக்ஷமான வேதங்களுண்டாயிருக்கின்றன.
* எவ்வளவு தூரம் ஆழ்ந்து யோஜித்துப் பார்க்க வேண்டுமோ அவ்வளவு தூரம் ஆழ்ந்து யோஜித்துப் பார்த்ததில் பரமாத்மாவே ஜீவாத்மாவாகவும் பிரபஞ்சமாகவும் தோற்றுகிறதென்று நிச்சயமாகத் தெரிகிறது.

## 155 வது நாள்

* பஞ்சமூர்த்திகள் முருகன் கணபதி பிரஹ்ம ரிஷிகள் இந்திரன் எமன் கருடன் ஆதிசேஷன் இவர்கள் சத்திய சங்கல்பவாதிகள்.
* எந்த வுலகத்தில் கணக்குக்கு அதிகமான பிரஜைகளும் பிராணிகளும் உண்டாகின்றனவோ அவைகளையெல்லாம் சிருஷ்டி கர்த்தரே நாசமாக்கி விடுகிறார்.
* அக்ஷரப் பிரஹ்மத்தின் சிருஷ்டியையும் பிரகிருதியின் சிருஷ்டியையும் அறிந்தவர்கள் ஒன்றையும் நித்தியமாகச் சொல்லுகிறதில்லை.

## 156 வது நாள்

* உலகத்தின் ரகஸ்யம் வேதம். வேதத்தின் ரகஸ்யம் சத்தியம். சத்தியத்தின் ரகஸ்யம் அடக்கம் அடக்கத்தின் ரகஸ்யம்தானம். தானத்தின் ரகஸ்யம் தவம். தவத்தின் ரகஸ்யம் சந்நியாஸம். சந்நியாஸத்தின் ரகஸ்யம் சுகம். சுகத்தின் ரகஸ்யம் சகுணம். சகுணத்தின் ரகஸ்யம் நிர்க்குணம். நிர்க்குணத்தின் ரகஸ்யம் பிரஹ்மம் என்றறிய வேண்டும்.
* மாயாவாதிகளுக்கு சுஷுப்தி புருஷனே தெய்வம்.
* ஜீவன் மாயை இவைகளை அங்கீகரியாமல் பேசுகிறவன் விஷயஞ் தெரியாதவன்.

## 157 வது நாள்

* பிரபஞ்ச அதீத வஸ்து தரிசனமானபின் உலகம் பொய்.
* சாஸ்திர ஞானத்தைக் கொண்டு உலகம் சாஸ்திரம் வேதம் மூர்த்தி பாபம் புண்ணியம் பிறப்பு இறப்பு இவைகளைப் பொய்யென்பவன் யம தண்டனைக்குட்படுகிறான்.
* சர்வ தத்துவங்களையும் தள்ளிக் கொண்டுப் போகப் போக எது தள்ளப்பட வில்லையோ தள்ள முடியாதோ அது கடவுள்.

## 158 வது நாள்

* மயக்கமும் மறைப்புங் கொண்ட மனத்துடன் வாழ்வதைக் காட்டிலும் உயிரை விட்டுவிடுவது சிலாக்கியம்.
* நினைப்புடன் அப்பியாஸம் செய்யும்போது நினைப்பில்லாமல் மறைப்பின்றி எப்போது ஆகியதோ அப்போது நிருவிகல்ப சமாதி பெற்றதாகிறது.
* மதஸ்தாபன கர்த்தாக்களான ஞானிகளெல்லோரும் பரமாத்ம சுகத்தைக் காட்டிலும் மோக்ஷ உபாயமான உலக வுபகாரமே சிறந்ததென்று நினைத்து விட்டார்கள்.

## 159 வது நாள்

* தர்மத்திலும் பொருளிலும் ஆசை கொண்டவனாயிருந்த போதிலும் மோக்ஷத்தில் தீவிர ஆசையுள்ளவனுக்கு ஆசாரியர் ஞானோபதேசம் செய்யலாம்.
* சிரவண மனன நிதித்தியாசனங்களால் பரமாத்மாவை அனுபவத்தில் அறிந்தவன் இவ்வுலகத்திலேயே முக்தன்.
* உண்மையான பக்தர்களுக்கும் பேராசை கொண்டவர்களுக்கும் நித்திரை வருவதில்லை.

## 160 வது நாள்

* ஸ்தூல சரீரத்தை விடும்பொழுது ஜீவன் எதைக் கருதுகிறானோ அதையே மறுஜென்மத்தில் அடைகிறான்.
* சவிகல்ப சமாதி காலத்தில் ஸ்பரிச இந்திரியமில்லை.
* சகல வஸ்துக்களும் ஞானத்திற்குச் சாதனமாகவும் அசாதனமாகவும் இருக்கிறது.
* ஆபத்துக் காலத்தில் அதர்மத்தைச் செய்தவனும் கர்மத்தை அடைகிறான்.
* ஆகாச கமனம் பரகாயப் பிரவேசம் முதலிய சித்திகளில் யோகி மயங்கு வானானால் யோகம் சித்திக்க மாட்டாது.

## 161 வது நாள்

* மனமில்லாதபோது மனத்தின் அதிதேவதையான பரமாத்மா பிரசன்னமாகிறது.
* ஞானியும் யோகியும் நிருவிகல்ப சமாதியினின்று விழித்தவுடன் கண்கள் அக்கினி ஜ்வாலை போன்றிருக்கும்.
* ஜெயமுடையவனைத் தெய்வமென்று எல்லா வுலகங்களிலும் கொண்டாடுகிறார்கள்.
* ஆத்மாவினின்று சங்கல்பமும் அதன்பின் முறையே காமம் துக்கம் லோபம் அதிகாரம் ஆத்திரம் பாபம் பரபரப்பு அறியாமை இவைகள் உண்டாகின்றன.

## 162 வது நாள்

* ஞானியும் இச்சையாற் பந்தப்படுகிறான்.
* பாரத கண்டத்திலுள்ள வேத சம்பந்தமான ஷண்மத தெய்வங்களே கடவுளின் கற்பிதமென்று கூறும்போது மற்ற மத தெய்வங்களைப் பற்றிக் கூற வேண்டிய தொன்றுமில்லையென்று ஞான மதத் தலைவர் கூறுகிறார்.
* பிராம்மணனென்றும் சூத்திரனென்றும் பஞ்சமனென்றும் பெண்ணென்றும் ஆணென்றும் நல்லவனென்றும் கெட்டவனென்றும் அபேத ஞானிகள் நினைப்பதில்லை.

## 163 வது நாள்

* எதனாலாவது ஒருவன் முன்னுக்கு வருவானானால் அது மற்றவர்களைப் பாதிக்கிறது.
* வேத வேதாந்த சாஸ்திரங்களை அளவு கடந்து கற்று விட்டதனாலும் எண்ணிறந்த தான தர்மங்களைச் செய்ததனாலும் கடுமையான தபசுகளினாலும் மந்திர ஜெபங்களினாலும் ஆசாரங்களை அனுஷ்டிப்பதனாலும் யாகாதிகளினாலும் பிரஹ்மத்தை அடைய முடியாது.
* ஞானாப்பியாசிகள் வாசனைகளையாவது ரஸங்களையாவது சுகங்களையாவது அனுசரிக்கவுங் கூடாது விடவுங் கூடாது.

## 164 வது நாள்

* தனது சிசுக்களை தந்தை அடக்குவதுபோலப் பலாத்காரமாகச் செல்லுகிற இந்திரியங்களையும் மனத்தையும் ஒரு வழிப்படுத்துவது சகல தர்மங்களுக்கும் மேலான தவம்.
* எந்த வடிவமும் தன் வடிவம் அல்லது கடவுளின் சொரூபமென்று தெரிந்து கொண்டவனைப் பரமேஸ்வரர் பரீக்ஷை செய்கிறதில்லை.
* ஆசையை அடியோடு விட்டுவிட்டவன் ஞான யோகத்திற்கு அதிகாரி.

## 165 வது நாள்

* ஆசையை விட்டும் விடாதவன் பக்தி யோகத்திற்கு அதிகாரி.
* ஆசையை கொஞ்சமாகிலும் விடாதவன் கர்ம யோகத்திற்கு அதிகாரி.
* ஜீவேஸ்வர ஜகத்துக்களை வியவகார தசையில் சத்தியமென்று வேதம்கூறுகிறது.
* சித்திரப் பதுமைபோல் அளவிறந்த காலம் நிஷ்டையிலிருந்து விழித்தவர்களும் பல சந்தேகங்களைத் தெளிந்து கொள்ளுகிறதற்காக உலகத்திற் சஞ்சரிக்கிறார்கள்.

## 166 வது நாள்

* ஈஸ்வரப் பிரசாதம் காசியில் மரணம் குற்றமற்ற கருமம் நல்ல வமிச ஜனனம் நல்ல காலம் இவைகளால் மீளாத முக்தி கிடைக்கிறதில்லை.
* எல்லாப் பிராணிகளையும் தானாகப் பார்ப்பது தானங்களிலும் மேலானது.
* யானையின் காலடியில் மற்றப் பிராணிகளின் காலடிகள் எப்படி அடங்குகிறதோ அப்படி உத்தமமான துறவியின் பதத்தில் இந்திரன் முதலிய தேவர்களின் பதவிகள் அடங்கியிருக்கிறது.
* எல்லாச் சங்கல்பங்களையும் தள்ளிவிட்டுச் சித்தத்தைப் புத்தியில் செலுத்திக் காலத்தை ஜெயிக்க வேண்டும்.

## 167 வது நாள்

* தன்னிடத்தில் தன்னைப் பார்க்கிறவனெவனோ அவனே உத்தம சன்னியாசி.
* நினைப்பில்லாதவனிடத்தில் மிருத்யு தேவதை செல்லுகிறதில்லை.
* சிருங்கார ரசம் காம ரசம் சோக ரசம் ஆனந்த ரசம் ரௌத்ர ரசம் இவைகளை உ;ண்டாக்குகிற சாஸ்திரங்களை ஞான யோக பக்தி யோக இராஜ யோக அப்பியாசிகள் படிக்கக் கூடாது.
* கரும யோகம் வெகு தூரத்திலிருப்பதையும் பக்தி யோகம் சமீபத்திலிலுள்ள அன்னிய வஸ்துவையும் இராஜ யோகம் தனக்குள்ளிருக்கிற துவைதத்தையும் அதன் ஜோதியையும் ஞான யோகம் தன்னையும் போதிக்கிறது.

## 168 வது நாள்

* புராணங்கள் ஆரம்பத்தில் மயக்கமும் மத்தியில் தந்திரமும் முடிவில் தெளிவும் உண்டாக்கியிருக்கின்றன.
* தானும் ஒருவரையும் நிந்தியாமலும் பிறர் தன்னையும் நிந்தியாமலுமிருந்து கொள்ளுகிறவன் உத்தம புருஷன்.
* சகல வேதங்களாலும் சப்தங்களாலும் பிரமாணங்களாலும் இன்னொருவரைக் கொண்டும் மற்றெவ்வித வெளி உபாயங்களைக் கொண்டும் அறிய முடியாத பரமாத்மாவைத் தன்னுடைய அனுபவத்தினால் யோகிகள் அறிகிறார்கள்.

## 169 வது நாள்

* தர்க்க சாஸ்திரத்தால் கெட்டுப் போன மனமுடையவர்களுக்கு ஆத்ம பிரஹ்ம ஞானத்தில் நம்பிக்கையிருப்பதில்லை.
* எப்போது ஒரு பொருளை விரும்புகிறதோ அப்போது அது மனமாகிறது.
* ஒரே பரமாத்மாவே சகல வடிவமாய் எல்லாக் காரியங்களையும் தானே செய்கிறது.
* சுக துக்கங்களை அடைகிற பிராணிகளைக் கண்டு எவன் இன்ப துன்பங்களை அடைகிறதில்லையோ அவன் திடப் பிரக்ஞன்.

## 170 வது நாள்

* பயனில் விருப்பமின்றிச் செய்யப்படுகின்ற புண்ணிய கர்மாவானது முன்னுள்ள கெட்ட கர்மாவையும் நாசஞ் செய்து விடுகிறது.
* பத்து இந்திரியங்கள் நான்கு கரணங்கள் இவைகளை அந்தந்தத் துறைகளில் விடாது தடுத்தல் தபஸ் அகப்புறச் சுத்தம் பொறுமை கல்வி அடக்கம் ஆத்ம ஞானம் இவைகளைக் கொண்டவன் பிராம்மணன்.
* ஆத்ம ஞானத்தையும் அரிய குணங்களையுங் கண்டு தெளிய முடியாமல் சித்தியையும் கல்வியையும் வசனத்தையுங் கண்டு மயங்குகிறவர்கள் அற்ப புத்தியுடையவர்கள்.

## 171 வது நாள்

* ஞானத்தைக் காட்டிலும் கர்மமே பெரிய சக்தியுடையதென்று ஜைமினி மஹரிஷி சொல்லுகிறார்.
* மனதிற்கு நடுக்கத்தை உண்டு பண்ணக் கூடியவைகளை விலக்கி விடுவது மந்திர யோகம்.
* சரீரம் இந்திரியங்கள் விஷயங்கள் பிராணன்கள் மனம் புத்தி ஜீவன் மூலப் பிரகிருதி பரமாத்மா இவைகள் முறைப்படி மேலானது.
* வருணாஸ்ரம தர்மங்களும் பிரஹ்ம ஞானத்திற்குச் சாதனமே யன்றி வேறில்லை.

## 172 வது நாள்

* மோக்ஷ சாதனம் நிறைந்துள்ள நாட்டில் உயிருடனிருப்பதையே புண்ணிய புருஷர்கள் கருதுகிறார்கள். அதற்காக உடம்பையும் விடத் தயாராகவுமிருக் கிறார்கள்.
* எவன் கூட்டத்தைக் கண்டால் பாம்பைக் கண்டதுபோலவும் சன்மானத்தைக் கண்டால் மரணத்தைக் கண்டது போலவும் ஸ்திரீகளைக் கண்டால் பிரேதத்தைப் பார்க்கிறது போலவும் பார்த்துப் பயப்படுகிறானோ அவன் உத்தமமான பிராம்மணனென்று பிரம்ம தேவர் கூறுகிறார்.

## 173 வது நாள்

* எந்தவிதத்திலாவது பரமாத்மாவை அறிந்தால் அது உயர்ந்த ஆஸ்ரமம்.
* தன்னை யார் நிந்தித்தாலும் தான் நிந்தியாமலிருக்கிறவன் சீக்கிரம் பரம்பொருளை அடைகிறான்.
* கடவுளும் கடவுளை உணர்ந்த ஞானிகளும் யாதொரு கட்டுப்பாடுமில்லாதிருக்க முடியாது.

## 174 வது நாள்

* எதையாவது உடுத்து எதையாவது உண்டு எங்கேயாவது படுத்து எப்படியாவது இருப்பவனைத் தேவர்கள் பிராம்மனென்கிறார்கள்.
* மனதைப் பிரஹ்மத்திற் கறைத்துப் பழகுவது சமாதி.
* ஒருவனுடைய அபவாதத்தையும் ஒருபோதும் கேட்காமலும் சொல்லாமலும் ஒன்றையும் ஆவலுடன் பாராமலுமிருப்பவன் கர்ம சந்நியாசி.
* காமிய கர்ம சகுணத் தியானமுடையவன் தூமாதி மார்க்கமாகப் பிரம்ம லோகம் சென்று திரும்பி விடுகிறான்.

## 175 வது நாள்

* ✻ எவன் பஞ்சபூத ஹம்ஸ ஸ்தூல சரீர முதல் பரமாத்மா வரை சென்று விடுகிறானோ அவன் பிரஹ்மமாகிறான்.
* ✻ ஒருகால் பரமாத்மாவிடத்துப் பற்றிக் கீழிறங்கிய மனத்தை மறுபடியும் அவ்விடத்திலேயே சேர்த்துப் பழகுவதாலுண்டாவது சகஜ நிஷ்டை.
* ✻ பரமேஸ்வர வடிவ ஜகத்ரக்ஷக ஆக்ஞாரூப பரமகுரு பிரசன்னமானாலொழிய ஜன்ம மரண நாம ரூப மனோரூப பிராந்தி ஒழிகிறதில்லை.

## 176 வது நாள்

* ✻ குரு வடிவமும் தன் வடிவமும் ஒன்றென்னெண்ணாத சிஷ்யன் குருத் துரோகியாகிறான்.
* ✻ உண்மையான ஞானப்பியாசிகளுக்குச் சகல தேவர்களும் திக்பாலகர்களும் சகாயஞ் செய்கிறார்கள்.
* ✻ ஏகாந்த யோகத்தை முடித்தபின்பு எல்லாந் தானாகத் தோற்றும்.
* ✻ ஞான யோகியானவன் தனக்கு வேண்டியவற்றைப் பேராசையின்றித் தனது உத்தம சங்கல்பத்தினால் தானே சிருஷ்டி பண்ணிக் கொள்ளுகிறான்.

## 177 வது நாள்

* ✻ உலகத்திலுள்ள மதங்களெல்லாம் மனோ எண்ணத்துடன் முடிவடைகிறது.
* ✻ சிஷ்யர்களைத் தேடித் திரியும் குருமார்கள் நரகமடைகிறார்கள்.
* ✻ கர்மேந்திரியம் ஐந்து ஞானேந்திரியம் ஐந்து அந்தக்கரணம் நான்கு ஆகப் பதினான்கு தத்துவங்களையும் முறையே கடந்து சென்று பரமாத்மாவை அடைந்த அனுபவ ஞானிகள் உலகத்தில் உடம்போடிருக்கிற காலத்தில் முக மானது சுக துக்கங்களால் சம்பந்தப்பட்டிருந்தாலும் மனம் சம்பந்தப்படுவதில்லை.

## 178 வது நாள்

* ✻ காமாதி விகாரங்கள் ஞானியின் மனதைச் சுற்றிப் பார்த்துச் செல்வதற்கு இடமின்றி மீண்டும் திரும்பி விடுகிறது.
* ✻ சூர்யன் முதல் எந்தத் தேவர்களையும் பரமாத்மாவாகப் பாவித்து உபாசனை செய்தால் பரமாத்ம உபாஸனையின் பலனை அடையலாம்.
* ✻ வெளிச் சாதனங்கள் ஞான ஏதுவாக இருந்தாலும் முதலில் ஞானத்தையே மறைத்துக் காட்டுகின்றன.
* ✻ கெட்டவனைக் கெட்டவனென்று யாரும் சொல்லக் கூடாது. நல்லவனை நல்லவனென்று கரும யோகிகள் சொல்லலாம். இரண்டையும் ஞான யோகிகள் கவனிக்கக் கூடாதென்று கீதாசாரியர் கூறுகிறார்.

## 179 வது நாள்

* பிரஹ்மத்திற்கு ஒரு மதத்தையுங் காணோம். பிரஹ்ம திருஷ்டி உடையவர்களுக்கு எல்லா மதங்களும் ஏகமாகத் தோன்றுகிறது.
* கரும யோகமில்லாமல் ஞான யோகமடைய முடியாது. ஞானமின்றிக் கருமஞ் செய்தால் ஜனன மரணங்களுக்கு ஏதுவாக்கி விடுகின்றன.
* புதிதாகக் காண்கிறவன் திடீரென்று வசனத்தைக் கொடுத்து விடுவானானால் எதார்த்தமல்லாதவனென்று அநேகமாய்க் கண்டு கொள்ள வேண்டும்.
* சரீர அங்கங்களால் பக்தியுடையவன் போல நடிக்கிறவனை உடனே நம்பி விடக் கூடாது.

## 180 வது நாள்

* சக்தியுள்ளவரை மோக்ஷ முயற்சி செய்கிறவர்களை பிரம விஷ்ணு ருத்ரர்கள் பூஜிக்கிறார்கள்.
* இப்போதிருக்கிற பிரம்ம விஷ்ணு சிவன் இவர்கள் ஆதியில் ஜீவர்களாயிருந்தார்களென்பது ஸ்ருதி.
* சர்வ ஜீவர்களுக்கும் கர்ப்பவாச காலத்தில் பூர்வ ஜென்மாந்தர ஞாபகமும் மோக்ஷ இச்சையும் உண்டாகின்றன.

## 181 வது நாள்

* பிரஹ்ம மீமாம்ஸை எனப்படுகிற வேதாந்த பிரஹ்ம சூத்ரம் ஆதியில் கல்லால் மஹரிஷியால் வெளி வந்தது.
* குரு உத்தரவின்றிக் குருவை விட்டு அகலக் கூடாது.
* சர்வ சுருதிகளும் சகுண பிரஹ்மத்தையுஞ் சொல்லாது. அதீதப் பிரஹ்மத்தினடத்துஞ் சொல்லாது. மத்தியிலுள்ள நிர்க்குண பிரஹ்மத்தையே சார்ந்து கூறும்.
* நாசியினின்று வெளியேறிய பிராணனை உள்ளே விடாது வெளியிலேயே நிறுத்திவிட மூலதார சக்தி விழித்துக் கொள்ளுகிறது.

## 182 வது நாள்

* அஞ்ஞானத்தினாலேயே குரு சிஷ்ய பேதம் தோன்றுகிறது. பெரியவர் சிறியவர் நல்லவர் கெட்டவர் என்ற பேதம் தோற்றுகிறது.
* பிரஹ்ம ஞானமுடையவனிடம் ஜாதி பேதம் பாராமல் உபதேசம் பெறுவதால் தோஷமில்லை.
* பிரபஞ்ச கர்த்தா இருக்கும்போது பிரபஞ்சக் கவலை கொண்டவன் பேத புத்தியுடையவன்.
* யுகத்தின் தன்மைப்படி வருணாஸ்ரம சங்கிரகமுண்டான காலத்தில் கூட எங்கேயோ ஏக தேசமாக ஒரு ஞானி தோற்றுகிறார்.

## 183 வது நாள்

* குருவைக் காணும்போது மஹா மந்திர ஜெப குருத் தியானத்துடன் செல்ல வேண்டும்.
* ஒரு கூட்டத்திலிருக்கும்போது யார் வந்தாலும் அவர்களுடன் பேசக் கூடாது.
* பிராம்மண க்ஷத்திரிய வைஸ்ய சூத்ர பிரம்மசர்ய கிருஹஸ்த வானப் பிரஸ்த சன்னியாஸ மென்று சொல்லப்படுகிற வருணாஸ்ரமங்கள் எட்டின் தன்மை களினின்றும் விலகியிருக்கப்பட்ட ஸ்வாதந்தரிய புருஷர்கள் வெகு சிலரே உலகத்திலிருப்பார்கள் அப்படியிருக்கப்பட்டவர்களுக்கு அதி வருணாஸ்ரமிகள் என்று பெயர்.

## 184 வது நாள்

* இரத்த சுத்தமில்லாதவன் கோவின் ஜலத்தை அதிகாலையில் குடித்து வர வேண்டும்.
* குருவினிடம் சிஷ்யன் எப்போதும் இஷ்டம்போல் பேசக் கூடாது. மிதமாகவும் மெதுவாகவும் சாந்தமாகவும் சிஷ்யன் குருவினிடம் பேச வேண்டும்.
* குரு அழைத்துவுடன் சிஷ்யன் ஆறடி தூர சமீபத்தில் செல்ல வேண்டும். அழையாமல் போகக் கூடாது.
* சிஷ்யன் குருவுக்கு நான்கு நுகத்தடி தூரத்தில் வசிக்க வேண்டும்.
* சிஷ்யன் எப்போதும் குருவின் வலது பக்கத்தில் நிற்க வேண்டும்.

## 185 வது நாள்

* உத்தம யோகிகள் சுபாவங்களைக் கவனிக்கிறதில்லை. ஒருவரையும் ஸ்துதிக்கிறதும் நமஸ்கரிக்கிறதுமில்லை.
* குருச் சிசுருஷை செய்கிறவர்கள் குரு புஜிக்காத போது புஜிக்கக் கூடாது. தீர்த்தபானம் செய்யாதிருக்கும்போது தான் பண்ணக் கூடாது. அவர் உட்கார்ந்திருக்கத் தான் தூங்கலாகாது. இடது பாதத்தை இடது கையாலும் வலது பாதத்தை வலது கையாலும் பிடிக்க வேண்டும். கைகளை நன்றாய்ச் சுத்தம் செய்து கொண்டு அக்கினியை உண்டாக்கிக் கொண்டபின் பாதத்தைத் தொட வேண்டும். முடிந்த சிஷ்யர்களுக்கு இந்த நியமமில்லை.

## 186 வது நாள்

* உலக்கை சப்தமின்றியும் புகையை உண்டாக்காததுமான ஆகாரத்தை யோகிகள் விரும்புகிறார்கள்.
* தன்னை நிந்திக்கும்போது தனக்கு ஓர் ஔஷதம் கிடைத்ததென்று நினைக் கிறவன் உத்தம சந்நியாசி.
* ஆசாரியனில்லாத ஞானம் அம்மாவாசைச் சந்திரன்போல் பிரகாசிக்கும்.
* அரச மரத்தையும் பசுவையும் தரிசனம் செய்வதாலும் பிரதக்ஷணம் வருவதா லும் பாபங்கள் விலகுகிறது.

## 187 வது நாள்

* சங்கல்ப வுதய ஸ்தானத்தில் சாந்த புருஷன் ஜ்வலிக்கிறான்.
* ஆசை குறையக் குறைய அதிகார தேவர்கள் ஆனந்தமடைகிறார்கள்.
* ஸ்தூல சரீரத்தைச் சுத்தமாகவும் ஆசாரமாகவும் வைத்துக் கொண்டிருப்பவர்கள் சில காலங்களுக்குப் பின் மனச் சுத்தத்தையும் ஞானா சாரத்தையும் அடைய வேண்டுமென்றறிந்து கொள்ளுகிறார்கள்.
* தெய்வம் மோக்ஷம் ஈஸ்வரன் வேதம் ஞானி உலகம் சிருஷ்டி குரு சத் கருமங்கள் இவற்றில் நம்பிக்கை கொள்ளாதவன் இராக்ஷஸன்.

## 188 வது நாள்

* ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உலகங்களிலும் கரும தேவதையின் ஆக்ஞைப்படி திருஷ்டிக்குப் புலப்படாமல் கரும பலன்களைக் கொடுப்பதற்காகக் கருமாதிஷ்டான தேவதையாகிய யீஸ்வரன் தொடர்ந்து செல்லுகிறான். கால தேவதை எல்லாவற்றையும் சுற்றிக் கொண்டு நிற்கின்றன.
* ஒரு விஷயத்திலும் ஒருபோதும் ஒரு இடத்திலும் ஒரு மறைப்புமில்லாத உத்தம திருஷ்டியுடைய ஞானிகள் வாழும் நாட்டில் அவருக்குச் சகாய புருஷர்கள் வெகு சிலரேயிருக்கின்றனர்.

## 189 வது நாள்

* சரீரத்தை ஆலயமாகவும் ஆத்மாவை விக்கிரகமாகவும் புத்தியைத் தீபமாகவும் மனதை ஜலமாகவும் சாந்தியை புஷ்பமாகவும் கொண்டு அந்தர்முக யோகிகள் பரமாத்மாவை பூஜை செய்கிறார்கள்.
* உஞ்சவிர்த்தி எடுத்துக் கொண்டு அன்றன்றைக்கு ஜீவிக்கும் பிராம்மணன் உத்தமோத்தமன். ஒருநாள் ஆகாரத்திற்கு மீதம் வைத்துக் கொள்பவன் உத்தமன். ஒரு குடம் தான்யமுடையவன் மத்திபன். குதிரில் தான்யமுடையவன் அதமன். நிறைந்த தான்யங்களையும் செல்வங்களையும் உடையவன் அதமாதமன். இவ்வாறாக கிரேதா திரேதா யுக காலங்களில் நடைபெற்றிருக்கின்றன.

## 190 வது நாள்

* கருமங்களை விடுவதும் செய்வதுமான சமித்துக்களை ஞானாக்னியினால் ஹோமம் செய்து விடுகிறவன் யாதொரு புண்ணிய கருமம் செய்ய வேண்டியதில்லை.
* அதிகார அவதார புருஷர்கள் அடிக்கடி புவியிற் ஜனித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.
* தற்போது பிரபல அவதார புருஷர்கள் அடிக்கடியின்றி ஜனித்து அவ்வவ்விடங்களில் ரகஸ்யமாகத் தங்கிக் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## 191 வது நாள்

* சக்தியின் குண்டலி வசமாகாத யோகியை கூர்ம நாடி பற்றுகிறது.
* பிரம்ம லோகம் பிதுர் லோகம் ஸ்வர்க்க லோகம் சந்திர லோகம் சூர்ய லோகம் இவைகளிலிருந்து முடிவாகித் தள்ளப்பட்டுப் பூமியில் வருபவர்கள் இடையில் பஞ்சபூத மண்டலத்தின் ஆதார மண்டலத்தில் சில காலம் தங்கி வருகிறார்கள்.
* கொக்கானது ரேதஸ் இல்லாமல் கெர்ப்பந்தரிக்கிறது போல யாதொரு காரணமுமில்லாமல் அதிகார அவதார புருஷர்கள் உலகத்தில் தங்குகிறார்கள்.

## 192 வது நாள்

* சன்னியாசியானவன் தனக்கு வேண்டிய காரியங்களை ஒருவருடைய சகாயமுமின்றித் தானே செய்து கொள்ள வேண்டும்.
* எவன் மனதில் நிந்தையும் ஸ்துதியும் ஏறவில்லையோ அவன் உத்தம சன்னியாசி.
* ஓடு மரத்தடி கந்தை பிக்ஷை தனித்திருத்தல் எல்லாப் பிராணிகளிடத்திலும் உபேஷை இவைகள் ஒரு சன்னியாசிக்குரிய லக்ஷணம்.

## 193 வது நாள்

* நகம் வளர்த்துக் கொண்டும் டம்பமாகக் கர்மாவைச் செய்து கொண்டும் பேராசையால் சத்காரியங்களை இயற்றிக் கொண்டிருக்கிற பிராம்மணாதி நான்கு வருணத்தார்கள் அதிகமான பாபத்தை அடைகிறார்கள்.
* சம்ஸ்காரத்தின் கரையைக் கண்டயதிகள் கர்மத்தைச் செய்யவும் விடவும் மாட்டார்கள்.

## 194 வது நாள்

* உபாத்தியாயன் ஆசாரியன் அம்மான் அதிதி தன்னை அடுத்தவன் பிராய முதிர்ந்தவன் இளைஞன் ரோகி வைத்தியன் ஞானி பந்து சம்பந்தி மாதாபிதா புத்திரி வேலைக்காரர்கள் சமமான கோத்திரத்தில் பிறந்தவன் பெண்கள் சகோதரன் புத்திரன் மனைவி இவர்களுடன் உத்தமமான புருஷர்கள் கலகஞ் செய்து கொள்ளக் கூடாது. கலகமின்றி இவர்களை ஜெயிக்கப்பட்டவர்களை உத்தமமான புண்ணிய லோகங்களை அடைகிறார்கள்.
* நவக்கிரகம் இராகு காலம் குளிகை காலம் யோகினி இருத்தை சூலம் திக் தேவர்கள் மற்றத் தேவர்கள் இவர்களை ஞானமின்றி அலட்சியம் செய்யக் கூடாது.

## 195 வது நாள்

* எவ்வனப் பருவமுடைய அழகிய பெண்களின் ஸ்தூல சரீர காந்தியின் மயக்கத்தால் ஸ்திரீகளை அடைகிற புருஷர்களும் ஆத்மாவை நோக்கியே செல்லுகிறார்களென்று பிரஹஸ்பதி பகவான் சொல்லியிருந்தாலும் அஞ்ஞானத்தையடைந்து அதனுதவியால் ஞானத்தையடைகிறது போலவும், பிராணா யாமம் செய்பவன் உருளைக் கிழங்கு வெண்காயம் மாம்ஸம் இவைகளினுதவியை நாடுவது போலவும் இருக்கிறது பிரஹஸ்பதி கூறிய தென்று தத்தாத்திரேய மஹரிஷி சொல்லுகிறார்.
* விசேஷமான பெரிய நதியில் ஸ்நானம் செய்தவன் கிணற்றைச் சிலாகிக்காததுபோல, ஞானியானவன் கர்மத்தைச் சிலாகிப்பதில்லை.

## 196 வது நாள்

* கர்மத்தை விட்டுவிடச் சொல்லுகிற சாஸ்திரம் அசாஸ்திரம் ஆசாரியார் அனாசாரியார்.
* உதாரணமான மனதோடும் தெளிந்த அறிவுடனும் உதார புத்தியோடுங் கூடிய நியாயமான புண்ணிய கருமங்களைச் செய்தது அதன் பிரயோ ஜனத்தை எம் பெருமானுக்கு அர்ப்பணம் செய்து வருவதால் சித்த சுத்தியும் அதனால் பிரஹ்ம ஞானமும் உண்டாகின்றன.
* நிவிர்த்தி மார்க்கத்தை அடையவும் அடைந்து கொண்டுமிருப்பவர்கள் விடுகிற கருமங்களில் சந்தோஷமடைகிறார்கள்.

## 197 வது நாள்

* தனக்குள்ளிருக்கிற தானான தேவதையைக் காணாமல் வெளியில் உலாவிக் காணப் போகிறவன் கையிலுள்ள லட்டை எறிந்து விட்டு புறங் கையை நக்குகிறவனைப் போன்றவனாகிறான்.
* யோக நிலையை அடைந்த புருஷனை ஞான நிலையை அடைய விடாமல் பல சித்திகள் பிரபலமாக தடை செய்து கொண்டிருக்கின்றன.
* நிருவிகல்ப ஸமாதி அடைந்தவனது உடல் அதிக தேஜசாகத் தோற்றும்.
* யோகிக்குத் துவைதானந்த அனுபவமும் ஞானிக்கு அபேதானந்த அனுபவம் விளங்கி நிற்கிறது.

## 198 வது நாள்

* யோகியும் ஞானியும் அறிந்த வஸ்து ஒன்றாயிருந்த போதிலும் சங்கல்ப பேதத்தால் வேறுபடுகிறது போலத் தோன்றுகிறது.
* மனது பரிசுத்தமடையும்போது சகல சாஸ்திரங்களின் தாத்பரியங்களும் தானே உதயமாகிறது.
* உலக சிருஷ்டியின் உண்மையைத் தெரிந்து கொண்டவன் உண்பதுகூட வேடிக்கையாக இருக்கும்.
* கர்மத்தின் ரகஸ்யத்தையும் வேறுபாட்டையும் கண்டுபிடிக்க முடியாமலிருக்கிறது.

## 199 வது நாள்

* ஆகாரம் உடை ஆபரணம் வசனம் எண்ணம் இவைகளை அளவுக்கு மீறி அனுபவிக்கிற ஜனங்கள் க்ஷீணித்து விடுகிறார்கள்.
* பிரஹ்மத்தை அறிவதற்கு மஹா விஷ்ணு க்ஷீராப்தியில் யோக நித்திரை புரிகிறார்.
* ஏக காலத்தில் ஐந்து இந்திரியங்களையும் அடக்காமல் ஓர் இந்திரியத்தைத் திறந்து வைத்தால் மனமானது அதன் வழி ஓட ஆரம்பித்துவிடும்.

## 200 வது நாள்

* மனமும் ஐந்து இந்திரியங்களையும் எப்போதும் ஒன்று சேர்ந்து புத்தியில் லயித்தும் கலக்காமலிருக்கிறதோ அப்போது மஹத்துவம் பிரகாசிக்கிறது.
* ஆறு மாத காலம் கடுமையான விரதத்துடன் உத்தம யோகத்தை ஆதரித்து வந்தால் ஆத்மாவை அடையலாம்.
* ரேசக பூரக கும்பக சொரூபமான பிராணாயாமத்தைப் பிரணவ சப்தத்துடன் ஒரு மாத காலம் நியமப்படி அனுஷ்டித்து வந்தால் பிராண சலனம் நின்று விடுகிறது.

## 201 வது நாள்

* தன் ஆத்மாவினிடத்தில் தானே லோபமில்லாதவன் தத்துவ ஞானியாகிறான்.
* ஞான யோக அப்பியாசிகள் தேவாலயம் சூன்யமான அறை மலைக்குகை அடர்ந்த சோலை வெட்டவெளிப் பாறை ஒன்றுமில்லாத வீடு இவைகளை இடமாகக் கொள்ள வேண்டும்.
* வாக்கு மனம் செய்கை இவைகளால் ஒரு வஸ்துவிலும் யோகி பற்று வைக்கக் கூடாது.

## 202 வது நாள்

* யோகாப்பியாச காலத்தில் லயம் விக்ஷேபம் கலக்கம் நல்ல வாசனையின் இழுப்பு. கேள்வியில் இச்சை பார்வை ரஸம் ஸ்பரிசம் சீதம் உஷ்ணம் ஆகாசகமனம் சகல சாஸ்திர உண்மைகளுந் தானே உதித்தல். திவ்யமான ஸ்திரீகள் வலுவில் வருதல் சங்கமம் இவைகளிலெல்லாம் ஆச்சரியம் இவைகளுண்டாகும். யோகியானவன் இவற்றை விலக்கிவிட வேண்டும்.
* பருவத சிகரம் கோபுரம் விருக்ஷத்தின் உச்சி இவைகளிலிருந்து யோகம் செய்ய வேண்டும்.

## 203 வது நாள்

* யோகியானவன் மனத்தை எந்த எந்த உபாயத்தினால் அடக்க முடியுமோ அந்த அந்த உபாயங்களினால் அடக்க முயல வேண்டும்.
* யோகி எல்லாவற்றிலும் உதாசீனனாயிருந்து கொள்ள வேண்டும்.
* நீசனும் ஸ்திரீயுங்கூட யோகாப்பியாசம் செய்யலாம்.
* யோக மார்க்கத்தைப் பற்றி ஆதியில் பகவானாகிய ஆதிசேஷனும் மத்திய காலத்தில் அம்ஸாவதாரமான இடப மஹாராஜனும் கடைசியில் மஹாத்மாவாகிய பதஞ்சலி மஹரிஷியும் சந்தேகமறக் கூறியிருப்பதுபோல வேறு யாருங் கூறவில்லை.

## 204 வது நாள்

* பிரஜா சிருஷ்டியைக் குறித்துக் கூடப் பெண்களின் சேர்க்கையை விரும்பாத தீரர்கள் பரத நாட்டிலிருக்கிறார்கள்.
* ஓர் தரம் ஸ்திரீ சேர்க்கையால் மூன்று மாத ஆகாரத்தின் பலமுள்ள தேஜஸும் ஆறு மாத சரீர பலமும் அவாந்தர தேஜஸும் வெளியிற் சென்று விடுகின்றன.
* பிரஹ்ம வஸ்துவை உணருவதற்குப் பரமசிவன் கல்லால் விருக்ஷத்தினடியில் கற்ப கோடி காலம் கண்மூடி இருந்து விட்டார்.

## 205 வது நாள்

* இதற்கு முன்னுள்ள கலியுக காலங்களில் பாபஞ் செய்து வந்த ஜீவர்களெல்லாம் இந்தக் கலியுகத்தில் மீண்டும் பிறந்திருக்கிறார்கள்.
* பிரஹ்ம வஸ்துவை பஞ்ச மூர்த்திகள் ஜெகதீஸ்வரன் முதல் யாவரும் இன்னபடியென்று பேசவோ நினைக்கவோ முடியாது.
* சாமான்ய புருஷர்களுக்குச் சகுணத் தியானமும் சாஸ்திரார்த்தங்களும் புண்ணிய கருமங்களுமே ஆதாரம்.

## 206 வது நாள்

* எவன் மனது மூன்றாசைகளிலும் பூரணமாய் மூண்டு செல்லுகிறதில்லையோ அவன் யாதொரு புண்ணிய கருமங்களும் செய்ய வேண்டியதில்லை.
* பிராக்ஞனைத் தாண்டிப் பிரத்யகாத்மாவிடத்திற்குச் செல்லும்போது பூர்வ ஜென்மாந்தர ஞாபகமுண்டாகிறது.
* ஞான மருந்து சாப்பிடுபவர்கள் பிரபஞ்ச உப்பைத் தள்ள வேண்டும்.
* எவன்மனது முயற்சியின்றி ஆத்மாவை நாடுகிறதோ அவனுக்கு யாதொரு நிபந்தனையும் யாராலுங் கிடையாது.

## 207 வது நாள்

* புத்திசாலியான தைரியமுள்ள புருஷன் ஞான யோக மார்க்கத்தினிடையில் வரக்கூடிய பூர்வ ஜென்ம ஞாபகம் பிரபல சித்திகள் தேவ தரிசனம் வரங்கள் இவைகளைத் தாண்டிச் செல்லுகிறான்.
* அசுபமும் துன்பத்திற்குக் காரணமும் மனதை வருத்துகிறதுமான வசனங்களை யாரிடமும் பேசக் கூடாது.
* ஸ்திரீ முதலிய உலக போகங்களை அனுபவித்து விலக்கினாலன்றிப் போக மாட்டாதென்று வல்லபாசாரியர் கூறுவது சுருதி யுக்தி அனுபவம் மூன்றுக்கும் பொருந்தவில்லை.

## 208 வது நாள்

* புத்தியின் விசாரணையால் நித்திரையையும் தைரியத்தால் ஆண் குறியையும் நேத்திரத்தால் கைகால்களையும் செய்கைகளால் மனத்தையும் வாக்கையும் ஜாக்ரதையால் பயத்தையும் மஹான்கள் பணிவிடையால் கோபத்தையும் மனோ நிக்ரஹத்தால் குரோதத்தையும் உத்வேகத்தால் உதரத்தையும் நிராசையால் லோப குணத்தையும் தீர புத்தியுடன் ஜெயிக்க வேண்டும்.
* புத்தி மனம் இந்திரியங்கள் இவைகள் யாதொரு பிரவிருத்தியுமற்று ஒன்றா யிருக்குங் காலத்தில் ஞான சொரூப சைதன்யம் பிரகாசிக்கிறது.

## 209 வது நாள்

* எவரொருவர் மனோ பாவனை எப்படியெப்படி பேதத்துடன் நிற்கிறதோ அப்படியப்படியே விகல்பத்துடன் சிவ விஷ்ணுவாதி வடிவங்கள் தோற்றுகின்றன.
* ஞானாப்யாசிகள் மந்திர ஜெபமும் பிராணாயாமம் யந்திர பூஜை செய்யக் கூடாது.
* மனோபாவனை முதிர்ந்த காலத்தில் பாவனா தெய்வங்கள் பிரச்னனமாகிறது.

## 210 வது நாள்

* ஜாதி குலம் நன்மை ஆசாரம் மதம் பிறப்பு மரணம் இவைகளை விட்டு விட்டவன் ஞான லக்ஷ்மியை அடைகிறான்.
* உண்மை ஞானம் உதயமாகுமுன் பொய் ஞானம் மெய் போல உதிக்கும்.
* உத்தமமான பிரம்மசரியத்துடன் வேதத்தை முழுவதும் தபசோடு கூடி நின்ற அத்தியயனம் செய்து அதன் அர்த்தங்களை உள்ளபடி அறிந்து கொண்டு மோக்ஷ மார்க்கத்தை நோக்கிச் செல்வது சிரேஷ்டமானது.
* ஒன்றிலும் ஆச்சரியப்படாதவன் உத்தமன்.

## 211 வது நாள்

* இரகஸ்ய சாஸ்திரங்களையும் ஞானிகளின் செய்கைகளையுங் கண்டு ஆரம்ப அப்பியாசிகள் ஆச்சரியப்படுகிறார்கள்.
* சப்த பிரம்மமான வேதத்தை முதலாவது நன்றாகத் தெரிந்து கொண்ட பின் பரப்பிரஹ்மத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.
* மனோ வேகமாய் நடந்து ஆயிரம் வருடங்கள் வரை உலகங்களைச் சுற்றிப் பார்த்தாலும் ஆத்மாவை அறிய முடியாது.

## 212 வது நாள்

* ஞானிகள் சென்ற மார்க்கத்தை அறிய முடியாமல் சகல தேவர்களும் மயக்கமடைகிறார்கள்.
* தனக்குண்டாயிருக்கிற ஞானோதயம்போல எல்லோருக்கும் உண்டாயிருக்கிறதாக அப்பியாசி நினைத்துக் கொள்ளுகிறான்.
* உத்தமமான பிராம்மணனிடத்திலும் சக்கிரவர்த்தியினிடத்திலும் நாயினிடத்திலும் நாயைச் சாப்பிடுகிற நீசனிடத்திலும் ஸ்திரீயினிடத்திலும் புழுவினிடத்திலும் ஞானிகள் ஒரே பரமாத்மாவைப் பார்க்கிறார்கள்.

## 213 வது நாள்

* தம்தம் சரீரங்களுக்குள் சர்வாந்தர்யாமியைப் பார்ப்பவருக்கும் சரீரத்தை விட்டுவிட்டுப் பார்ப்பவர்களுக்கும் சிறிது பேதமுண்டு.
* இந்திரியங்களையும் அதன் விஷயங்களையும் மனமானது தானே சிருஷ்டித்தும் சம்ஹரித்தும் விடுகிறது.
* வீணாக நாவைப் பேசச் செய்வதால் வாக்தேவியான சரஸ்வதியின் சாப முண்டாகிறது.
* வித்தை தவம் பஞ்சேந்திரிய அடக்கம் லோபத்தை விடுதல் இவைகளில்லாமல் ஒருவனும் ஞான சித்தியைப் பெற முடியாது.

## 214 வது நாள்

* பர வாசுதேவருடைய இரண்டு ரோமத்தின் சக்தியானது ஸ்ரீ கிருஷ்ணனாகவும் பலராமனாகவும் அவதரித்தன.
* வேத முதலிய எந்த வித்தைகளைக் கற்றவனும் அகங்காரமடைந்தால் கற்ற பலன்களை இழந்து விடுகிறான்.
* துவாபர யுகத்திலேயே வேதங்கள் சிதறிப் போய்விட்டன. கலியுகத்தில் சில இடங்களில மட்டுங் காணப்படுகின்றன.
* பிரஹ்ம ஞானத்தால் எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்பைச் செலுத்தியவனும் எல்லோரிடத்திலும் தானேயிருப்பவனாகக் கண்டவனும் உண்மையான பிராமணன்.

## 215 வது நாள்

* சாங்கியம் யோகம் சைவம் வைஷ்ணவம் காணாபத்தியம் சாக்தேயம் காபாலிகம் என்ற இம்மதங்களும் காலாந்தரத்தில் பரம புருஷனை அடைகின்றன.
* ஆத்ம வுணர்ச்சியின்றிச் செய்யப்படுகிற கர்மங்கள் பிரயோஜனமான சித்தியைக் கொடுப்பதில்லை.
* பலாத்காரமாக நித்திரையையும் ஆகாரத்தையும் நிறுத்தக் கூடாது.

## 216 வது நாள்

* வைத்தியம் ஜோதிடம் சங்கீதம் பரத நாட்டியம் விகடம் உத்ஸவம் தந்திர மந்திர சாஸ்திரம் மோக்ஷ விரோதமான நூல்கள் இவைகளை ஞானயோகி அப்பியாசிக்கக் கூடாது.
* பெண்களையும் திரவ்யங்களையுங் கண்டு நடுநடுங்குகிற உத்தம பக்தனை ரிஷிகளும் தேவர்களுங் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்.
* நித்திரை வருகிற இடத்தைக் கண்டு பிடித்தால் நித்திரையையும் அந்தர்முக ஆகாரத்தை விருத்தி செய்து கொள்வதால் பகிர்முக ஆகாரத்தையும் விட்டு விடலாம்.

## 217 வது நாள்

* மனதிற்கு மயக்கத்தைக் கொடுக்கக் கூடியது எதுவாயிருந்தாலும் விலக்கிவிட வேண்டும்.
* தான் செய்த பாபத்தை மறையாமல் வெளியிட வேண்டும். புண்ணியத்தையும் தர்மத்தையும் வெளியிடக் கூடாது.
* தனக்கு மூத்தவர்களின் பெயரைச் சொல்லியும் நீ என்னும் பதத்தை உபயோகிக்கவும் கூடாது.

## 218 வது நாள்

* புத்திரர்கள் மனைவி சகோதரி புத்திரி இவர்களுடன் படுக்கை போஜனம் இவைகள் செய்யக் கூடாது.
* சூரியனுக்கு எதிர்முகமாக மலஜலம் விடக் கூடாது. தன்னுடைய மலத்தைப் பார்க்கலாகாது.
* காலை மாலைகளில் ஆகாரம் உண்டு இடையில் ஒன்றுமில்லாதிருப்பவன் உபவாஸ புண்ணியத்தைப் பெறுகிறான்.
* காலையில் உதிக்கிற சூரியனையும் அன்னிய ஸ்திரீகளையும் ஆடையில்லாத பெண்களையும் பார்க்கக் கூடாது.

## 219 வது நாள்

* ஹிமோத் பருவதத்திற்கு உத்தர பாகத்தில் மனுஷர்கள் போக முடியாத ஒரு சிறிய லோகமிருக்கிறது. அங்குள்ள ஜனங்கள் மஹா பரிசுத்தர்களும் பாபச் செய்கையில்லாதவர்களும் யாதொரு உபத்திரவமுமில்லாதவர்களாயிருக் கிறார்கள். அவ்வுலகத்தில் எவ்வித மிருத்யுவும் உண்டாகிறதில்லை. ஒருவ ரையும் வியாதி தொடுகிறதில்லை. ஒருவருக்கும் ஆசையுண்டாகிறதில்லை. இந்த லோகத்தில் புண்ணியஞ் செய்கிறவர்கள் அந்த லோகத்தில் பிறக்கிறார்கள்.
* பிரஹ்மமே ஜீவனென்பது சமுத்திரமே உப்பென்பது.

## 220 வது நாள்

* எதார்த்த வாதிகள் மனதைப் பிரம்மரந்திரத்திற் சேர்த்து துரியானுபவத்திற் றங்கிச் சரீர சிரமந்தீர அவ்விடத்தில் தூங்குவார்கள்.
* இந்திரியங்களையும் மனத்தையும் மீற விடாதிருப்பது அடக்கமேயன்றி வாய் பேசாதிருப்பதில்லை.
* சமாதியில் நன்றாக நிலை பெற்றவன் மந்திர ஜெபத்தை விட்டுவிட வேண்டும்.
* தர்மத்திற்கு மூலம் வேதம்; வேதத்திற்கு மூலம் பரமாத்மா.

## 221 வது நாள்

* எந்த விஷயத்திலும் மேல் நிலை அறியப்பட்டபின் அதற்குக் கீழுள்ள நிலைமைகளை விட்டுவிட வேண்டும்.
* அவமதிப்புடனும் சந்தோஷமில்லாமலும் பிரியமின்றியும் ஜெபம் செய்கிறவன் நரகத்தை அடைகிறான்.
* அணிமா முதலிய அஷ்டமா சித்திகளைக் கூட விரும்பாமல் மோஷத்தை உத்தேசித்து மந்திர ஜெபம் செய்ய வேண்டும்.

## 222 வது நாள்

* வியாதி மனதிற்கு ஒன்றுந் தோன்றாதிருத்தல், சந்தேகம் அஜாக்ரதை சோம்பல் ஆசை பிராந்தி சமாதி அடையாதிருத்தல் அடைந்த சமாதியில் உறுதியில்லாமை இந்த ஒன்பதும் தியானத்திற்கும்யோகத்திற்கும் விரோதிகள்.
* புண்ணிய பாபங்களின் பயனைக் கொடுக்கக் கூடிய தேவதையாகிய யமனையும் ஆயுளின் கணக்கை அளவிடுந் தேவதையாகிய காலனையும் தேகத்திலிருக்கும் பிராண வாயுவைப் பிரிக்கிற தேவதையாகிய மிருத்யுவை யும் பாப புண்ணியங்களின் அளவைத் தெரிவிக்கக் கூடிய தேவதையாகிய நவக்கிரகங்களையும் ஜெப யோகிகள் அதிக்கிரமித்து விடுகிறார்கள்.

## 223 வது நாள்

* ஞான யோகிகள் ஜெபம் பிராணாயாமம் இவைகளை விட்டுவிட வேண்டும்.
* நம்மைக் கண்டு தேடி வருகிற வெளியிலுள்ள விஷயங்களைக் கண்டு நமஸ்கரித்து விலக வேண்டும்.
* அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களுள் பொருளில் மட்டும் பற்றுதலாயிருப்பவன் அந்தப் புருஷார்த்தங்களின் உண்மையை அறிந்த பின்னும் பொருளிலேயே சுற்றிக் கொண்டிருக்கிறான்.

## 224 வது நாள்

* தனக்கு இஷ்டமான வஸ்துவை தியானம் செய்வதும் சமாதியை அடைவதற்கு ஓர் வித உபாயம்.
* பிரபஞ்ச வஸ்துக்கள் பேராசையால் அடையப்படுமாயின் உண்மையான போகங்கள் உண்டாகிறதில்லை.
* உண்மை ஞானம் வந்தவன் உலகப் பற்றை விட வேண்டியதில்லை.
* உலகம் எப்போதும் பொய்யாயிருக்கவில்லை.

## 225 வது நாள்

* மரணமில்லாத சரீரமுடைய தேவர்கள் அவர்களது பதவிகள் சுதந்தர விமானங்கள் நாநாவித உத்தியான வனங்கள் தெளிவான நிறமுடைய ஒரு கோடி அன்னங்களும் நூறு கோடி தாமரை மலர்களும் நூறு யோஜனை உயரமும் நூறு யோஜனை விஸ்தாரமுமான மண்டபம் ஆறுகோடி நித்திய பிரம்மசாரிகளும் நிறைந்துள்ள அரமாண்டலீ தடாகமும் திக்பாலகர்கள் பிரஹஸ்பதி சுக்கிரன் துருவன் மருத்துக்கள் அஸ்வினீ தேவர்கள் சூரிய சந்திரர்கள் ருத்ரர்கள் சப்தரிஷிகள் பிதுர் தேவதைகள் சதுர்முகன் விஷ்ணு சிவன் இவர்களின் ஸ்தானங்களெல்லாம் பரமாத்ம ஸ்தானத்தை உத்தேசிக்கையில் நரகங்களென்று சொல்ல வேண்டும்.

## 226 வது நாள்

* பிரகிருதியையும் அதன் காரியங்களையும் அறுத்துவிட்டவன் நிஷ்டை பழக வேண்டியதில்லை.
* சத்தான மந்திரங்கள் ஜெபித்து அசத்தான பலன்களைக் கருதுவது மஹா பாபம்.
* வேத சம்பந்தமாய்ப் பிரணவத்தோடு உண்மையுடன் மஹா மந்திரங்களை ஜெபித்து வருகிற மஹாத்மாவுக்குப் பரமாத்மா ஸ்தானம் சொந்தமாகிறது.

## 227 வது நாள்

* ஹிமயமலையின் உத்தர பாகமும் சந்திர மண்டலத்தின் பின்புறமும் மனிதர்களால் காண முடியாது.
* வருணாஸ்ரம தர்மங்கள் பாமரர்களின் சித்தத் தெளிவுக்கு ஏது.
* பரமாத்மாவை அறியும்போதுவேதமும் மனமும் நசித்து விடுகின்றன. சூக்ஷ்மமாய் விடுகின்றன.
* இந்திரியங்கள் லயமடைந்திருக்கும்போது எது நன்றாக நினைக்கிறதோ அது ஆத்மா.

## 228 வது நாள்

* மரத்திலுள்ள அக்கினி கோடாரி கொண்டு மரத்தை வெட்டுவதால் பிரசன்னமாகாமல் கடைவதால் எப்படிப் பார்க்கப்படுகிறதோ அதுபோல வயிற்றையும் கையையும் காலையும் வெட்டுவதாலும் பட்டினி கிடப்பதாலும் பரமாத்மா காணப்படுவதில்லை. பலவித ஞான யோகங்களினால் மனதைக் கடைந்தால் தரிசிக்கலாம்.
* தெய்வாம்ஸமுள்ள மனத்தையும் இந்திரியங்களையும் பரமாத்மா சொரூபத்தை நோக்கிச் செலுத்துவதைவிட்டு விஷயங்களில் செல்ல வைப்பது மஹா பாபம்.

## 229 வது நாள்

* எந்தெந்த இந்திரியங்களால் பாப புண்ணியங்கள் செய்யப்படுகின்றனவோ அந்தந்த இந்திரியங்கள் அதனதன் பலனை அனுபவிக்கின்றன.
* கர்மோபாசனைகளால் அடையத் தக்க பதவிகள் காலாந்திரத்திற் காணாமற் போய் விடுகிறது.
* வேதாகமங்களில் கூறிய கர்ம மார்க்கங்கள் ஆசையுள்ளவனை பின்பற்றுகின்றன.
* உறுதியில்லாத உடம்பைவிட்டு உறுதியுள்ள உடம்பைக் கண்டு கொள்வது உசித யோகம்.

## 230 வது நாள்

* தகராகாசம் சிதாகாசம் என்று வேதம் சொல்லிய வஸ்து துரியாத்மா.
* கர்மோபாஸனைகளில் அதிகாரமுடையவர்கள் இராஜச சத்துவ குணமுடையவர்கள்.
* இஷ்டத்தை அடையவும் இஷ்டமல்லாததை விலக்கவும் கரும யோக சாஸ்திரம் கூறுகிறது. இஷ்டம் அதனிஷ்டம் இரண்டையும் விலக்கும்படி ஞான யோக சாஸ்திரம் சொல்லுகிறது.

## 231 வது நாள்

* பகிரங்க பிராணாயாம முதிர்ச்சியால் மூலாதார குண்டலி சக்தி எழுந்து சுழு முனை வரை எட்டி முட்டிக் கீழிறங்கி வர வழி தெரியாமல் தத்தளிக்கிற வனது உடல் இரவில் பார்ப்பவர்களுக்கு ஒன்பது பாகமாகத் தோற்றும் அவன் நவகண்ட யோகி.
* எது எது எவனுக்குப் பிரியமாய்த் தோற்றுகிறதோ அது அதிலிருந்து அவனுக்குச் சுகமுண்டாகிறது.
* மந்திர ஜெபங்களால் மனத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டு பிரஹ்மத் தியானஞ் செய்ய வேண்டும்.

## 232 வது நாள்

* ஞானாப்பியாஸ ஆரம்ப காலங்களில் பயங்கரமும் மயக்கமுமான தோற்றங் களுண்டாகின்றன.
* வலுவில் வந்த எந்த வஸ்துவையும் தள்ளி  விடுவது திட ஞானிக்கு அழகு.
* குருவின் அந்தரங்க வடிவம் தானாகிறபோதுதானுங் குருவாகிறான்.
* யாதொரு பலனையுங் கருதாமல் செய்யப்படுகிற ஜெப சக்தியானது பிரம்ம லோகத்தில் சேர்ந்து விடுகிறது.

## 233 வது நாள்

* ஸ்மிருதியின் அனுஷ்டானப் படியிருக்கிறவனும் யோகங்களில் பற்றுத லுள்ளவனும் சத்திய லோகத்தை அடைகிறான்.
* பிரவிருத்தி நிவிர்த்தி என்ற இரண்டு மார்க்கங்களிலும் செல்லக் கூடிய பிராம்மணர்கள் பரத கண்டத்தில் இருக்கிறார்கள்.
* வேதங்களையும் அதன் விசேஷ அர்த்தங்களையும் சந்தஸ் ரிஷி அதி தேவதை முதலானவைகளையும் நிருக்தம் வியாகரணம் தர்க்கம் கல்பம் சிக்ஷை ஜோதிஷம் வேத சம்பந்தமான பல சாஸ்திரங்கள் நக்ஷத்திர வித்தைகள் இவைகளைக் கற்றதனால் பிரஹ்மத்தை அறிய முடிகிறதில்லை.

## 234 வது நாள்

* ஒருவனுக்குப் பிரியமாயிருக்கிற வஸ்து மற்றொருவனுக்கு அப்பிரியமாயிருக் கிறது. கோடிக்கணக்கானவர்களுக்குத் திருப்தியானது ஒருவனுக்கு அதிருப்தியாயிருக்கும்.
* அடியோடு பாபத்திலிருந்து விலகியவர்களும் யோகத்தின் முடிவை அறிந்தவர்களும் சகலமும் தெரிந்தவர்களும் ஜீவன் முக்தியடைந்தவர்களுமான ஜீவர்கள் காலாந்திரத்தில் ரிஷிகளாய் விடுகிறார்கள். அவர்களே அனுபூதி பலத்தால் பஞ்சமூர்த்திகளாய் விடுகிறார்கள்.

## 235 வது நாள்

* ஞானேந்திரியம் ஐந்து கர்மேந்திரியம் ஐந்து பிராண வாயுக்கள் ஐந்து மனம் ஒன்று இந்தப் பதினாறையும் தாண்டியவன் வியாபக புருஷனாகிறான்.
* சமீபத்திலிருந்து கொண்டு இனிமையாகப் பேசி ஹிதஞ் செய்கிறவர்களில் சத்துருக்களுமுண்டு. தூரத்திலிருந்து துவேஷமாகப் பேசியிருக்கிறவர்களில் மித்ருக்களுமுண்டு.
* ஆழ்ந்த புத்தியும் சூக்ஷ்மமானதும் ஆசையுமற்றவர்கள் அழிவற்ற பதமொன்றையன்றி மற்றவைகளை விரும்புகிறதில்லை.

## 236 வது நாள்

* ஹிருதயம் சிகை சிரசு கவசம் நேத்திரம் அஸ்திரம் இந்த ஆறும் வேத மந்திரங்களுக்குள்ள அங்கங்கள்.
* எந்த வஸ்துவும் அழியும்போது அதன் பூரண சாமர்த்தியத்தையும் காட்டி மறைகிறது.
* ஞானப்பியாசிக்குத் தன்னாயுள் வரை தோற்றாத பலமான புதிய ஆசைகள் தோன்றுமானால் அந்த ஆசைக்கு அழிவு காலம் சமீபத்திலிருக்கிறதென்று அறிய வேண்டும்.

## 237 வது நாள்

* ஸ்திரீகளின் சம்பூர்ண சுகத்தைவிரும்பிய புருஷனுக்கு வஸ்திரங்கள் ஆபரணங்கள் ஜனங்கள் பூமாலைகள் எப்படித் தடையோ அப்படி ஞானப்பியாசிகளுக்குக் காண்பான் காட்சி காணப்படு பொருள் இம்மூன்றும் பிரஹ்ம தரிசனமாகிய நிருவிகல்ப சமாதிக்குத் தடையாயிருக்கின்றன.
* இருந்த இருந்த இடங்களிலிருந்து பேதமின்றி ஏகாந்த சொரூபத்தை எண்ணுவது இச்சையில்லாதவர்களுக்கு லக்ஷணம்.

## 238 வது நாள்

* நான்கு வேதங்கள் வேதாங்கங்கள் ஸ்மிருதிகள் ஆகமங்கள் புராணங்கள் இதிகாசங்கள் மீமாம்ஸைகள் நியாய சாஸ்திரங்கள் தர்க்க சாஸ்திரங்கள் தர்ம சாஸ்திரங்கள் வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்கள் பற்பல மத கிரந்தங்கள் இவைகளை அப்பியாசித்தாலும் பக்தி யோகமும் ஞான யோகமும் இல்லா விட்டால் பரமேஸ்வர சொரூபத்தை அறிய முடியாது.
* தானே தனக்குள் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைகிறவன் மஹா யோகி.
* வேரிடத்தில் பற்றில்லாத யோகிகள் பரமாத்ம ரூபத்தைப் பெறுகிறார்கள்.
* பரவாசுதேவர் ஒருவரே சங்கர்ஷணர் பிரத்யும்னர் அனிருத்ரர் வாசுதேவர் மஹேஸ்வரர் என்ற ஐந்து மூர்த்திகளாயினர்.

## 239 வது நாள்

* தெளிந்த இந்திரியங்களை உடையவன் இந்த இந்திரியங்களுக்குள்ளேயே ஆத்மாவை அறிகிறான்.
* அஞ்ஞானத்தால் அவிவேகமுண்டாகி அதனால் மனம் குற்றமுள்ளதாகிப் பஞ்சேந்திரியங்களும் சரீரமும் தோஷத்தை அடைகின்றன.
* ராகுவானது உண்மையில் சந்திரனைத் தொட்டதாயும் விட்டதாயும் காணப் படாததுபோல, தேகமானது ஆத்மாவைத் தொடுவதும் விடுவதுமில்லாதிருக்கிறது.

## 240 வது நாள்

* எப்பொழுது மனிதனிடத்திலிருந்து ஆசை விலகுகிறதோ அப்போது வெளி விஷயங்களிலுள்ள சஞ்சாரம் குறைவு படுகிறது.
* சரீரத்தால் அனுபவித்தும் கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் மூக்கால் மணந்தும் நாவால் ருசித்தும் தோலால் ஸ்பரிசித்தும் வாக்கால் பேசியும் காலால் நடந்தும் குறியால் போகித்தும் மனத்தால் நினைத்தும் புத்தியால் நிச்சயித்தும் அவிவேக ஜனங்கள் ஆனந்தமும் ஆச்சரியமும் அடைகிறார்கள்.
* எப்பொழுது இந்திரியங்களுக்கு யாதொரு வேலையுமில்லையோ அறிவு மறையாமலிருக்கிறதோ அப்போது அஸம் ப்ரக்ஞாத சமாதி.

## 241 வது நாள்

* மனிதனிடமிருந்து பாப அணுக்கள் எப்போது நசித்து வருகிறதோ அப்போது இந்திரிய விஷய ஆசைகள் குறைய ஆரம்பிக்கின்றன.
* பிரம்ம லோகம் சிவ லோகம் விஷ்ணு லோகம் இவைகளிலுள்ள பிரஜைகள் தங்களது ஒற்றுமையான நினைப்பாலேயே ஆண் பெண் சேர்க்கை கொண்டு புத்திரர்களை உண்டு பண்ணுகிறார்கள்.
* மனத்தைப் பற்றியும் உலகத்தைப் பற்றியதும் இந்திரியங்களைப் பற்றியது மான சுக துக்கங்கள் மனதிற் சிந்தையாக இருப்பதனால் அவைகள் வளர்ச்சியடைகிறதில்லை.

## 242 வது நாள்

* செய்யப்படுகிற காரியங்களெல்லாம் பிரார்த்த கர்மத்தைக் கொண்டு சர்வேஸ்வரன் செய்விக்கிறாரென்று ஒவ்வொருவரும் எண்ணவேண்டும் நிச்சயிக்க வேண்டும்.
* நித்திய அனித்திய சுகங்களில் எது கிடைத்தாலும் ஒருவரும்ஒருவரை ஒருவர் சந்திப்பதில்லை பார்ப்பதில்லை.
* நிர்விகார புருஷர்கள் நேரே பிரஹ்மத்தை விட்டு உலகத்தைப் பார்ப்பதே யில்லை.

## 243 வது நாள்

* உலக விஷய ஆசைகளை வெறுத்தவனிடம் அவ்விஷய ஆசைகள் அதிகமாகச் சுற்ற ஆரம்பிக்கின்றன.
* பகிரங்க ஞானசாதனமுடையவனைக் கண்டு உலகம் பிரம்மிக்கிறது.
* சகல தத்துவங்களும் எவன் சொன்னபடி கேட்கிறதோ அவன் ஹம்ஸாம்ஸ யோகி.
* இராஜச தாமஸ நாசஞ் செய்கிற தபசிகளுக்கு ஈஸ்வர சிருஷ்டி வடிவ இயற்கை ஆகாரங்கள் சித்திக்கின்றன.

## 244 வது நாள்

* மனோ நாசம் வாசனா நாசம் ஆசா நாசம் குண நாசம் குறி நாசம் இவ்வைந்தும் ஏக காலத்தில் சித்திக்கின்றன.
* சர்வ தத்துவங்களையுங் கண்டு நயந்து செல்பவன் சொந்த யோகி.
* ஏக காலத்தில் ஐந்து அவஸ்தைகளையும் அனுபவிப்பவன் ராஜ ராஜேஸ்வர யோகி.
* நமஸ்காரத்தைப் பெற்றுக் கொள்ளும் உத்தமன் நமஸ்காரம் நமக்கேயென்று அகங்காரம் கொண்டால் சுகிர்தம் விலகி விடுகிறது.

## 245 வது நாள்

* முதலில் சுகமாகத் தோற்றுகிற வஸ்து பின் துக்கத்தையும் துக்கமாகத் தோற்றுகிற வஸ்து சுகத்தையும் கொடுக்கிறது.
* எந்தக் காலத்தில் மனதிற்குப் பூரண திருப்தி மாறாதிருக்கிறதோ அந்தக் காலம் சமாதி ஸ்திதி.
* பாம்பின் காலைப் பாம்பே பார்த்துக் கொள்வதுபோலத் தன்னைத் தானே அறிந்து கொள்ள வேண்டும்.

## 246 வது நாள்

* அமாவாசையில் சந்திரனிருந்தும் காணப்படாததுபோல அஞ்ஞானிகளிடத்தில் பரமாத்மா இருந்தும் இருளாற் காணப்படுவதில்லை.
* ஞானம் பழக ஆரம்பிக்கிறவனும் பழகுபவனும் ஞானியோடு சேர்ந்திருக்க மாட்டார்கள்.
* அஞ்ஞான காலத்தில் நாம் ஞானிகளுக்கு வெளி விஷயமாகச் செய்யப் படுகிற உபகாரம் நமக்கு ஞான காலத்தில வந்து சேருகின்றன.

## 247 வது நாள்

* ஏதாவது காரணங்களைக் கொண்டு பொருளில் வெறுப்புண்டாகுமானால் அது உத்தமமானதல்ல.
* முயற்சியில்லாமலே மோக்ஷ சாதனமான ஞானங் கிடைக்குமென்று எண்ணுவது அதிர்ஷடமில்லாத காரணமென்றறிய வேண்டும்.
* பூமிக்கும் துக்கத்திற்க்குமுள்ள முடிவு தெரிகிறவரை ஞானோதய முண்டாகிற தில்லை.
* ஹிருதயம் எந்தக் காலத்திலும் கலப்பில்லாமிருப்பதில்லை.

## 248 வது நாள்

* யாதொரு திருஷ்டாந்தங்களுக்கும் அகப்படாத பரமாத்மாவைப் பற்றி ஒருவரும் யாருக்கும் உபதேசிக்க முடியாது.
* உண்மை ஞானிகளை அவமதிப்பவர்களுக்கு ஞானிகளின் தலைவராகிய கல்லால் மஹறிஷியென்கிற மஹா தேவரது சாபம் வந்து சேருகிறது.
* ஒரு உண்மை ஞானியுடன் ஆயிரந்தரம் பிராண வாயு வெளியில் வந்து உட்புகுங் காலம் வரை பழகுவதாலுண்டாகும் சுகிர்தத்தை நூறு தெய்வ வருஷங்கள் வரை அளவற்ற வேத சாஸ்திரங்களைக் கற்பதாலும் அடைய முடியாது.

## 249 வது நாள்

* ஓம் நமோ பகவதே வாசுதேவாய என்ற இந்த துவாத சாக்ஷர மஹா மந்திரத்தை மரண காலத்தில் ஜெபித்தால் விஷ்ணு பகவானது சாரூப்ய பதவி கிடைக்கிறது.
* கருமேந்திரியம் ஐந்து ஞானேந்திரியம் ஐந்து ஆகப் பத்தையும் நன்றாக அடக்கிப் பிராணனில் சேர்த்துப் பிராணனை மனதிலும் மனத்தைப் புத்தியிலும் புத்தியை அகங்காரத்திலும் அகங்காரத்தைப் பிரகிருதியிலும் நசிக்கச் செய்கிறவன் சாங்கியமத ஞானியாகிறான்.

## 250 வது நாள்

* நன்மை தீமைகளை விட்டவன் கடவுளைத் தவிர மற்றவைகளையெல்லாம் விட்டவனாகிறான்.
* மனத்திலிருந்து மாறுகிற இன்பமும் தன்னிடத்திலிருந்து மாறாத இன்பமும் உதயமாகின்றன.
* ஆதி சிருஷ்டி காலத்தில் ஜீவாத்மாவைத் தவிர வேறொன்றுமில்லை.
* அந்தர்முகத்திலுள்ள ஞானகர்மானுபவத்தைப் பகிர்முகத்தில் காட்டக் கூடியவர் மதாசாரியர் ஆகிறார்.

## 251 வது நாள்

* ஆத்ம ஞானம் அஷ்டமாசித்தி இவைகளை அடைய வேண்டி அப்பியாசிக்கிறவர்களுக்கு ஜீவகாருண்யம் உண்மை ஞானம் இரண்டுமில்லாத கரும சித்தர்கள் தீங்கு விளைவிக்கிறார்கள்.
* சூக்ஷ்ம பஞ்சாக்ஷரத்தைப் பிரணவத்துடன் அதிதேவதையின் சங்கல்பத்தோடு பத்துக் கோடி வரை ஜெபம் செய்து வந்தால் மனத்திலுள்ள மாயையின் வீர்யம் அடங்கி ஜோதி ஸ்வரூபம் அனுபவத்திலாகிறது.

## 252 வது நாள்

* ஆரம்ப சிருஷ்டி காலமான கிருதயுகத்தில் ஆண் பெண் சேர்க்கையின்றிச் சங்கல்பத்தினாலேயே கெர்ப்பமும் திரேதாயுக காலங்களில் ஸ்திரீகள் புருஷர்களைத் தொடுவதால் கெர்ப்பமும், துவாபர யுக காலங்களில் நியாயப் படியுள்ள ஆண் பெண் சேர்க்கையால் கெர்ப்பமும், கலியுக காலத்தில் நியாயப்படியும் நியாயந்தவறியுமுள்ள ஆண் பெண் சேர்க்கையால் கெர்ப்பமுண்டாகிறது.
* உண்மை ஞானிக்கு அவஸ்யம் அனுபவித்துத் தீர வேண்டிய பிராரத்த நோயைத் தவிர மற்ற நோய்கள் வருவதில்லை.
* வாசனையும் மனமும் பிறிந்திருக்கிற காலத்தில் மனமும் வாசனையும் நசித்து விடுகின்றன.

## 253 வது நாள்

* சங்கல்ப பிராரத்த அவதார புருஷர்களை ஜெகத்ரக்ஷக யீஸ்வரன் சுற்றிக் கொண்டேயிருக்கிறான்.
* சங்கல்பம் இருக்கிறவரை உபசாந்தம் உதயமாவதில்லை.
* அளவற்ற யோக சக்தியும் தபோ மகிமையுமுள்ளவர்கள் யாராயிருந்தாலும் பஞ்ச கிருத்தியங்களைச் செய்யலாம்.
* ஸ்வதந்திரவாதிகள் மனதைச் சாந்த சொரூபத்தில் நிறுத்தி ஜெகத்தை நோக்கித் திரும்பி விடுகிறார்கள்.

## 254 வது நாள்

* தூங்காமல் தூங்குதல் என்கிற நனவிற் சுழுப்தி நிலை வந்த பின்பும் அடைய வேண்டிய நிலை இருக்கிறது.
* சூக்ஷ்ம புத்தியில்லாத நல்லவனைச் சிநேகிப்பதிலும் சூக்ஷ்ம புத்தியுள்ள கெட்டவனைச் சிநேகிப்பது நல்லது.
* வேத ரகஸ்யமான ஞாபகம் ஒன்றுதான் ஆத்மாவைப் பற்றியுள்ள சந்தேகங்களை அறுத்தெரியக் கூடியது.
* அவ்யக்த லக்ஷணமும் பிரகிருதியின் சொரூபத்தையுங் கொண்டது மனம்.

## 255 வது நாள்

* பிராணாதிகளெல்லாம் உறங்குகிற நிருவிகல்ப ஸமாதி காலத்தில் விழித்திருந்து ஆனந்தமளிக்கிற புருஷனெவனோ அவனை அடைவது அமிர்தயோகம்.
* மூன்றவஸ்தைகளையும் ஏகாலத்தில் இல்லாமற் செய்து விடுகின்ற ஆருடி யோகத்தால் பிரத்யகாத்ம தரிசனத்தை அடையலாம்.
* மனோ சாந்தம் எவ்வளவு உண்டானாலும் உபசாந்தம் உண்டானதாகச் சொல்லிவிட முடியாது.

## 256 வது நாள்

* பிறவாத மோக்ஷத்தை அடைய வேண்டியவர்கள் ஒருவிதமான பகிரங்க யாகமும் செய்ய வேண்டியதில்லை.
* ஜீவ ஹிம்ஸையில்லாததும் ஜீவப் பிராணிகளைக் கொல்லாததும் மாம்ஸ பக்ஷண முண்ணாததும் மது வர்க்கங்களின்றியதும் பலனை விரும்பாததும் மோக்ஷ சாதனமுமான யாகத்தை ரிஷிகளும் தேவர்களும் தேவாதிபதியும் பரமேஸ்வரரும் அங்கீகரிக்கிறார்கள்.
* தியான யோகத்தில் மனது அடங்கியிருக்கிறதென்று நினைத்துப் புருஷ முயற்சியை விட்டுவிடக் கூடாது.

## 257 வது நாள்

* சந்தேகத்தை காட்டிலும் பெரிய துன்பம் உலகத்திலில்லை.
* அகங்காரம் ஆசை துவேஷம் மரண பயம் அவித்தை என்ற ஐந்து துக்கங்களையும் க்ஷேத்ரக்ஞனை அனுபவித்தறிந்த மஹான்கள் விலக்கி விடுகிறார்கள்.
* ஞான சாஸ்திரங்களாலும் சாது சங்கத்தாலும் தனது வைராக்கிய அனுபவத்தினாலும் விசாரணையினாலும் ஆத்மாவிற்கும் மனதிற்குமுள்ள வேற்றுமைகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது ஒவ்வொரு மனுஷ்யனுடைய அந்தரங்கக் கடமையாகிறது.

## 258 வது நாள்

* விதேக மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் அசுத்தமும் சலனமுள்ள எண்ணங்களையும் காரியங்களையும் செய்யாமலிருக்க வேண்டும்.
* கரும யோகத்தினாலுண்டாகிற சித்த சுத்தியை அடைய வேண்டியும் மோக்ஷ மார்க்கத்தில் தடையின்றிச் செல்ல வேண்டியதற்காகவும் அனித்தியமாகிய அழகான உலகங்களின் இச்சையை விலக்கியிருக்க வேண்டும்.
* புடமிட்ட பொன்னும் இரும்புடன் சேர்ந்தால் விளங்காமற் போவதுபோல அழுக்குப் போகாத மனமுள்ளவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட ஞானம் விளங்க மாட்டாது.

## 259 வது நாள்

* விறகில்லாத காலத்தில் அக்கினி அவிந்து போய் விட்டாலும் சூக்ஷ்மமாகி வாயுவோடு கலந்து சமயம் போல வெளிவருவது போல ஈஸ்வர அதிகார அவதார புருஷர்களும் ஜனித்து மறைந்து விட்டதாகத் தோன்றினாலும் மோக்ஷ மத ஞான தர்மங்கள் மறைந்த காலத்தில் வெளிக்குத் தோற்றுகிறார்கள்.
* தோல்வியடைந்தாலும் எடுத்த காரியத்தைத் தொடர்ந்து செய்து கொண்டு வருபவனை பிரயத்ன தேவதை கொண்டாடுகிறது.
* சரீரத்தில் ஆசை வைப்பதால் கூடச் சூக்ஷ்மமாக ஆத்மாவிலே பிரியம் வைத்தவனாகிறான்.

## 260 வது நாள்

* தகாததை விரும்பக் கூடாது; இகழ்ச்சியானதை நிந்திக்கக் கூடாது.
* சாதுக்களிடம் செல்பவர்கள் அவர்களது கொடூர வார்த்தைகள் செய்கைகள் பார்வைகள் இவைகளை பரீக்ஷைக்கானவைகளென்று பொறுமையுடன் இருக்க வேண்டும்.
* பிரஹ்மத்தை உண்மையாய் அனுபவத்திலறிந்த மஹாத்மாக்களின் வாய் மொழிகள் வேத வசனம் போன்றதென்ற ஆதி சிருஷ்டி கர்த்தர்கள் அறிவிக்கிறார்கள்.

## 261 வது நாள்

* பரமேஸ்வரரால் வெளியில் வரப்பட்ட வேதங்கள் மறைந்துபோன காலத்தில் ருஷிகளின் ஹிருதய மூலமாய் உபநிஷத் சொரூபங்களாக வெளியில் வருகிறது.
* சரீர சம்பந்தமான ரக்ஷணைகள் ஆஸ்ரம தர்மங்கள் கரும யோகங்கள் இவைகள் ஒழுங்காக நடைபெற வேண்டுமானால் உலகப் பொருளை வெகு மரியாதையுடனும் தைரியத்துடனும் நியாத்துடனும் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

## 262 வது நாள்

* பிரஹ்மம் பக்குவர்களுக்கு உபதேசித்த காலத்தில் பரோக்ஷமாயும் சமாதி காலத்தில் அபரோக்ஷமாயும் விளங்கும்.
* வெட்கம் பயம் துக்கம் பிரியம் கோபம் மதம் காமம் இவைகள் ஆத்ம ஞானமில்லாத காரணத்தாலுண்டாகின்றன.
* ஞானிகள் எந்தப் பரமாத்மாவை நிருவிகல்ப ஸமாதியில் தரிசிக்கிறார்களோ அந்த சொரூபத்தையே ஜாக்கிரத்திலும் தரிசிக்கிறார்கள்.

## 263 வது நாள்

* நல்லறிவு வெளியிற் சென்ற காலத்தில் அகங்காரம் குடி கொள்ளுகிறது.
* பெரிய ரிஷியும் தபசியும் தேவாதி தேவருமாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைப் பத்து வருஷங்கள் வரை வேறு காரியங்களின்றி பஜித்துக் கொண்டு அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜெபிப்பவன் பரம பதத்தை அடைகிறான்.
* அறிவில்லாதவர்களுக்கு ஞானோபதேசத்தையும் தர்மோபதேசத்தையும் அளிக்கிறவனுடைய பயனுக்கு பூமி முழுவதையும் தானம் செய்தாலுண்டாகும் பயனும் சமானமாக மாட்டாது.

## 264 வது நாள்

* மாயையும் முக்குணங்களும் ஈஸ்வரரும் அகங்கார தத்துவத்தினின்றுண்டானவர்கள்.
* பிரத்யகாத்ம தரிசனமானவுடன் பிரபல சித்திகள் வருகிறது.
* பெண்களின் சரீர சுகத்தை விரும்பாதவர்கள் ஸ்திரீகளது உருவப்படங்கள் உருவ விக்கிரகங்கள் கூட்டங்கள் கோவில் உத்ஸவாதிகள் நாடகங்கள் ஸ்திரீகளைப் பற்றி வர்ணிக்கிற சாஸ்திரங்கள் ஸ்திரீகளைப் பற்றிய வார்த்தைகள் காமத்துடன் ஸ்திரீகளைத் திரும்பிப் பார்த்தல் உற்று நோக்கல் விசாரித்தல் இவைகளை அடியோடு விட்டுவிட வேண்டும்.

## 265 வது நாள்

* அவரவர்கள் கருமத்தாலும் மனோ சங்கல்பத்தாலும் பரமேஸ்வர ஆக்ஞையாலும் அவரவர்களுக்கு வந்திருக்கிற சரீர யாத்திரைக்கு வேண்டிய அளவு ஆகாரமுண்ண வேண்டும்.
* சாந்தியை விரும்புகிற மனிதன் கெம்பீரமான புத்தியுடன் இந்திரியங்களை அடக்க வேண்டும்.
* மனம் உள்ள வரையில் ஞானமோ அஞ்ஞானமோ மனத்திலிருக்கிறது. மனமில்லாத காலத்தில் ஞானாஞ் ஞானமிரண்டுமின்றி பரிசுத்தமான பிரஹ்மமாகிறான்.

## 266 வது நாள்

* ஞானிகளான ஆசாரியர்களிடம் சிஷ்யர்கள் செல்வதற்குமுன் செல்லுமுறைகள் காணுமுறை கண்டபின் நடக்கும் முறை நடந்தபின் அனுஷ்டிக்கிற வழி இவைகளை சாஸ்திர மூலமாய் அனுஷ்டானத்தில் தெரிந்து கொள்ள வேண்டும்.
* பெண்கள் வடிவமென்னும் ஆசையாகிற காரணத்திலிருந்து பிராணிகளின் சிருஷ்டி உண்டாக வேண்டியிருந்தாலும் பேரறிவாளர்கள் பலருள் ஒருவராவது சாமான்ய விசேஷமாய் விலக்கி விடலாம்.

## 267 வது நாள்

* ஸ்திரீகளின் அசுத்தவுடலைச் சுத்தமாகவும் சுந்தரமாகவும் தோற்றுவிப்பது அவிவேகம்.
* கோபம் லோபம் பயம் கர்வம் அபிமானம் இவைகளை விட்டகன்றவன் பரிசுத்தன்.
* சம்சாரமென்னும் யந்திரத்தையும் பிரவிர்த்திமார்க்க நடனத்தையும் நடை பெறச் செய்கிறவர்கள் பெண்களென்று தெரிந்து கொள்ள வேண்டும்.
* பெண்களும் புருஷர்களும் எந்தக் காலத்திலும் சேர்ந்து ஸ்நானம் செய்யக் கூடாது.

## 268 வது நாள்

* ஆசாரியர் அருளின்றி எந்தவிதமான அப்பியாஸமும் செய்யக் கூடாது.
* மனதை வெளியிற் செல்ல வைக்கக் கூடிய ஏதுவான காரியங்களை ஞான யோகிகளும் பக்த யோகிகளும் இராஜ யோகிகளும் முன் பின் பாராமல் அடியோடு விலக்கிவிட வேண்டும்.
* மந்திரங்களுடன் கூடிய யாகங்களிலுள்ள மது மாம்ஸங்களை உண்பதாலும் பாபமுண்டென்று முக்கியமான சில மஹரிஷிகள் கூறுகிறார்கள்.
* உருவமில்லாத வஸ்துவைத் தியானித்து கஷ்டப்படுவதைக் காட்டிலும் உருவமுள்ள வஸ்துவைத் தியானிப்பது சிரேஷ்டம்.

## 269 வது நாள்

* மனத்திலுள்ள தோஷங்களை மூலத்துடன் அறுத்து விடுவதால் மீண்டும் முளைக்காதிருக்கிறது.
* இராஜச தாமஸ ஆகாரங்களை உண்பதால் அவிவேக மனதுண்டாகிப் பரிசுத்த ஞானமார்க்கத்துக்கு செல்ல விடுவதில்லை.
* முதலில் சத்துவ குணத்தைப் பெற்றுக் கொண்டு ராஜச தாமஸ குணங்களை அகற்றிவிட்டு அப்பால் சத்துவ குணத்தையும் விலக்கிவிட வேண்டும்.
* பொருள் துக்கமென்று தெரிந்துவிட்ட காலத்தில் சகல தர்மங்களையும் விட்டு விடலாம்.

## 270 வது நாள்

* மனம் தெளியத் தெளிய பெரிய மாறுதலுண்டாகும். ஞானப்பியாஸம் முதிர்ந்த போது தெய்வ தரிசனமும் அவர்களது அனுக்கிரகமும் அனித்திய போகங்களும் வலுவில் வருகின்றன.
* உண்மைப் பொருள்களின் உருவந் தெரியாதிருத்தல் எதார்த்தப் பொருளை வேறு பொருளாகக் காட்டுதல் இவை மோஹம்.
* எவன் மனதை உலகம் இழுக்கவில்லையோ அவன் தத்துவார்த்த யோகி.
* உலகம் செத்ததாக எவன் மனதிற்குப் பட்டதோ அவன் சிதானந்த யோகி.

## 271 வது நாள்

* சரீர வஸ்துவை இல்லாததாகத் திடத்தோடு எண்ணுபவன் கற்பனாதீத ஞானி.
* சரீர மத்தியில் தரிசித்த வஸ்துவைச் சர்வ இடங்களிலும் காண்பவன் பூர்ண காமன்.
* சாஸ்திர மார்க்கம் வேறு அனுபவ மார்க்கம் வேறு.
* அனுபவிகளுக்கு யுக்தியும் வேதமும் பிரமாணமல்ல.
* ஆத்ம விசாரணையில்லாத மனிதனை மிருகமென்று சுருதி கூறுகிறது.

## 272 வது நாள்

* யாரிடமும் நன்மொழி கூறுவதால் ஞானம் தடையின்றி அழகாகப் பிரகாசிக்க ஆரம்பிக்கிறது.
* சுக்லத்தின் உற்பத்தியை ஆதியில் ஜனங்களுக்கு வெளியிட்டவர் அத்திரி மஹறிஷி.
* இரஜோ குணத்திலிருந்து இந்திரியங்களுக்கு உற்பத்தி லயம் இரண்டு முண்டாகின்றன.
* ஞான யோகிக்கும் கரும யோகிக்கும அந்தரங்க லட்சியத்தில் பேதமில்லை.

## 273 வது நாள்

* ஞானேந்திரியங்கள் இந்திரியங்களுக்குள்ள விஷயங்களை அடைந்தாலும் ஆசையற்ற மனிதனைப் பற்றுகிறதில்லை.
* கூறத்தக்க வசனங்களைச் சூக்ஷமமான தர்மத்தோடு பிறர் குற்றத்தை விட்டு மிதமாக வசனிக்க வேண்டும்.
* பிரம்மசரிய விரதத்துடன் ஹடயோகத்தை உத்தமமாக அனுஷ்டிப்பவன் திரும்பி வராத பிரம்ம லோகத்தையடைகிறான். மத்திபமாக அனுஷ்டிப்பவன் ஞானவானாக பிறக்கிறான். அதமமாக அனுஷ்டிப்பவன் ஸ்வர்க்கத்தை அடைகிறான்.

## 274 வது நாள்

* பிரம்மசர்ய விரதமில்லாத மனிதர்கள் சரீர மனோபலங்களை இழந்து ஆத்ம ஞான மூலத்தையும் பறி கொடுத்து விடுகிறார்கள்.
* மாயையை வகித்த ஜீவன் ஈஸ்வரனாகிறான்.
* ஈஸ்வர சாயுஜ்யமடைகிறவன் நேரே பிரஹ்மத்தைச் சேருகிறதில்லை.
* சகல தேவர்களும் ஆத்மாவினிடத்திலிருக்கிறதென்று ஆத்மானுபவிகள் சொல்லுகிறார்கள்.

## 275 வது நாள்

* விசேஷமாக ஞானத்திற் பயிற்சி பெற்றுப் பிரஹ்ம விசாரணையுடையவர்கள் அவஸ்யம் விழித்துக் கொண்டே யிருப்பார்களென்று யோகிகளுக்குத் தலைவரான நாராயண மஹரிஷி சொல்லுகிறார்.
* மனத்தில் மறைந்து கிடக்கிற பூர்வ ஜென்மாந்தர வாசனைகளை ஹம்ஸ யோக பலத்தால் அறிய வேண்டும்.
* பஞ்ச பூதங்களில் ஆகாயமும் பூமியும் பெண், அக்னி ஜலம் வாயு மூன்றும் ஆண்.

## 276 வது நாள்

* நித்திரை காலத்தில் தமோ குணம் ரஜோ குணம் பிரகாசிக்கிறபடியால் சத்துவ குண சம்பன்னர்கள் நித்திரையை விலக்கியிருப்பார்கள்.
* தாமத குண அவதாரமும் அக்னியின் அம்ஸமுமான நித்திரைக்கு இடங் கொடுப்பதால் சரீர பலம் மனோ பலம் பிராண பலம் இவைகள் குறைந்து தேஜஸ் வடிவமான தேவியும் விலகுகிறாள்.
* தனக்கும் யோகாப்பியாசத்திற்கும் அனுகூலமாயிருக்கிற வஸ்துக்களைத் தெரிந்து கொண்டு தேசகால விஷயங்களை யொத்த ஆகாரத்தை அனுசரிக்கலாம்.

## 277 வது நாள்

* மலங்களால் நிறைந்ததும் வேர்வை நீரால் சூழப்பட்டதும் நாற்றமும் புழுக்களுமுடையதும் அருவருக்கத் தக்கதுமான ஆண் பெண்களுடைய சரீரமென்னும் பாண்டமானது நரகமென்பது, அறிவுடையவர்களது மதம்.
* மாயைப் பற்றி ஞானிகள் ஒன்றும் நினைப்பதில்லை.
* பிராணிகளிடம் தயை பாராட்டுவதால் மனதிற்கு அபிமானமுண்டாகிறபடியால் உலகமானது கர்மத்தின் பிரயோஜனமென்று தெரிந்து கொண்டு பிராணிகளிடம் கருணை செய்வதையும் ஞானயோகி விட்டுவிட வேண்டும்.

## 278 வது நாள்

* புருஷர்களின் பீஜமான சுக்லமானது இந்திரனைத் தேவதையாகக் கொண்டதாகையால் இந்திரியம் என்ற பெயர் வாய்த்திருக்கிறது.
* மாயையை லௌகீகர்கள் உண்டென்றும் வைதீகர் இல்லையென்றும் சொல்லுகிறார்கள்.
* பக்குவர்களுக்கு உலகமும் அதன் காரிய வஸ்துக்களும் ஞான சாதனமாகத் தெரிகிறது.

## 279 வது நாள்

* சேஷ்டைகளை விட்டவனும் ஆசைப்படத் தக்க எல்லாப் பொருள்களிலிருந்தும் விடுபட்டவனும் ஜனங்களில்லாத விடத்தில் சஞ்சரிப்பவனும் லகுவான ஆகாரமுள்ளவனும் மனத்தின் ஏகாக்கிர பாவமென்கிற தவமுடையவனும் இந்திரியங்களை அடக்கினவனும் கிலேசங்களை ஞானத்தாலெறிந்தவனும் சமாதிக்குரிய அங்கங்களில் சிரத்தையுடையவனுமான மனிதன் சந்தேகமில்லாமல் பிரஹ்மத்தை அடைகிறான்.

## 280 வது நாள்

* சமாதியில் மனது நிலைபெறவில்லையானால் அதற்குரிய யோக மார்க்கத்தை அனுஷ்டிக்க வேண்டும்.
* யோகியானவன் பிறருக்கு வெளியாகக் கூடிய நிலைமையில் இருக்கக் கூடாது.
* இந்திரியங்களையும் மனத்தையும் தன் வசப்படுத்திக் கொண்ட யோகிகளுக்கு இந்திரிய தேவதைகள் பிரசன்னமாகி மோக்ஷத்திற்குச் சகாயஞ் செய்கின்றன.

## 281 வது நாள்

* அவல் பிண்ணாக்கு சுண்டல் காய்கள் கனிகள் வித்துக்கள் கீரைகள் பிட்டு, மா, கிழங்குகள் பக்ஷணங்கள் நவதான்ய பதார்த்தங்கள் பழுத்த சருகுகள் இவைகளை யோகியானவன் மிதமாக உபயோகப்படுத்த வேண்டும்.
* கருமத்திற்கு வேண்டி யோகத்திற்கு இடையூறு செய்யக் கூடாது.
* எந்த ஜீவப் பிராணிகளையும் கொலை செய்கிறவனிடத்தில் சூர்ய குமாரியான சிரத்தை என்பவள் விலகி விடுகிறாள்.

## 282 வது நாள்

* ஜீவப் பிராணிகளின் ஹிம்ஸை கொலை முதலியவைகளையுடைய யாகங் களை அடியோடு நிறுத்திவிடும்படி போதித்த புத்தபகவானது மதமே மஹரிஷிகளின் அங்கீகாரம்.
* சரீர சுகம் உலக சுகம் இவைகளை விரும்பாமல் அழகிய ஆடைகள் வீடுகள் வாகனங்கள் ஆகாரங்கள் இவைகளையும் அனுபவியாமல் இருப்பவர்கள்தான் தரும சாஸ்திரப்படி உலகத்தில் உயிர் வாழ முடியும்.
* சமயத்திற்கு வேண்டியதை அனுபவித்துக் கொண்டு மற்றதைத் தள்ளி விடுகிறவர்கள் சிருஷ்டியின் உண்மை கண்டவர்கள்.

## 283 வது நாள்

* உண்மை ஞானிகள் ஜீவாத்மாவாகிய பசுவை ஞானாக்னியில் சாந்த நெய்யோடு பரமாத்ம தேவதைக்கு அர்ப்பணம் செய்கிற தெய்வ எக்ஞத்தைச் செய்கிறார்கள்.
* கருமத்தால் முடிவு பெற்றவர்கள் தம்மையே திரவ்யமாகக் கொண்டு உபதேஸமென்கிற யாகஞ் செய்கிறார்கள்.
* சேறு கொசு நாற்றம் முதலியனவுள்ள இடங்களில் பசுவைக் கட்டுவதாலும் கன்றைவிட்டுப் பிரிப்பதாலும் பெரிய பாபமுண்டாகிறது.

## 284 வது நாள்

* இலந்தை நெல்லி புரசு அரசு புளி சாலம் மராகுறுந்து கழுதாளி இம்மரத்தடி களில் தபஸ் செய்வதாலும் எந்தவிதமான புண்ணிய காரியங்களை ஆரம்பிப்பதாலும் சீக்கிரம் சித்தியாகிறது.
* மனத்தை அடக்கிய தர்மிஷ்டன் அர்ச்சிராதி மார்க்கத்தால் பிரம்ம லோகத்தையடைந்து திரும்பி வருகிறதில்லை. மனத்தை அடக்காத தர்மிஷ்டன் தூமாதி மார்க்கமாகச் சத்திய லோகஞ் சென்று திரும்பி விடுகிறான்.

## 285 வது நாள்

* பொய்ஞானம் பொய்ப்பக்தி பொய்வார்த்தை பொய்வேஷம் பொய்நூல் பொய்க்கருமம் பொய்வேதம் பொய்க்குரு பொய்ச்சீடன் இவைகளுக்கு மதிப்பும் மெய்ஞானம் மெய்ப்பக்தி மெய்வார்த்தை மெய்வேஷம் மெய்நூல் மெய்க்கருமம் மெய்வேதம் மெய்க்குரு மெய்சீடன் இவைகளுக்கு அவமதிப்பும் எக்காலத்திலும் பாமர ஜனங்களுக்குப் படுகிறது.
* உபாஸனையால் சகுண நிர்க்குணத்தை அறிந்தவர்கள் அர்ச்சிராதி மார்க்கத்தால் பிரஹ்ம லோகத்தை அடைகிறார்கள்.

## 286 வது நாள்

* மனதையும் பிராணனையும் ஒன்றாக்கிச் சுழு முனையில் நிறுத்தி பிரம்மரந்திரத்திற் சேர்க்கும் போது குண்டலி சக்தி விரியும். அப்போது ஞான சித்தர்கள் வலுவில்தரிசனம் தருகிறார்கள்.
* அறிந்தும் அறியாமலும் செய்யப்படுகிற காரியங்களில் அறியாமற் செய்யப்படுகிறவைகள் பூர்ண பலனைகளைக் கொடுப்பதில்லை.
* வேதத்திற் கூறப்படுகிற சமஸ்காரங்களுடன் சரீரத்தை உண்டு பண்ணுவதால் சரீர சுத்தி உண்டாகிறது.

## 287 வது நாள்

* கஷ்ட தசையிலும் அசௌகரியமான இடங்களிலுங் கூட நிஷ்காம கர்மிகள் தர்மத்தை விடுவதில்லை.
* சாஸ்திரத் திருடர்களும் பிரம்மத் திருடர்களுமுள்ள தேசத்தில் உலகத் திருடர்கள் அதிகமாயிருக்கிறார்கள்.
* தபசியும் யோகியும் அதிக ஆகாரமுண்ணக் கூடாது. உண்ணாமலிருக்கவும் கூடாது.

## 288 வது நாள்

* நாவைச் சாபல்யமின்றி வைத்துக் கொள்ள வேண்டும்.
* ஞான ரகஸ்யங்களையும் தத்துவார்த்தங்களையும் கேட்கும்போது தன்னிடத்தில் லயித்து விடுகிறவர்கள் தத்வ வுபதேசி.
* பிராணனை அடக்குதல் ஹடயோகம்.
* ஞானாப்பியாசிகள் தன் பக்குவத்திற்கு மேலான சாதுக்களுடன் பழக்கஞ் செய்கிறார்கள்.

## 289 வது நாள்

* மனதில் ஏதாவதொரு கோரிக்கையை வைத்துக் கொண்டு அப்பியாசத்திற்கு ஆரம்பித்தால் பிரயோஜனப்பட மாட்டாது.
* பிரஹ்மத்தை நோக்கிச் செல்லுகிற ஜீவன் இடையில் தடையான பல மண்டபங்களைத் தாண்டியும் தங்கியும் செய்கிறான்.
* சங்கல்பமிருக்கிறவரை எவனுக்கும்காமமிருக்கிறது.
* கர்மானுஷ்டானங்கள் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களைப் பரிசுத்தமாக்குகின்றன.

## 290 வது நாள்

* சந்நியாசியின் தர்மம் கிரஹஸ்தனுக்கு அதர்மமாகவும் கிரஹஸ்தன் தர்மம் சந்நியாசிக்கு அதர்மமாகவும் இருக்கிறது.
* சகல தத்துவங்களுக்கும் அதீதமான பரமாத்மாவைத் தியானிக்கிறவன் சகலதேவர்கள் ரிஷிகள் ஞானிகள் எல்லோரையும் தியானித்தவனாகிறான்.
* கிருதயுக ஆரம்பத்தில் யாதொரு வருணாஸ்ரம பேதங்களின்றியிருந்தது. திரேதா யுக ஆரம்பத்தில் மனிதர்கள் அதைப் பேதப்படுத்திக் கொண்டார்கள்.

## 291 வது நாள்

* பிரபஞ்ச வஸ்துக்களில் ஞான சாதனமான வஸ்துக்களை மட்டும் உபயோகித்துக் கொண்டு ஞான சாதனமல்லாதவைகளை தூஷித்தல் கூடாது.
* வேதத்தை அறிவதால் கடவுளின் பெருமையையும் பகவத் கீதையை அறிவதால் கண்ணன் மகிமையையும் ஞானிகளை அறிவதால் ரிஷிக் கூ;டங்களின் உண்மைகளையும ஞான வாசிஷ்டத்தை அறிவதால் வசிஷ்டர் பெருமையையும் யோகத்தை அறிவதால் ஜோதியின் பெருமையையும் மனத்தை அறிவதால் ஆத்மாவின் பெருமையையும் பந்தத்தை அறிவதால் மோக்ஷத்தின் பெருமையையும் சிவ ரகஸ்யத்தை அறிவதால் மஹேஸ்வரர் மகத்துவத்தையும் அறிந்து கொள்ள வேண்டும்.

## 292 வது நாள்

* ஸ்திரீகளின் சரீரங்களிலும் ஞானாஞ்ஞானம் இரண்டுமிருப்பதனாலும் பரமாத்ம அம்சமுடையவர்களாய் விளங்குகிறபடியினாலும் அவர்களது சரீர சம்பந்தத்தை மட்டும் விலக்கியிருப்பது உத்தமமே யொழிய அவர்களைப் பற்றி தூஷிப்பதால் மாதாகட்குத் தலைவியான பராசக்தியின் கோபத்திற்கு ஆளாக வேண்டியிருக்கிறது.
* சிவ விஷ்ணு பேதத்தால் சண்டையிட்டுக் கொள்பவர்கள் அவிவேகிகள்.
* அளவு கடந்து சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த போதிலும் பாபமுள்ள வரை மனத் தெளிவு ஏற்படாது.

## 293 வது நாள்

* மனத்தின் பரிபக்குவங்களுக்கேற்றவாறு குரு வாக்கியங்கள் பிரகாசிக்கின்றன.
* ஈஸ்வர வடிவமும் குரு வடிவமும் ஒன்று.
* ஹிருதய பக்குவத்திற்குத் தக்கவாறு குருமார்கள் பிரசன்னமாவார்கள்.
* உலக வஸ்துக்களைக் கண்டு தியங்குவது ஜென்மாந்தர வாசனைப் பழக்கம்.
* உண்மையான பரமாத்ம ஞானியிடம் சம்பூர்ண தேவர்களும்பிரகாசிக்கிறார்கள்.
* ஸ்திரீகளிடத்திலும் புருஷர்களிடத்திலும் மாயையிருக்க ஸ்திரீகளை மட்டும் மாயையுடையவர்களென்று கூறுதல் பிசகு.

## 294 வது நாள்

* தசேந்திரியங்களையும் மனத்தையும் அடக்கியாளுவதை விட்டு மாதர்களைத் தூஷிப்பதில் பயனில்லை.
* ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களை எவ்விதக் காரணங்களை முன்னிட்டும் உபத்திரவம் செய்யக் கூடாது.
* தத்துவங்களைக் கடந்து செல்லச் செல்ல ரகஸ்யமும் உண்மையுமான விஷயங்கள் புலப்படுகின்றன.
* பஞ்ச பூதங்களின் சூக்ஷ்ம அம்சத்தைத் தாண்டும்போது மூலப் பிரகிருதி பிரசன்னமாகிறது.

## 295 வது நாள்

* செய்யுஞ் செயலகளெல்லாம் தத்துவங்களைப் பொறுத்ததேயன்றி ஆத்மாவைப் பொறுத்ததல்ல.
* ஞானிகளை அடைந்தவன் கடவுளை அடைந்தவனாகிறான்.
* ஒவ்வொரு அவதார புருஷர்களின் ஆத்ம ஞான ஒளியும் ஜீவகாருண்ய நிலைமையும் உபதேச மொழிகளும் அபிப்பிராயங்களும் காம்பீர்ய நோக்கமும் உலகிற் சஞ்சரித்த அந்தரங்க எண்ணங்களும் அவர்களால் அருளிச் செய்த சாஸ்திரங்களின் ரகஸ்யங்களும் மதஸ்தாபன சக்திகளும் அவர்களது ஸ்தூலம் மறைந்த பின்புதான் புலப்படும்.

## 296 வது நாள்

* உண்மை ஞானிகளின் தரிசன பலத்தினாலேயே ஜீவர்களது அஞ்ஞானம் விலக ஆரம்பிக்கிறது.
* வேதம் ஞானிகளது ஹிருதயத்தில் வசிக்கிறது.
* பரமார்த்தீக ஞானிகளின் வாக்கியங்கள் பரமாத்மாவின் வாக்கியங்கள்.
* பிரஹ்ம ஞானிகளை எதிர்க்கத் திரிமூர்த்திகளாலும் முடிகிறதில்லை.

## 297 வது நாள்

* தத்துவாதீத மஹாத்மாக்கள் பாமரனிடத்தில் பாமரனாகவும பக்தனிடத்தில் பக்தனாகவும் ஞானிகளிடத்து ஞானியாகவும் அரசனிடத்தில் அரசனாகவும், பிக்ஷைக்காரனிடத்தில் பிக்ஷைக்காரணாகவும் நாஸ்திகனிடத்தில் நாஸ்திகனாகவும் ஆஸ்திகனிடத்தில் ஆஸ்திகனாகவும் கெட்டவனிடத்தில் கெட்டவனாகவும் நல்லவனிடத்தில் நல்லவனாகவும இருப்பார்கள்.
* ஞானிகள் பூர்ண சந்திரனை யொத்தவர்கள்.

## 298 வது நாள்

* மத விஷயத்தில் கட்டுப்பாடுடையவர்களுக்கு மனத் தெளிவு ஏற்படாது.
* மனம் பரிசுத்தமான காலத்தில் ஆசாரியர் தானே வருவார்.
* மனம் ஒன்றை அடக்கினால் மற்றெல்லாத் தத்துவங்களையும் அடக்கினதாகிறது.
* வலுவில் வந்த போகங்களை வேண்டாமென்று வெறுத்துத் தள்ளுவதால் வியக்த சக்திகள் வெளிப்படுகிறது.

## 299 வது நாள்

* ஞான யோக அப்பியாசிகளும் எதார்த்தமானவர்களும் குதர்க்க வாதிகளுடன் பழகக் கூடாது.
* நமது சரீரத்திற்குள்ள சுக துக்கங்கள் போலவே எல்லா ஜீவராசிகளுக்கு முள்ளதென்று கருதுதல் பகிர்முக ஜீவகாருண்யம்.
* எவ்வளவு சாஸ்திர பாண்டித்யமுடையவனாயிருந்தாலும் ஜனன மரண நிவிர்த்திற்கு வழி தேடாமலிருப்பானானால் அவன் சாஸ்திரமலடன்.

## 300 வது நாள்

* பேத புத்தியுடையவர்களுக்காகவே வேதம் உபநிஷத்து ஆகமம் ஸ்மிருதி புராணம் இதிகாசம் இவைகள் ஏற்பட்டன.
* பிரஹ்ம ஞானிகளால் ஏற்படுத்தப்பட்ட நூற்களுக்குச் சாஸ்திர மென்றும் அஞ்ஞானிகளாலேற்படுத்தப்பட்ட நூற்களுக்கு அசாஸ்திரமென்றும் பெயர்.
* சுருதி யுக்தி அனுபவம் இம்மூன்றுக்கும் பொருத்தமாகப் பேசுவதுதான் விவேகிகளுக்கு அழகு.

## 301 வது நாள்

* மதங்களின் முடிவை அறியாது மதப் பிடிவாதமாகப் பேசுகிறவன் முடிவில் வியர்த்தமடைகிறான்.
* மண் பெண் பொன் என்ற இம்மூன்றில் எதையாவது ஒன்றைப்பற்றினால் மற்றிரண்டும் தொடர ஆரம்பிக்கும்.
* விட்டால் மூன்றாசைகளையும் விடவேண்டும் வைத்தால் மூன்றையும் வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்றைவிட்டு மற்றொன்றை வைத்துக் கொள்வது முடியாது.

## 302 வது நாள்

* பிறர் பொருளைக் கவரும் எண்ணமுடையவன் பிறர் மனைவியைக் கற்பழிக்க எண்ணுபவன் கற்பழித்தவன் கலங்காத துஷ்டன் இவைகளை ஹிம்சிப்பதற்காக மிருத்யு தேவதையும் அதன் சைன்யங்களாகிய வியாதிகளும் எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கின்றன.
* மாறுதலுடைய பிரபஞ்ச ஜனங்கள் ஒரே குணமுடையவர்களாக இருப்பார்களென் றெண்ணி விடக்கூடாது.
* சுத்தியுடைய ஹிருதயத்தில் அருள் அருவிகள் பாய ஆரம்பிக்கின்றன.

## 303 வது நாள்

* சத்திய சொரூபனாயிருந்து கொண்டு சத்திய சாந்தனாய் நடந்து கொள்பவன் ஒருவருக்கும் அஞ்சுவதில்லை.
* ஒன்றுக்கும் பயப்படாமல் தானாயிருப்பதே உண்மை ஞானம்.
* தன்னிடத்திலுள்ள அனுபவமே சகலருக்குமென்று சிருஷ்டியின் உண்மை தெரியாதவர்கள் நினைக்கிறார்கள்.
* ஒருவனோடு ஒருவன் பழக ஆரம்பித்தால் ஒருவனிடத்திலிள்ள குணங்கள் மற்றொருவனை மெல்ல எட்டிப் பார்க்கின்றன.

## 304 வது நாள்

* ஞானானுபவம் வளர வளர உலகானுபவம் தானே குறைய ஆரம்பிக்கின்றன. இந்திரியங்களும் ஓய்வடைய ஆரம்பிக்கின்றது.
* யாரிடத்திலும் குற்றம் குணம் இரண்டையும் நோக்காது தனித்திருப்பவன் உத்தமன். குணத்தை மட்டும் பார்ப்பவன் மத்திபன். குற்றம் குணம் இரண்டையும் கவனிப்பவன் அதமன் குற்றத்தை மட்டும் பார்ப்பவன் அதமாதமன்.

## 305 வது நாள்

* சங்கல்பம் கூடாதென்று நினைப்பதே சங்கல்பமென்று சங்கல்பத்தை ஜெயித்தவர்கள் கூறுகிறார்கள்.
* மனது எந்த வஸ்துவில் அதிகமாகக் கிரிடித்துக் கொண்டிருக்கிறதோ அந்த வஸ்துவின் அனுபவமே அடிக்கடி வாக்கிலும் மனதிலும் ததும்பிக் கொண்டேயிருக்கும்.
* மனோ பக்குவதற்குத் தக்கவாறு பிரபஞ்சம் தோற்றுகிறது.

## 306 வது நாள்

* மதத் துவேஷத்தோடு ஞானமடைய எண்ணுகிறவன் சேதுவிலிருந்தபடியே கங்காஸ்நானம் பண்ண எண்ணுகிறவன் போலாகிறான்.
* ஜீவர்களின் பரிபக்குவத்திற்குத் தக்கவாறும் காலம் தேசம் இடம் தொழில் இவைகளுக்கு ஏற்றவாறும் உண்மை ஞானிகளின் உபதேசங்கள் மாறுபட்டுத் தோன்றும்.
* பிரம்ம தேவர் முதல் புழு வரையில் ஒவ்வொரு ஜீவர்களுக்கும் சகுணம் நிர்க்குணம் என்ற இரண்டு வடிவங்களிருக்கின்றன. அதில் சகுணம் அழிவுள்ளது நிர்க்குணம் அழிவில்லாதது.

## 307 வது நாள்

* புத்தியின் விசாலமானது பூரணத்தை அறியவொட்டாமல் தடுத்து விடுகின்றன.
* சரீர பாவனையுடையவர்களிடத்தில் ஆத்ம பாவனையுடையவர்கள் அதிகமாகப் பழக்கம் வைத்துக் கொள்ளக் கூடாது.
* பகிர்முக வேலைகளும் ஆசைகளும் எண்ணங்களும் ஒழிந்தவர்களுக்கே அந்தர்முக வேலைகளையும் ஆசைகளையும் எண்ணங்களையும் காட்ட வேண்டும்.

## 308 வது நாள்

* பிரபஞ்சத்தை நோக்கிக் கொண்டு பிரபஞ்ச காரியங்களைச் செய்யக் கூடாது.
* பிரஹ்மானுபவத்தை நோக்கிக் கொண்டே உலக காரியங்களில் பிரவேசிக்க வேண்டும்.
* மாம்ஸ ஆகாரங்களும் மற்றும் பல தீமையான வஸ்துக்களும் இயற்கைக் குணத்தை மாற்றிவிட முடியாது.
* சன்மார்க்க யோக ஞானமார்க்கத்தை யுடைவர்களிடம் யோகிபோல் வந்து மாயை கெடுத்து விடும்.

## 309 வது நாள்

* சில ஆயிர வருஷங்களுக்குள் சில மதங்கள் தோன்றியும் சில மதங்கள் அழிந்தும் போய் விட்டன.
* நமக்குச் சகாயம் செய்வதுபோல் வந்து மாயை நம்மை ஏமாற்றிவிடும்.
* பஞ்சேந்திரியங்களில் ஒன்றையும் பற்றியிறாதவர்கள் மேலான தபோதனர் ஆகிறார்கள்.

## 310 வது நாள்

* மஹா தபசிகளும் யோகிகளும் செய்ய முடியாத காரியத்தை உண்மையான கற்புத் தன்மை வாய்ந்த சங்கல்ப ஸ்வாதீனஞ் செய்து கொண்டிருக்கப்பட்ட பதிவிரதைகள் செய்து விடுவார்கள்.
* உண்மையான பதிவிரதையின் ஏகாக்கிர புத்திக்கும் சமானமாகப் பெரியோர்களின் புத்தியைக் கூடச் சொல்ல முடியாது.
* ஞான மோக்ஷ மார்க்கங்களில் ஒரு விஷயமும் தெரியாது அலைகின்றவர் களைக் காமிய நிஷ்காமிய கர்மங்களில் திடமாகப் புகுத்தி விடுவது நலம்.

## 311 வது நாள்

* ஏகாக்கிர புத்தி வாய்க்கப் பெறாதவர்களுக்கெல்லாம் சகல வடிவமான புண்ணிய கருமங்களையே போதிக்க வேண்டும்.
* லோகாந்தரங்களில் ஆசை கொண்டு மஹா யாகங்கள் தபசுகள் யோகங்கள் ஹோமங்கள் உபவாஸங்கள் உபாசனைகள் இவைகளை அனுஷ்டிக்கிறவர்கள் ஆழ்ந்த புத்தியுடையவர்களும் தெளிந்த மனமுடையவர்களும் தீரர்களுமல்ல.
* காமத்தைக் காட்டிலும் கோபம் பலமுடையது. காமத்தை ஜெயிக்கக் கூடியவர்களால் கோபத்தை ஜெயிக்க முடியாது.

## 312 வது நாள்

* உண்மையான பிரஹ்ம ஞான மார்க்கத்தையும் நிவிர்த்தி மார்க்கத்தையும் அடைய விரும்புகிறவர்கள் திரிமூர்த்திகள் ரிஷிகள் லோக பாலர்கள் இவர்களையும் வேதங்களையும் நிராகரிக்க வேண்டி வருகிறது.
* பொருளை மட்டும் அடையத் தெரிந்து தர்மத்தையும் காமத்தையும் அடையத் தெரியாதவன் துரதிஷ்டசாலியென்றறிய வேண்டும்.
* இகலோக ஆசைகளை விடுவதைக் காட்டிலும் பரலோக ஆசைகளை விடுவது கஷ்டம்.

## 313 வது நாள்

* ஒரு நிலைமையுமில்லாதவர்களுங் கூட சில சமயங்களில் தெய்வகால வசத்தால் நீதி மார்க்கங்களையும் ஞான மார்க்கங்களையும் பேசுவார்கள்.
* துஷ்ட புத்தியுடையவர்களும் அஞ்ஞானிகளும் காமிகளுங்கூட ஆத்ம ஞான யோக மார்க்கங்களின் கதிகளைப் பிரஸ்தாபிப்பார்கள்.
* மஹா தேவனாயிருந்தாலும் அவர் கூறுகிற எல்லா விஷயங்களையும் ஒப்புக் கொள்ளுகிறவன் உண்மை அறியாதவன்.
* ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சூக்ஷ்மமான புத்தியே தெய்வமாக நினைத்துக் கொண்டு சகல காரியங்களையும் செய்ய வேண்டும்.

## 314 வது நாள்

* பொறுத்துக் கொள்வது தெய்வ குணம் பொறுத்துக் கொள்ளாதது அசுர குணம்.
* இகலோகம் பரலோகம் இரண்டையும் வெறுத்தவர்கள் பிரஹ்மத்தை அறிய யோக்கியர்கள்.
* சாருவாகன் புத்தன் இவர்களது மதத்தின் கர்மயோக நிச்சயத்தையும் பரலோகக் கொள்கைகளையும் பிரமாணமின்றித் தள்ளிவிட வேண்டும்.
* செய்து பலனில்லையென்றும் பொய்யென்றும் நிச்சயித்த எந்தக் காரியத்தையும் செய்து பயனில்லை பலிதமாகாது.

## 315 வது நாள்

* தாய் தந்தை மனைவி மக்கள் சுற்றம் வீடு செல்வம் இவைகளில் ஆசக்தியுடையவர்கள் விஷயமயக்கப் பைத்தியக்காரர்கள்.
* பகிர்முக கர்மயோகத்திற்கும் அந்தர்முக ஞான யோகத்திற்கும் பல விரோதங்களிருக்கின்றன.
* யாகம் தர்மம் ஹோமம் தவம் பூஜை தெய்வ தரிசனம் குரு சிஷ்யன் சிராத்தம் தர்ப்பணம் இவைகளெல்லாம் வயிற்றுப் பிழைப்புக்காகவும் பணச் சம்பாத்தியத்திற்காகவும் பெரிய சாஸ்திரங்களில் எழுதி வைத்திருக்கிறதென்று சார்வாக மதம் கூறுகிறது.

## 316 வது நாள்

* பிரத்தியக்ஷ சுகங்களை விட்டு அப்பிரத்தியக்ஷ சுகம் தேடுவது அறிவீனமென்று உலோகாய மதம் பிரதிபாதிக்கிறது.
* ஒன்றோடொன்று பற்றற்றிருக்கின்ற ஞான மார்க்கத்தை ஆதாரமாகக் கொண்டு ஒன்றொடொன்று பிணைந்திருக்கப்பட்ட கர்ம மார்க்கம் உலக மார்க்கம் இவைகளைப் போதிப்பதில் பிரயோஜனமில்லை.
* பற்றை விட்டவர்களின் தர்மம் வேறு பற்றை விடாதவர்களின் தர்மம் வேறு.

## 317 வது நாள்

* பரலோக ஞானமும் நம்பிக்கையுமில்லாதவன் பலமான பெரிய பாபங்களுக்கு அஞ்சுவதில்லை.
* நாஸ்திகப் பிராம்மணர்கள் தர்மத்தையும் பெரியவர்களையும் சாஸ்திர நீதிகளையும் ஏளனம் செய்வார்கள்.
* கர்மமும் ஞானமும் ஒன்றென்று உள் பார்வையுடையவர்களும் வேறென்று வெளிப்பார்வையுடையவர்களும் நினைக்கிறார்கள்.
* பரமாத்மாவை அறிய வேண்டியவன் சங்கல்பத்தைச் சுருக்கவும் விடவும் வேண்டியது.

## 318 வது நாள்

* இந்திரியங்களை அடக்காதவனை எல்லாவுலகத்தாரும் பரிகாசம் செய்கிறார்கள்.
* நெடு நாள் யோசித்து உண்மை தெரிந்து கொண்டபின் தர்மத்தை ஒருவனுக்குச் சொல்ல வேண்டும்.
* செய்து வருவதை விட்டுவிடுவதானால் வெகு நாள் எண்ணியே விட்டுவிட வேண்டும்.
* வெகுநாள் ஆராய்ந்து ஒருவனை மித்திரனாகக் கொண்டவன் அதிகமாகப் பழகுவதற்குத் தகுதியுள்ளவன்.

## 319 வது நாள்

* எதையும் தீர்க்க தரிசனத்துடன் தாமதித்துச் செய்கிற தீரர்களிடத்தில் சகல சத்குணங்களும் காரியங்களும் முறைகளும் இதரர்கள் வந்தடையும் தன்மைகளும் உண்டாகின்றன.
* அன்னம் பாயசம் புஷ்பம் மா இவைகளாலேயே யாக பலி செய்ய வேண்டுமென்று உண்மையான வேதத்திற் கூறப்பட்டிருக்கிறது.
* எந்த தர்மஞ் செய்தபோதிலும் ஹிம்ஸையின்றிச் செய்வதே சிரேஷ்டமான பலனைக் கொடுக்கிறது.

## 320 வது நாள்

* பிரஹ்மமில்லை யென்கிறவர்களும் ஆத்மாவில் சந்தேகமுடையவர்களும் புகழை விரும்புகிறவர்களும் அழிகிற பதவிகளில் ஆசைப்படுகிறவர்களும் குறுகிய புத்தியுள்ளவர்களுமானவர்களால் ஜீவ ஹிம்ஸையுள்ள யாகம் செய்யப்படுகிறதென்று ஸ்வாயம்பு மனு சொல்லியிருக்கிறார்.
* சரீரம் வாடாமலும் மிருத்யுவுக்கு வசப்படாமலுமிருக்கும்படியான கர்மத்தில் பிரவேசிக்க வேண்டும்.

## 321 வது நாள்

* கள் தேன் மீன் மாம்ஸம் சாராயம் திலான்னம் வெங்காயம் சுரைக்காய் உருளைக்கிழங்கு முருங்கைக்காய் முள்ளங்கி பீர்க்கங்காய் காளான் இவைகளை உத்தமர்கள் உண்ணக் கூடாது.
* அசிரத்தையோடும் லோபத்தோடும் கொடுக்கப்பட்ட ஆகாரத்தைப் புசிப்பதால் தமோ குணம் உண்டாகிறது.
* தாமத குண ஆகாரங்களும் பிரஹ்ம அமிர்த பாவனையால் சத்துவ குண ஆகாரமாய் விடுகிறது.

## 322 வது நாள்

* சரீர வெறுப்பு உலக வெறுப்பு புண்ணிய மிகுதி பாபநாசம் பரமேஸ்வர கிருபை குருவுபதேசம் ஞானாரம்பம் சமாதி நிஷ்டை ஜீவன் முக்தி விதேக முக்தி இவைகள் முறையே தொடர்கின்றன.
* ஸ்தூல சரீரத்துடன் எவ்வளவு காலம் வரை உலகத்தில் வசிக்கிறோமோ அவ்வளவு காலம் வரை பிரம்மா விஷ்ணு ருத்திரன் மஹேஸ்வரன் சதாசிவன் முருகன் கணபதி லக்ஷ்மி பார்வதி சரஸ்வதி முதலிய சகுண மூர்த்திகளின் பக்தி அவஸ்யம் வேண்டும்.

## 323 வது நாள்

* குளம் கிணறு மடம் சாலை சோலை நந்தவனம் சத்திரம் ஆலயம் பாடசாலை இவைகளை ஏற்படுத்திப் பாமரர்கள் ஞானமடைய எண்ணுகிறார்கள்.
* நிஷ்காரண நிஷ்காமகர்மி சூர்ய மண்டல மார்க்கமாய்ப் பிரம்ம லோகஞ் சென்று பின் திரும்பாமல் அங்கிருந்து கொண்டு ஆத்ம ஞானத்தை அடைகிறான்.
* வார்த்தை நித்திரை நடை, நினைப்பு மர்ம சக்தி வெளி வருதல் இவைகளால் மனிதர்களுக்குப் பலம் குறைகிறது.

## 324 வது நாள்

* அன்பு கர்வம் துரோகம் பாபச் செய்கை அப்பிரியம் இவைகளை யோஜித்துத் தாமதித்துச் செய்கிறவனும் சிலாகிக்கப்படுகிறான்.
* சிருஷ்டிக்கு முன் ஜீவேஸ்வரர்களும் சகுண மூர்த்திகளும் மூலப் பிரகிருதியும் இல்லை.
* தன்னைச் சமாதானம் செய்து கொள்ளாமல் பிறரைச் சமாதானஞ் செய்ய ஆரம்பிக்கிறவர்களைக் கண்டு தேவர்கள் பரிகசிக்கிறார்கள்.

## 325 வது நாள்

* கொலை செய்த கடின குற்றவாளியைக் கிருதயுகத்தில் சீ என்று வைதலும் திரேதாவில் ஒரு முகூர்த்த காலம் நிந்தித்தலும் துவாபராவில் திரவ்யத்தை பறித்து விடுதலும் கலியில் கொலையும் தண்டனையாக விதிக்கப்பட்டிருக்கிறது.
* புத்தியை விருத்தி ஞானத்தால் அடக்க வேண்டும்.
* சந்தனம் ஹாரம் புஷ்பம் வெற்றிலை மேளம் சிவிகை ருசி பெற்ற ஆகாரங்கள் ஸ்திரீ பாட்டு இவைகளை துறவி விரும்பக் கூடாது.

## 326 வது நாள்

* கிராமப் பொதுக் காரியங்களிலும் தனிக்குடும்ப விவாரங்களிலும் அனுகூல மாகவோ பிரதிகூலமாகவோ சன்னியாசி பிரவேசிக்கக் கூடாது. பேசக் கூடாது.
* சத்தியம் என்பது மோக்ஷம் மரணமில்லாமை பரமாத்மா என்று அர்த்தம்.
* ஆசையை விலக்குவதால் அதர்மத்தையும் அனித்தியத்தை விலக்குவதால் சிநேகிதத்தையும் விலக்குவதாகிறது.

## 327 வது நாள்

* யோகிகள் மிதாகாரத்தினாலும் நித்திரையை விட்டதினாலும் ரோகத்தையும் உபத்திரவத்தையும் நீக்கிக் கொள்ளுகிறார்கள்.
* சுத்த சத்துவ குணமுடையவர்களுக்கு நித்திரை வரமாட்டாது.
* பஞ்சமூர்த்திகள் கணபதி சுப்ரமண்யன் பிரமரிஷிகள் தேவர்கள் சூர்ய சந்திரர்கள் யமன் இந்திரன் முதலியவர்கள் இரண்டில்லாத பிரஹ்ம சைதன்யத்திற் கலந்து மஹா மௌனத்திலிருப்பதே அபிப்பிராயமாயிருந்தாலும் பரமேஸ்வர நியதிப்படி தங்கள் தங்களது பிராத்த காலத்தை நினைத்துத் தங்களுடைய காரியங்களை நடத்தி வருகிறார்கள்.

## 328 வது நாள்

* உண்மையான ஞான இச்சையுள்ளவர்களுக்கு காஷாயம் ருத்திராக்ஷம் விபூதி சாஸ்திரங்கள் கமண்டலம் யாத்திரை தண்டம் ஜெபமணி மனிதர் கூட்டம் இவைகள் பந்தத்தைக் கொடுக்கிறது.
* நான்கு வருணங்கள் நான்கு ஆஸ்ரமங்கள் இவை எட்டும் ஒன்றுக்கொன்று தாழ்ந்தவைகளல்ல. எட்டின் பலனும் ஒன்றாயிருக்கின்றன.
* யாதொரு பற்றுமின்றிய குணமும் ஞானமும் உதயமாகுமானால் ஆஸ்ரமங்களும் வருணங்களும் சிலாகிக்கத் தக்கவைகள்.

## 329 வது நாள்

* துறவி பிறர் பூஜிப்பதை ஏற்றுக் கொள்ளக் கூடாது நித்திரை செய்யும்போது ஒருவரையும் வைத்துக் கொள்ளக் கூடாது.
* சுதர்மத்தில் யாரும் கெட்டதையும் நல்லதையும் எண்ணலாகாது.
* சன்னியாசிகள், ஸ்திரீகள் தனித்து வசிக்கக் கூடிய கிரகங்களில் உண்ணவும் உறங்கவும் போகவும் கூடாது.

## 330 வது நாள்

* முன்னாலே பழகிய இடங்களுக்குத் துறவிகள் போகக் கூடாது.
* சன்னியாசி வேறு எந்த ஆஸ்ரமிகளோடும் பழகக் கூடாது.
* ஸ்திரீ விஷயமாக மனத்தில் வந்த குண தோஷங்களைப் பெரிதான பிரயத்தஞ் செய்து ஒரு ஜென்ம முயற்சியிலாவது போக்கிக் கொள்ள வேண்டும்.
* பரமாத்மாவின் கிரஹணங்களே ஜீவாத்மா.

## 331 வது நாள்

* பரமேஸ்வரராகிய வாசுவேரின் நான்கிலொரு பாக சக்தியுடையவர் ஸ்ரீ கிருஷ்ண பகவான் என்ற சூக்ஷ்ம சாஸ்திரம் கூறுகிறது.
* பரமாத்மகல்பிதம் பிரகிருதி பிரகிருதிகல்பிதம் மாயை மாயாகல்பிதம் முக்குணம் முக்குணகல்பிதம் ஈஸ்வரன் ஈஸ்வரகல்பிதம் வேதாந்தம் வேதாந்தகல்பிதம் வேதம் வேதகல்பிதம் சங்கல்பம் சங்கல்ப பலகல்பித்தமாயிருப்பதால் சங்கல்பத்தை ஜெயிக்க ஆரம்பித்தவர்களும் ஜெயித்தவர்களும் வேதாகம புராண இதிகாச ஸ்மிருதிகளை லட்சியஞ் செய்ய மாட்டார்கள்.

## 332 வது நாள்

* ஓம் நமோ பகவதே தட்சிணாமூர்த்தயே என்ற இந்த மஹாதேவர் மந்திரத்தைப் பிரக்ஞாபதத்தையும் கூடச் சேர்த்துப் பத்து லக்ஷம் ஜெபஞ் செய்வதோடு தட்சிணாமூர்த்தி வடிவத்தைக் கல்லால விருக்ஷ வீராசன சின் முத்திராங்க சகிதமாய்த் தியானித்து வர மஹாதேவர் பிரசன்னமாகிறார்.
* உத்தராயண காலத்திலும் புண்ணிய நக்ஷத்திரம் முகூர்த்தம் இவைகளிலும் மரணமடைந்தவன் புண்ணியசாலி.

## 333 வது நாள்

* பஞ்ச பாண்டவர்கள் தங்களது ஸ்தூல சரீரங்களை விட்டுத் தேவலோகத்தில் பல காலம் வசித்து விட்டு மீண்டும் கலியுக காலத்தில் பூலோகத்தில் மனிதர்களாகப் பிறந்து சித்தர்களாய் விடுவார்களென்று பீஷ்மாசாரியர் சொல்லியிருக்கிறார்.
* எந்தப் பிறப்பை அடைந்ததனால் ஆத்ம ரக்ஷக ஞானம் உத்தமமாக உதயமாகிறதோ அந்தப் பிறப்பு மேலானது.
* சரஸ்வதி நைமிசம் புஷ்கரம் கங்கை கண்டகி யமுனை காவேரி கோதாவிரி தாம்பிரபருணி ஸ்யமந்த பஞ்சகம் முதலிய புண்ணிய நதிகளில் தபசிகள் அடிக்கடி நீராட வேண்டும்.

## 334 வது நாள்

* மோக்ஷ முயற்சிக்கும் தர்மத்திற்கும் கால நிச்சயம் சொல்லப்படவில்லை.
* ஸ்திரீகள் வேதத்திற் கூறப்பட்டிருக்கிற தர்மத்தையுந் தள்ளி மாதா பிதாக்களது உத்தரவையுந்தாண்டி பர்த்தாவினது கட்டளையையும் மீறிக் குலாசாரத்தையும் விட்டு ஆத்ம ஞானமடையவோ தேவாலயங்களுக்குச் செல்லவோ சந்நியாசிகளைத் தரிசிக்கவோ செல்வது உசிதமல்ல. ஜெகதீஸ்வரனது அனுமதி பெற்றால் முற்கூறிய கட்டளைகளை மீறிக் கொள்ளலாம்.
* அந்தராத்மாவான பரமேஸ்வரர் ஜீவர்களின் கர்ம பலன்களைப் பார்த்து அதற்குத் தக்கபடி புத்தியை ஏவிக் கொண்டு எல்லாரிடத்திலுமிருக்கிறார்.

## 335 வது நாள்

* ஸ்தூல கர்மங்களுக்கு ஸ்தூல புருஷனையும் சூக்ஷ்ம கருமங்களுக்கு சூக்ஷ்ம புருஷனையும் எதிர்பார்த்து ஸ்திரீகள் நடக்க வேண்டும்.
* பிரஹ்ம ஞானத்தையும் பரம ஏகாந்த பக்தியையும் அடைவது வாஸ்தவமாயிருந்தால் ஸ்திரீகள் எல்லோரையும் மீறி விடலாம்.
* உத்தம புருஷனுடைய பிராண சக்தி பிரம்மரந்திரத்தின் வழியாலும் மத்திம புருஷனுடைய பிராணன் நடு வழியாலும் அதம புருஷனுடைய பிராணன் கீழ் வழியாலும் சென்று விடுகிறது.

## 336 வது நாள்

* விஷம், தூக்கு, திருடர் கை, வீடு விழுதல், ஜலம், துஷ்ட மிருகம் சர்ப்பம் பசு இவைகளாலுண்டாகும் மரணம் இழிவானவை.
* பலாத்காரமாகத் தேகத்தை விட்டு உயிரைப் பிறிக்கிறவன் யாதனா சரீரத்தை அடைகிறான் ருத்திர சிருஷ்டியான பைசாச மாகிறான்.
* மனதையே நரகம் பாபம் மஹாபாபம் சங்கல்பம் பந்தம் சம்ஸாரம் துக்கம் ஜன்மம் அவித்தை மாயை பிரகிருதி துவைதம் பிரதிபந்தம் என்று சாதுக்கள் கூறுவர்.

## 337 வது நாள்

* சூத்திரனும் ஸ்திரீயும் ஞானசம்மதமாக இந்திரியங்களை ஜெயித்து தபஞ் செய்யலாமென்று சக்தி குமாரர் கூறுகிறார்.
* பார்வதி லக்ஷ்மி சரஸ்வதி இம்மூவரைப் பெண்களென்றும் அரன் அயன் அரி இம்மூவரை ஆண்களென்றும் நினைக்கிறவன் அவிவேக அதம பக்தன்.

## 338 வது நாள்

* தாமஸ குணத்தினால் வீணாக அக்கினியை உண்டாக்குபவனிடமும் காலமல்லாத காலத்திலும் பருவ காலத்திலும் பிரயோஜனமில்லாமல் மரம் செடி கொடி இவைகளைப் பறிப்பவனிடமும் ரஜஸ்வலையான ஸ்திரீகளிடம் சேருகிறவனிடத்திலும் ஜலத்தில் கோழையையும் மல ஜலத்தையும் போக்குகிறவனிடத்திலும் பிரம்மஹத்தி தோஷம் வந்து சேருகிறது.
* நிருவிகல்ப சமாதி பெற்ற ஜீவன் முக்தர்கள் விதேக முக்தியை விரும்பிப் பிராரப்த முடிவை எதிர் பார்த்த வண்ணமாயிருக்கிறார்கள்.

## 339 வது நாள்

* அழித்துடி ஸ்திரீ சங்கத்தால் பிறப்புக்கு ஏதுவாகுமென்று பயப்படுகிறவன் வெகு சுத்தன்.
* பிராம்மணர்களையும் தேவர்களையும் அவமதிக்கிற காலத்தில் ஈஸ்வர கோபம் உண்டாகிறது.
* ஆபத்துக் காலத்தில் பிராம்மணன் ஜீவனத்திற்காக க்ஷத்திரிய வைஸ்ய சூத்திர தர்மங்களை அனுஷ்டிக்கலாமென்று பராசரர் கூறியிருக்கிறார்.

## 340 வது நாள்

* யாவையும் அனித்தியமென்று உறுதியாய் நினைத்துக் கொண்டு கிரகஸ்தாஸ்ரமத்தில் வாழ்ந்து வந்தால் ராகத் துவேஷாதி குணங்களும் மமதையும் பற்றாது.
* ஹிமாலயா பருவதத்தின் தென் கீழ்ப் பாகத்திலுள்ள சகரார்ப்பதம் என்ற இடத்தில் பிரபலமான மஹரிஷிகள் எப்போதும் வசித்து வருகிறார்கள்.
* நான்கு ஜாதிகளையும் விட்ட அனுலோமப் பிரதிலோம ஜாதிகளில் பிறந்தவர்களும்கூட தபோ சக்தியினால் ரிஷிகளாயிருக்கிறார்கள்.

## 341 வது நாள்

* ஒரு கால் பிரஹ்மானுபத்திற் சொக்கி நெடு நேரஞ் சென்று கீழிறங்கி அப்புறம் ஏகதேசமாக அனுபவம் உதயமாகுமானால் பிரஹ்ம வித்து என்றறிக.
* எவனுக்கு அனுபவம் தோற்றித் தோற்றி மறைகிறதோ, எவன் மிகுந்த ஜீவ காருண்யமுடையவனோ, எவன் சுருதியில் வல்லமையுடையவனோ, எவன் மனது உபதேச சாமர்த்தியமுடையவனோ எவன் பிரஹ்மானுபவியாயிருந்தும் உலக உத்தாரணத்தை நாடுகிறானோ எவனுக்கு வலுவில் பரமேஸ்வர சக்தியும் அஷ்டமாசித்திகளும் வந்து சேருகின்றனவோ எவன் வேதத்திற்கு மீறாது போதிக்கின்றானோ எவன் சநாதன தர்மப்படி நடந்து காண்பிக்கின்றானோ எவன் சர்வ சமத்துவமானவனோ எவன் உலக இன்பங்களைத் துச்சமாய் நினைத்து உலகத்தை ரட்சிக்க எண்ணுகிறானோ எவன் சகல சுவாதந்தரியமாயிருக்கிறானோ அவன் அவதார புருஷன்.

## 342 வது நாள்

* பிறருக்குத் தீமையைச் செய்தும் கெட்ட செயல்களைப் புரிந்தும் தனக்கு மேன்மை தேடக் கூடாது.
* சிறிது கிடைத்தாலும் சந்தோஷிக்கிறவன் புண்ணியசாலி.
* பாப கர்மங்களிலிருந்து விலகுவது எப்போதும் புண்ணிய சீலமாயிருப்பது சத்துக்களின் சாவகாசம் சத்சாஸ்திரப் பயிற்சி இவைகள் சிரேயஸை அடைவதற்குக் காரணம்.

## 343 வது நாள்

* சிரேயஸையும் மாறாத சுகத்தையும் விரும்புகிறவன் பஞ்சேந்திரிய குணங்களைக் காரணமின்றி விரும்பக் கூடாது. பிறரை தூஷித்துத் தனக்குக் கீர்த்தி தேடக் கூடாது. அதிக ஆகாரமுண்ணக் கூடாது.
* சத்புத்திரனுள்ளவர்களுக்கு கர்மப் பிரயோஜனமுண்டாகிறது.
* திரவ்யத்திற்காகச் சிநேகிப்பவனை விட்டுவிட வேண்டும்.
* பொருளுக்காகத் தர்மம் செய்கிறவர்களையும் இப்படியுள்ள இடங்களையும் விட்டு விலக வேண்டும்.

## 344 வது நாள்

* புத்திரனில்லாதவர்கள் மோக்ஷமில்லாதவர்களென்பது பிரயோஜனமற்ற விசாரணையில்லாத உலக வசனம்.
* கிருமிகளும் எறும்புகளுங்கூட ஆகாரத்தைத் தேடி உண்ணுகிறது. அதுபோல மனிதனுமிருந்தால் மனிதக் கிருமியென்றே சொல்ல வேண்டும்.
* ஆயிரங்கோடி வண்டி தான்யத்தில் ஒருபடி தான்யத்தையும், பெரிய அழகிய விஸ்தாரமாகிய உப்பரிகையில் தனக்கு வேண்டிய ஒரு மஞ்சத்தையும் தன் வாழ்க்கைக்குப்போதுமென்று நினைக்கிறவன் பெரிய பாக்கியசாலி.

## 345 வது நாள்

* இரவு பகலும் போஜனத்திற்காகவே அலைகிறவன் பாபமுடையவன்.
* ருத்ரருடைய ஆண் குறியின் வழியாகச் சுக்கில ரூபமாய் வெளி வந்த படியால் ஆகாயத்தின் நடுவழியில் சுக்கிரன் போவதில்லை.
* பசியால் ஆகாரமின்றி ஆகாரத்திற்காகத் திருடியவனுக்கு பாபமில்லை.
* மிருத்யுவினால் உலகம் அழிக்கப்படுவதையும் பசியினால் பிராணிகள் வருந்துவதையும் வியாதினால் உலகத்தார் பீடிக்கப்படுவதையும் எவன் நன்றாயறிந்திருக்கிறானோ அவன் தெளிவு அடைந்தவன்.

## 346 வது நாள்

* கரும யோகிகள் பிரபஞ்சத்தை மாயையாகவும் பக்தி யோகிகள் பகவானாக வும் வித்துவான்கள் விராட் சொரூபமாகவும் சாதுக்கள் பரமாத்மாவாகவும் நிச்சயித்திருக்கிறார்கள். மஹா மௌனிகள் மேற் கூறியவைகளைக் கருதாமல் சைதன்யத்திற் கலந்து விடுகிறார்கள்.
* மழை பயிர் மனைவி செல்வம் பூமி புத்திரன் உத்தியோகம் வியாபாரம் இராஜ்ய பதவி சரீர சுகம் இவைகளைக் குறித்து யாத்திரை தேவ தரிசனம் மந்திர ஜெபம் ஹோமம் இவைகளைச் செய்கிறவன் மூடன்.

## 347 வது நாள்

* நடக்கிற காரியங்கள் நடந்து கொண்டேயிருக்க இன்ன காரணத்தால் தான் இது உண்டாயிற்றென்று மறைப்புள்ள மனிதர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.
* ஐந்து சிஷ்யர்களோடு ஆரம்பிக்கிற மதமானது காலக் கிரமத்தில் ஐம்பது கோடி ஜனங்களுக்குள்ள மதமாய் விடுகிறது.
* பரமாத்மா இல்லாத காலத்தில் ஜீவாத்மாக்களுமில்லை.

## 348 வது நாள்

* ஹிருதயம் சுத்தமடையாதவன், நியாயமான புண்ணிய கருமங்களைச் சிரத்தையுடன் செய்து சர்வலோக சரண்யராகிற சர்வேஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்து வரவேண்டும்.
* மாயை நித்தியமா அனித்தியமா என்று விவாதிப்பதை விட்டு மாயையை ஜெயிக்க முயலவேண்டும்.
* பிராம்மணன் அடக்கத்தினால் க்ஷத்திரியன் வெற்றியினால் வைஸ்யன் திரவ்யத்தினால் சூத்ரன் வேலைத் திறமையினால் பிரகாசமாயிருக்கிறான்.

## 349 வது நாள்

* ஒவ்வொருவனும் தன்னால் முடிகிறவரை தர்மம் யோகம் உலக உபகாரம் அஹிம்ஸை ஆசாரம் வித்தை இவைகளை வஞ்சகமின்றிச் செய்து வரவேண்டும்.
* சக்திக்குத் தக்கபடி பச்சை ஜலத்தையாவது சுடு ஜலத்தையாவது அன்போடு அதிதிகளுக்குக் கொடுப்பவன் பெரிய தர்ம பலனை அடைகிறான்.
* பூரண ஞான சக்தி என்னிடத்தில் நிரம்பியிருக்குமானால் பேசவும் இந்த நூல் எழுதியிருக்கவும் முடியாது.

## 350 வது நாள்

* எல்லோருடைய கிரகத்திலும் உத்தமன் உண்ணக் கூடாது.
* கலப்புள்ள பிரஜைகளிடத்தில் பழகக் கூடாது.
* எந்தெந்த மனோ நிலைமையுடன் ஆதியில் சாஸ்திரங்கள் எழுதப்பட்டதோ அந்தந்த மனோ நிலைமை அதைக் கற்பவர்களுக்கு அந்தச் சமயத்தில் உண்டாகிறது.

## 351 வது நாள்

* சம்பத் சக்தியாகிற லக்ஷ்மி தேவியும் வித்யா சக்தியாகிற சரஸ்வதி தேவியும் பராக்கிரம சக்தியாகிற பார்வதீ தேவியும் ஓரிடத்திலிருந்தால் உலக ஆசாரியத் தன்மையும் அரசாங்கப் பதவியும் உண்டாகும்.
* தெய்வமிருக்கிறது இருந்தாலும் இருக்கலாம் தெய்வமிருப்பதற்கு பிரமாணமில்லை பார்க்க முடியாது என்பது மீமாம்ஸக மதம்.
* ஒழிவுண்டாகாத பாப புத்தியுள்ள அற்ப மனிதனுங்கூட மரண காலத்தில் பச்சாதாபப்படுகிறான்.

## 352 வது நாள்

* மரணாவஸ்தை குடும்ப அவஸ்தை சரீர அவஸ்தை இவைகளுங் கூட ஞானத்திற்குச் சாதனங்களாகின்றன.
* ஜலத்தின் குமுழிகளை யாரும் அருந்தக் கூடாது.
* அறியாமையாற் செய்யப்பட்ட பாபத்தை தவத்தினாற் போக்கலாம். அறிந்து செய்த பாபத்தை அனுபவித்தால்தான் தீர்க்கலாம்.

## 353 வது நாள்

* உமாமஹேஸ்வரரால் உண்டாக்கப்பட்ட பெரிய ஜ்வாலையானது யானைக்கு மண்டைக் கொதிப்பாகவும் மலைகளுக்குத் தாதுவாகவும், ஜலங்களுக்குப் பாசியாகவும் பாம்புக்குச் சட்டையாகவும் ரிஷபங்களுக்கு குளம்பு ரோகமாகவும் பூமிக்கு உவர் மண்ணாகவும் பசுக்களுக்கு மாலைக் கண்ணாகவும் குதிரைக்கு கண்டத்தில் சதையடைப்பாகவும் மயில்களுக்கு மண்டை வெடிப்பாகவும் செம்மறியாட்டுக்கு பித்த விகாரமாகவும் புலிகளுக்குச் சிரமமாகவும் மனிதர்களுக்குச் சுரமாகவும் வியாபித்திருக்கிறது.
* நியாய விரோதமாகக் கேள்வி கேட்பவர்களுக்குச் சொல்லக் கூடாது.

## 354 வது நாள்

* மரியாதையின்றிக் கேட்பவர்களுக்கு எதையும் சொல்லக் கூடாது.
* வேண்டிய ஞான ரகஸ்யார்த்தங்களை ஊரார்களுக்குப் போதிக்கிறேனே தவிர என்னிடத்தில் ஒன்றுகூடக் கிடையாது.
* எதார்த்தம் சல்ப்பம் விதண்டம் என்ற மூன்று கேள்விகளில் எதார்த்தக் கேள்வி கேட்பவனிடமே ஆசாரியர் பதில் கூறுவார்.
* பிரஹ்ம ஞானத்தைப் பற்றிக் கேள்வி கேட்பவனும் பதில் சொல்பவனும் அவதார புருஷனாயிருக்க வேண்டும் அல்லது முடிந்த ஞானியாயிருக்க வேண்டும்.

## 355 வது நாள்

* சாமர்த்தியசாலிகளாலும் பண்டிதர்களாலும் பேசப்படுகிற பிரஹ்ம ஞான வார்த்தைகள் உயிரற்ற பிணத்தின்மீது அலங்கரிக்கப்படுகிற ஆடை ஆபரணங்கள் போலப் பிரகாசிக்கும்.
* சகல ஜாதி தர்மங்களும் ஆஸ்ரம தர்மங்களும் வித்தைகளும் ஞானாப் பியாஸமும் ஜீவ முயற்சிகளும் சமாதிப் பிரயத்தனமும் உலக சஞ்சாரமும் இராஜ்ய பரிபாலனமும் உபதேசங்களும் நினைப்பும் பேச்சும் அகங்காரத் தாலுண்டாகின்றன.

## 356 வது நாள்

* உலகத்தார் தன்னை மெச்சிக் கொண்டாட வேண்டுமென்று உலக வாசனையையும் ஸ்தூலசரீரம் அழகாகவும் மளமளப்பாகவும் ஆரோக்யமாகவும் இருக்க வேண்டுமென்று தேக வாசனையையும் அளவற்ற சாஸ்திரங்களைக் கற்றுப் பண்டிதனாக வேண்டுமென்ற சாஸ்திர வாசனையையும் ஞான மோக்ஷங்களுக்கு விரோதமென்று புத்திமான்கள் விட்டுவிட வேண்டும்.
* சாஸ்திரங்களை ஓர் தரம் படித்தபின் மீண்டும் படியாதிருக்கும்படி பரமேஸ்வரனைப் பிரார்த்திக்க வேண்டும்.

## 357 வது நாள்

* புத்தி விருத்தியினால் சத்துவ குணப் பசியும் இந்திரியங்களின் விருத்தி யினால் ரஜோ குணப் பசியும் சரீர விருத்தியினால் தமோ குணப் பசியும் உண்டாகின்றன.
* மனதை ஆத்மாவில் சேர்க்கக் கொண்டு போகும்போது வெகு ஜாக்ரதையாக இடைவெளி காட்டாமற் கொண்டு போக வேண்டும்.
* கீழ்ப்பட்டவர்களிடமிருந்து உயர்ந்த விஷயங்களைக் கிரகிக்கக் கூடாது.

## 358 வது நாள்

* அர்த்தநாரீஸ்வரர் சோமாஸ்கந்தர் நடேசர் விஷ்ணு ஹிரண்ய கர்ப்பர் இவர்களுக்கு உபதேச குருவின் அதிகாரத்துவம் அந்த உருவத்தில் சொந்த மாகக் கிடையாது.
* பரலோக முயற்சி விடாத பிரயத்தனம் ஞான மோக்ஷ தெய்வ நம்பிக்கை உபாயம் தைரியம் இவைகளுடன் சேர்ந்த குற்றமற்றவனது காரியங்கள் முடிவடைகிறது.

## 359 வது நாள்

* எவன் மனது கோபம் மூட்டப்பட்டும் சந்தோஷத்தையடைகிறதோ அவன் மனதிற்கு இதரர்கள் புண்ணியங்களும் வந்தடைகின்றன.
* சித்த சுத்தியானவர்கள் ஆத்ம ஞானத்தையன்றி வேறொன்றையும் ஆஸ்ரயிக்கக் கூடாது.
* மனுஷ்யத் தன்மையிலிருந்து தெய்வத் தன்மை பெற்றவன் மரணமடைய மாட்டான்.
* எமனும் மிகுந்த கோபமுடைய அந்தகனும் அளவற்ற பராக்கிரமமுடைய கால மிருத்யுவும் உத்தமமான யோகியை அடைய முடியாது.

## 360 வது நாள்

* மாம்ஸ பக்ஷணம் தைல ஸ்நானம் இவைகளை யோகி அடியோடு விட்டுவிட வேண்டும்.
* யோகியானவன் பிண்ணாக்கு நொய் யவதான்யமா ஜலங்கலந்த பால் இவைகளை உண்ண வேண்டும்.
* வருணாஸ்ரம தர்மங்களும் மற்றுமுள்ள சமஸ்த புண்ணிய கருமங்களும் சித்த சுத்தி மட்டும் செல்லுகிறது. அப்பாற் செல்ல முடிவதில்லை.

## 361 வது நாள்

* சாஸ்திர ஹிதமான ஜாதி ஹிம்ஸை தேச விசேஷத்தில் ஹிம்ஸை கால விசேஷ ஹிம்ஸை காரிய விசேஷ ஹிம்ஸை இவைகளை அனுஷ்டிக்கிறவன் மஹா விரதத்தை அனுஷ்டிக்கிறவனாகிறான்.
* ஒருவன் அடைந்த வழியில் சிலர்களோ அதிகமானவர்களோ பின்பற்றி நடந்தால் அதற்கு மதம் என்று பெயர்.
* இவ்வுலகிலுள்ள சகல பிராணிகளுடைய கதிகளையும் அறிந்து விஷயங்களில் வைராக்கியமடைந்து விட்டால் சரீரம் நீங்கிய பிறகு சந்தேகமின்றி முக்தியை அடையலாமென்று சாங்கிய மதம் கூறுகிறது.

## 362 வது நாள்

* பேசாதிருப்பது நல்லது. சத்தியத்தோடு பேசுவது இரண்டாவது நல்லது. தர்மந் தவறாது பேசுவது மூன்றாவது நல்லது. இனிமையாக பேசுவது நான்காவது நல்லது.
* குறியிலும் வயிற்றிலும் பற்றுடையவர்களையும் கடுஞ் சொல்லுடையவர்களையும் திருடர்களையும் தேவர்கள் சேர்க்கிறதில்லை.
* கோபத்தோடு செய்கிற தானம் தவம் யாகம் ஹோமம் புண்ணியம் இவைகளின் பலனை எமன் கொண்டு போய் விடுகிறான்.
* ஸ்திரீகளையும் குழந்தைகளையும் முத்தமிட்டவர்கள் மலத்தை முத்தமிட்டவர்களாகிறார்கள்.

## 363 வது நாள்

* யாரும் எவ்விடத்திலும் யாரை நமஸ்கரித்த போதிலும் தன்னையே நமஸ்கரித்துக் கொண்டவர்களாகிறார்கள்.
* சாங்கியர்கள் யோகிகள் ஞானிகள் மூவரும் பிரகிருதி வரை ஒன்றாகவே செல்லுகிறார்கள்.
* ஞான யோகத்தினால் எதார்த்த உண்மை புலப்படும்.
* யோகிகள் எதை அடைகிறார்களோ அதையே சாங்கியர்களும் அடைகிறார்கள்.

## 364 வது நாள்

* மல ஜலம் விடுகிற காலம் போஜனஞ் செய்யுங் காலம் தவிர மற்றக் காலங் களிலெல்லாம் யோகஞ் செய்யலாம்.
* தியான யோகம் ஹடயோகம் என்ற இரண்டில் தியான யோகமே சிறந்தது.
* இராத்திரியின் முன் பாகத்திலும் பின் பாகத்திலும் ஆத்மாவில் மனதை நிறுத்தி யோகஞ் செய்யலாம்.
* யாதொரு ஆதாரமுமில்லாத பிரகிருதியையே ஜெகத் காரணமென்று சாங்கியர்கள் கூறுகிறார்கள்.

## 365 வது நாள்

* பிரகிருதியையும் பரமாத்மாவையும் ஒன்றென்று கூறுகிற சாங்கிய மதத்தை வேதவாதிகள் அங்கீகரிப்பதில்லை.
* பிராணனையும் மனதையும் சேர்த்து ஆத்மாவில் அடக்குவது சிவராஜாங்க யோகம்.
* தர்மத்தை எதிர்பாராமல் பொருளை மட்டும் எதிர் பார்ப்பவர்கள் பற்பல பாபங் களுக்கு ஆளாகிறார்கள்.
* சகல யோகங்களும் வித்தையோடு முடிவடைகிறது.

## 366 வது நாள்

* பரவாசுதேவர் பஞ்சமூர்த்திகள் லக்ஷ்மி சரஸ்வதி பார்வதி கங்கை சாவித்திரி காயத்திரி காளி முருகன் கணபதி மாயா சக்தி கால சக்தி மிருத்யுதேவன் பரா சக்தி சப்தரிஷிகள் நவக்கிரகங்கள் அஷ்டவசுக்கள் அஷ்டதிக் பாலகர்கள் பஞ்ச மஹா பூதங்கள் தசாவதாரங்கள் சித்தர்கள் ரிஷிகள் ஞானிகள் பக்திமான்கள் கரும யோகிகள் பாரததேவி பூமாதேவி ஆதிசேஷன் நித்திய சித்தாதிகள் ஏகாதச ருத்ரர்கள் திக்குதேவதைகள் யோகிகள் மஹம்மேரு ஹிமவான் சப்த சாகரங்கள் துருவம் பிதுர்தேவர்கள் விஸ்வேதேவர்கள் சிருஷ்டிகர்த்தாக்கள் சப்தநதிகள் திரிமதாசாரியர்கள் சப்தகுலாசல பருவதங்கள் ஆழ்வாராதியர்கள் நாயன்மார்கள் நான்கு வேதங்கள் ஸ்மிருதிகள் ஆகமங்கள் வேதாங்கங்கள் புராணங்கள் இதிகாசங்கள் பல சாஸ்திரங்கள் கலைஞானங்கள் மனம் சரீரம் அன்னம் உலகம் மழை ஆறுகள் பருவதங்கள் ஜனங்கள் அரசர்கள் பிராம் மணர்கள் கற்புள்ள மாதர்கள் இவர்கள் அனைவர்களுக்கும் தனித்தனியாகத் தினந்தோறும் மனதிற் பூஜை செய்து நமது ஞான மோக்ஷ மார்க்கங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து வரவேண்டும்.